
# அமிர்த கங்கை




5/=

ஆவணி '86

லங்கா மில்க்பூட்ஸ் (சதொச) லிமிட்டெட்

ஜோன் ஓவர்சீஸ் லிமிட்டெட்

ஸ்தாபனங்கள் தமது தயாரிப்புகளான

## சகல பால் மா வகைகளுக்கும்

வட மாகாண ஏக விநியோகஸ்தர்களாக
எம்மை நியமித்துள்ளார்கள் என்பதை
சகல மொத்த, சில்லறை வியாபாரிகட்கும்
வாடிக்கையாளர்களுக்கும்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

## எஸ். வி. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 22564

அமிர்த

# கங்கை

அமிர்தம்: 1 கங்கை: 8

தொலைபேசி: 22437

●

தனிப்பிரதி: ரூ. 5-00

வருடச் சந்தா: ரூ. 60-00

●

விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பக்க பின் அட்டை | ரூ. | 1000-00 |
| பக்க உள் அட்டை | ரூ. | 750-00 |
| சாதாரண முழுப்பக்கம் | ரூ. | 500-00 |
| அரைப்பக்கம் | ரூ. | 300-00 |
| கால் பக்கம் | ரூ. | 150-00 |

●

குறுநாவல்,
சிறுகதை,
கட்டுரை (அறிவியல், மருத்துவம், இலக்கியம், தத்துவம், கல்வி, சமயம், வரலாறு) அனுப்ப

●

எல்லாத் தொடர்புகளுக்கும்

**அமிர்த கங்கை**
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

●

கௌரவ ஆசிரியர்:
**செம்பியன்செல்வன்**

●

அச்சும், பிரசுரமும்:
**சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்.**
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# கம்பன் என்றொரு மானிடன் விழா

**கா**லம் காலமாக இலக்கியப் பெருவிழாக்களைக் கண்டு வருபவன் கம்பன்.

கம்பனை — **கம்பராழ்வாராகவும்**, மஹாகவியாகவும், மானுடனாகவும் கண்டு இன்புறுவதனால் கம்பன் காலத்தை வென்று வாழ்கின்றான். கம்பனுக்கு அவன் காவியத்தால் கிடைத்த உயர்நிலைகள் இவை. இவற்றால் அவன் மானுடம் வாழும் வரை சிரஞ்சீவியாகவே வாழ்வான்.

தென்னகத்தைப் பொறுத்த வரையில் — கம்பராமாயணம் தெய்வ நூல்; புனித காதை; படிப்போர் பாவம் போய் புண்ணியம் எய்தும் கதை; வீடுகளில் மங்கள காரியம் நிகழ்த்தும் கதை; எனவே,

தேவ இலக்கியம்.

ஈழத்திலும் இத்தகைய பாதிப்பு இருப்பினும், கம்பராமாயணத்தை ஒரு இலக்கியப் படிகமாக — மானுட மேன்மை கூற வந்த நூலாகவே பெரிதும் கருதப்படுகிறது. இந்தப் பின்னணியில் தான் வால்மீகியும் கம்பனும் ஒப்புநோக்கப் படுகின்றனர். அதனால்,

மானுட இலக்கியம்.

மஹா விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றாக இராமாவதாரம் கருதப்படுகிறது. அவதாரம் என்பது மேலிருந்து கீழிறங்குதல் என்று பொருள். தெய்வம் மானுட நிலைக்குக் கீழிறங்கிய கதை, மஹாகவி கம்பனின் கற்பனையாற்றலால் உலக இலக்கியத்தின் கொடுமுடியையே தொட்டு விட்டது.

தெய்வமும், தெய்வீகமும் இலக்கியமாகி விடுமா? மனிதகுல வாழ்வாகி விடுமா?

கம்பனின் முக்கியத்துவம் இங்கே தான் அரும்புகட்டுகிறது. வடமொழி காவ்ய மரபினையொட்டிக் காவியம் புனையப் புகுந்த கம்பன் காவிய இலக்கணங்களுக் கூடேயும், தெய்வீக வாழ்வுகளுக் கூடேயும் மானுட நல் வாழ்க்கை என்னும் பொற்சரட்டை ஓடவிட்டிருப்பது தான் அவனை மக்கள் கவிஞன் ஆக்கியது. இதனால்தான் கம்பனை ஆராயப் புகும் எவரும் அவனில் குற்றம் காண விழைவதில்லை. குற்றமெனக் கண்ட இடங்களிலெல்லாம் அவனுக்காகப் பக்கம் சார்ந்து, பிற உயர் இலக்கியங்களிலிருந்தெல்லாம் எடுத்துக்காட்டுக்கள் எடுத்துக் கூறி தம்மையே சாந்தப்படுத்திக் கொள்கின்ற பெருமை கம்ப இலக்கியத்திற்கே உரியது.

கம்பனின் காவியத்தினைவிட, அதில் இடம்பெறும் துணைக் கதைகளும், துணைக்கதா மாந்தர்களும் — உலகின் நித்திய வாழ்க்கைப் பிரச்சனைகளையும், முரண்பாடுகளையும், ஏன் வாழ்வின் முடிச்சுக்களைக் காட்டுகின்ற வேளையில், அப்பிரச்சனைகளைக் கம்பன் தீர்த்துவைக்கும் லாகவம் அவனை உலகக் கவியாக மாற்றிவிடுகின்றது.

கம்பனின் மொழி, சந்தம், இலக்கிய வியக்தி என்பனவெல்லாம் இன்றும் புத்தம் புதியனவாக கவிஞர்களுக்குக் கைகொடுக்கின்றன. மரபுக் கவிஞர்கள் மட்டுமல்லாது புதுக்கவிதைக்காரர்கள் கூட அவனது கவிதா மேன்மையைக் கொண்டாடுகின்றனர். அவன் கையாண்ட தொண்ணூற்றாறு சந்தங்களை மீறி எந்தவொரு ஒலி ஒவியங்களும் இன்றுவரை எழுந்ததாகத் தெரியவில்லை. அவனின் 'தோழமை என்றொருசொல்' இன்று உலகப்பொது மொழியாகிவிட்டது.

இன்றைய ஈழத்து அரசியல், சமூக, பொருளாதாரச் சூழலில் கம்பனுக்காக மூன்று நாட்களை ஒதுக்கி, மக்களையும் அதில் வந்து பங்குபற்றச் செய்த அகில இலங்கை 'கம்பன் கழக' உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள். கம்பன்மூலம் தமிழை, தமிழர்களைத்தட்டியெழுப்பி வீறுகொள்ளச்செய்பவர்கள் இவர்கள். கம்பராமாயணம் என்றால் திரு. டி. கே. சிதம்பர முதலியார், காரைக்குடி கம்பரடிப் பொடி சா. கணேசன் என்று நினைவுக்கு வருவதுபோல், ஈழத்தில் திரு. இ. ஜெயராஜா, திரு. தி. நந்தகுமார், க. குமாரதாசன் போன்ற பெயர்கள் நினைவுக்கு வருவது தவிர்க்கமுடியாது.

செம்பியன் செல்வன்

**ஐ. கதை அல்ல; வரலாறு**

# இந்தச் சின்ன வேலுக்கு உந்தப் பெரிய சப்பறமா?

ஆடித் திருநாட்களில் ஒரு—

காலைப் பொழுது.

வெண்மலர் ஒன்று மொட்டவிழ்வது போல், பூமி புன்னகை பூக்க... 'வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் ஆலயமணி டாங்! டாங்...!' என ஊரைத் துயிலெழுப்பிக் கொண்டிருக்கிறது.

சிவன் கோயிலின் உட்பிரகாரத்தில் சிவப்பழமாக உடலில் திரிபுண்டரச் சின்னங்கள்... உருத்திராக்க மாலையுடன் 'சிவமொன்றே சிந்தையாக' பவ்யமாக வலம் வந்து கொண்டிருக்கிறார் வயித்தியலிங்கம் செட்டியார்.

அவர் குடும்பத்தவரால் நாட்டின் பிரதான பாதையில்.. நகரின் அண்மையில்... கற்றளிக்கோயிலென எழுந்து, எழிலார் சிற்பக் கூடமென உயர்ந்து நிற்கும் கோபுர வாசல்... உட்பிரகாரத்திலேயே தண்ணென்று இருக்கும் தெப்பக்குளம்... அதில் தவழ்ந்து உள்நோக்கி வீசும் குளிர்காற்று... கர்ப்பூர ஒளியின் வெம்மை... பூந்தாதுகளின் மகரந்தம்... 'சிவனவன் என் சிந்தையில் ஆண்டு கொண்டதனால்' மெய்மறந்து விடுகிறார். அவர் மக்களில் கணக்காளர், சிவதொண்டர்கள், ஆண்டவன் அடி பரவுபவர்கள் வயித்தியலிங்கம் செட்டியாரின் திருவாயிலிருந்து சிந்தும் வார்த்தைகளுக்காகச் செவியேந்தி உடன் நடக்கிறார்கள்.

''இன்று என்ன விசேஷம்?''

''ஐயா...! இன்று மாலை நல்லூர் கந்தசாமி கோயில் சப்பறத் திருவிழா''

''என்ன! இன்று சப்பறத் திருவிழாவா? முத்திரைச் சந்தியடியிலிருந்து ஆங்கிலேயரால் நல்லூருக்கு நகர்த்தப்பட்ட கோயிலில் இத்தகைய விழாக்கள் உடனேயே நடக்கத் தொடங்கியமை தமிழ் மக்களின் முருகபக்தியைத்தான் காட்டுகிறது. என்ன இருந்தாலும் யாழ்ப்பாணப் பெருமக்கள் கந்தப்புராண கலாசாரத்தை ஒருபோதும்... எந்த இடர்பாடு தோன்றினும் விட்டிடார்...''

''ஓம் ஐயா!''

''நாம் இன்று கட்டாயம் சப்பறத் திருவிழாவுக்குப் போவோம். அதற்கு வேண்டியபடி வில்லு வண்டியை ஆயத்தம் செய்யுங்கள்'' —யாரோ வண்டில்காரனுக்கு அப்பொழுதே சொல்லிவிட ஓடினார்.

''கணக்குப்பிள்ளை! எங்கள் சிவன் கோயில்காணிகள் நல்லூரைச் சுற்றி இருக்கல்லவா...?''

''ஓம் ஐயா! வேலணைக்காரர் ஈட்டுக்கும் விலைக்குமாக எங்களிடம் கொடுத்த காணிகள் அவை... அவற்றுள் பெரிய அரங்கணக்கைக் காணியும் மற்றப் பிரிவுகளும் இண்டைக்கெல்லாம் சிவன் சொத்துத்தான்...''

''நீரும் இண்டைக்கு சப்பறம் பார்க்க என்னுடன் வருகிறீர்.''

''நல்லது ஐயா!''

## 2

மாலையில் நல்லூர் குடிமனைகள் தேங்காய் நெய் திருவிளக்குகளாலும், மண்ணெய் விளக்குகளாலும், தெருக்கள்... சந்திகள் கண்ணாடிக் கூண்டு விளக்குகளாலும் தேவ புரியில் கண்ணயரும் முருகக் குழந்தையாகிக் கிடந்தது.

கந்தசாமி கோயில் கிழக்கு நோக்கி தெற்கே ஆறுமுக சாமி வாசல் கொண்டதாக கிழக்கு மேற்காக நீண்டு கிடந்தது. வெளி வீதியெங்கும் வாழைத் தண்டு விளக்குகளும் தீப்பந்தங்களும் ஒளியூட்டிக் கொண்டிருந்தன. வெளிவீதி புதுமணல் பரப்பி நீர் தெளித்து இருந்தது. வானக் குடையின்கீழ், குளிர் தென்றல் பவனிவர முருகன் சிறுவேலாய் தன் முன் நின்ற சப்பறத்தை நோக்கிச் சென்றான்.

முருகா... ஓம்முருகா... ஹர.. ஹர முருகா...

நாமாவொலிகள் நாஸ்திகன் உள்ளத்தையும் நனைத்திடும் சக்தி பெற்றிருந்தன.

வயித்தியலிங்கம் செட்டியார் தம்மை மறந்தார். தன் நாமம் கெட்டார். எண்ணங்கள் மன வெளி கடந்து எங்கோ எங்கோ போய் ஒடுங்கின. நிர்ச்சல சமாதியாகி விட்டார். பேரின்பத்தில் 'ஒன்றி விட்டார்'. வியந்தாரோ... விழித்தாரோ?... முருகன் அவனை யாட்டோ?

உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"இந்தச் சின்ன வேலுக்கு உந்தப் பெரிய சப்பறமா?"

ஒரு கணம் தான் அந்தச் சிந்தனை மனவெளியி னூடே மின்னலடித்துச் சென்றது.

ஆ! ஈஃதென்ன? ஆச்சரியம்!... ஆ ச் ச ரி ய ம்! அற்புதம்...

வயித்தியலிங்கம் செட்டியார் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தார்.

சப்பறப் படலே —பென்னம் பெரிய வேலாகக் காட்சியளித்தது.

செட்டியார் மீண்டும் மீண்டும் பார்தார்.

வேல் — சப்பறப்படலளவில் விஸ்வரூபக் காட்சி யாக...

செட்டியார் மனவெளிப்பரப்பில் சிறு புள்ளாகி... எங்கோ எங்கோ பேரின்பக்கீதமிசைத்தவாறு... முடி வும் தொடக்கமுமில்லாத பயணத்தில்...

சப்பறம் பேரோசையுடன், பலத்த குலுக்கலுடன் புறப்பட்டது. அதில் அவரின் சித்தலயம் கலந்தது...

"என்ன... என்ன... ஏன் இந்த அபசாரச் சிந்தனை எனக்கு ஏற்பட்டது...?" — சப்பறத்தின் பின்னே, மந்திரத்தால் கட்டுப்பட்டவர் போல...

திரும்புகையில் வில்லு வண்டியின் ஜல் ஜல் சப் தத்துடன், அவரின் சிந்தனையும் ஒலியெழுப்பிக் கொண் டிருந்தது.

## 3

யார் இந்த வயித்தியலிங்கம் செட்டியார்?

1800 ஆம் ஆண்டளவுகளில் இன்றைய, வண் ணார்பண்ணைப் பகுதிகளில் பெருமளவு வாழ்ந்து வர்த் தகம் செய்து கொண்டிருந்தவர்கள் — தென்னிந்திய நாட்டுக்கோட்டை, காரைக்குடிப்பகுதி செட்டிமார் கள். அலுப்பாந்தி, பண்ணைத்துறை அராலித்துறை ஆகிய இடங்களில் பல கிட்டங்கிகளை அமைத்து ஈழத் துக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையில் வர்த்தகத் தொண்டிலீடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது—

வயித்தியலிங்கம் செட்டியார் சிறு பாலகன்.

ஒரு நாள் அவரும், அவர் வயதையொத்த நண் பர்களும் சிவன் கோயிலடியில், தெருவீதியில் விளை யாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அப்போது வேக மாக வந்த குதிரைகள் பூட்டப்பட்ட கோச் வண் டியைக் கவனிக்கவில்லை. எல்லாச் சிறுவர்களும் பதறி ஓடி விட, வயித்தியலிங்கம் செட்டியார் பயப்படாத துடன் அந்தக் குதிரை வண்டியை வேடிக்கை பார்க் கவும் தொடங்கி விட்டார். மக்கள் எல்லாரும் என்ன, ஏது செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ற னர். காரணம்—?

அந்தக் கோச் — வேறுயாருடையது மல்ல.

அப்போதைய ஏஜெண்டுத் துரையினுடையது.

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஏசெண்டுத் துரையையும், துரைசானியையும் ஏற்றிக் கொண்டு வந்திருந்தது.

இருவரும் கோச்சைவிட்டு இறங்கினர்.

வயித்தியலிங்கம் செட்டியாரின் அழகு, துணிச் சல், பருவம் எல்லாம் அவர்களைக் கவர்ந்து விட்டது.

பாவம்! அவர்கள் குழந்தைப் பேறு அற்றவர் கள்.

"யார் குழந்தை" என விசாரித்து அவரின் வீட் டிற்குள் நுழைந்தனர்.

முடிவு-?

வயித்தியலிங்கம் செட்டியார் கோட்டைவாசி யாகி, ஏசெண்டுத்துரையின் சுவீகாரப் புத்திரனுனர். அதன்விளைவு-?

மன்னரில் முத்துக்குளிக்கும் அதிகாரத்தை வயித்தி யலிங்கம் செட்டியார் குடும்பம் பெற்றது.

அவர்கள் குடும்பத்தில் செல்வம் கொழித்தது. வியாபாரம் படர்ந்தது. காணிகள் மீது கடன், வட்டி கொடுத்தல் என செல்வம் குவியலாயிற்று. வண்ணர் பண்ணையில் அவர்கள் குடும்பம் தலைமைக் குடும்பமா யிற்று.

சிவன் கோயிலும் எழுந்தது.

ஏசெண்டுத்துரையின் பதவிக்காலம் முடிய அவர் ஆங்கில நாடேக, வயித்தியலிங்கம் செட்டியார் மீண் டும் தன்சனம் சாதிகளோடு வசிக்க வந்துவிட்டார். இந்தப் பின்னணியில்தான்—

நல்லூர் கந்தசாமிகோயில் அனுபவம் அவருக்கு ஏற்பட்டது....

## 4

அன்றிரவு.

அவருக்கு நீண்டநேரமாக உறக்கம் பிடிக்கவில்லை. படுக்கையில் கிடந்து புரண்டுகொண்டிருந்தார். எப் பொழுது உறங்கினரோ தெரியவில்லை. கனவில் மீண் டும் முருகன் தோன்றினன்.

வானளாவிய வேல் தங்கப்பிழம்பாக... ஜெக ஜோதியாக.

படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தார்.

உடலெலாம் வியர்வை வெள்ளம்.

மீண்டும் படுக்க முடியவில்லை.

ஒரே சிந்தனை.

முருகனுக்கு அபசாரம் செய்துவிட்டேன். சிவனுக்கு கோயில்கட்டினேன். குழந்தையை ஏளனமாக எண்ணி விட்டேனே? முருகன் என்னை எதற்காகவோ.... கட்டளையிடுகிறுன். சிவன் என் அப்பனும் உடந்தையா?... இதற்கு ஏதேனும் செய்தேயாகவேணும்... ஆமாம்... அப்பனுக்கு ஆலயம் அமைத்தால் அருமைமைந்தனுக்கு நிலமாமவது வழங்க வேண்டாமா... அதுதான்சரி...''

## 5

விடிந்தது.

அதி விடிகாலையிலேயே அவரின் வில்லுவண்டி, நல்லூர் கந்தசாமிகோயில் மணியம் மாப்பாண முதலியார் வீட்டில் போய் நின்றது.

"எந்தச் சப்பறத் திருவிழாவைப்பற்றி ஏளனமாக எண்ணினேனுே அந்தச் சப்பறத்திருவிழா என் மூலமும் என் சந்ததி மூலமும்தான் இனி நடைபெற வேண்டும்.'' —என்று அவர் கேட்டுக் கொண்ட பொழுது மாப்பாண முதலியார் திகைத்து விட்டார். அன்று எழுதிக் கொடுத்த உறுதியின் பிரதிதான் இது—

*1 பி $\frac{10}{2}$ 31*

## மாப்பாண முதலியார்

ஶ்ரீ அநயகம் ஆண்டு அற்பசி மீ உயகதீ 1830 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி வண்ணுர்பண்ணை செட்டி வயித்தியலிங்கம் செட்டியார் கோபால செட்டியார் அவர்களுக்கு நல்லூர் கந்தசாமியார் கோயில் மணியம் மாப்பாண முதலியார் உடன்படிக்கைக் கடதாசி முடிப்பித்துக்கொடுத்ததாவது: வேலணை மேற்குஊர்க்குரைக்குச் சேர்ந்த திருவெங்கடஞ் செட்டியார்... சிற்கொண்ட அரங்கணக்கையும், மறு பிரிவுகளும் கொள்விலைஞாண்டு எஸ்திருக்குச் சொந்தக் காணி அடங்கலும் இவர்நல்லூர் கந்தசாமியார் கோவிலில்இவர் பெயருக்கு நடந்து வருகின்ற இரஷப வாகனத் திருநாளுக்காகத் தந்திருக்கிறபடியால், வருஷந் தோறும் ஆடி மீ உச்சவத்தில் இடப வாகனத்திருநாளையிச் சிலவுக்குத் திருமாலை, திருவிளக்கு அபிடேகம், ஆசீர்பாதம் இது முதலான சகல சிலவுகளுக்கும் மேற்குறித்திருக்கிற காணியிற் புரோசனத்தைக் கொண்டு இவர்கள் புத்திர பௌத்திர பரம்பரைக்கும் எங்கள் புத்திர பரம்பரைக்கும் இவர்கள் பிள்ளை குடிகளை அழைத்து வைத்து அன்றையத்தினம் நடப்பித்துக் கொள்ளும் படிக்கும் உடன் படிக்கைக் கடதாசி முடிப்பித்துக் கொடுத்தேன். கோபால செட்டியார் அவர்களுக்கு மாப்பாண முதலியார் ஓம். இதற்குச் சாட்சி வண்ணுர்பண்ணை செட்டி. கந்தப்பச்செட்டி பொன்னுச்சாமி செட்டியார் அவ்வூர் செட்டியார் மாடன்செட்டியார், சரவணமுத்து நல்லூர் வெள்ளாளர் முத்துக்குமாரு சண்முகம் இவர்கள் சாட்சியாக இந்த உடன்படிக்கையெழுதினது.

ஒப்பம். மாப்பாண முதலியார்.
சாட்சி (ஒப்பம்.) பொன்னுச்சாமி.
விநாயகமூர்த்தி, சண்முகம்
சரவணமுத்து.

## பின்னுரை

இன்று பல வழிகளாலும் — சமயம், நிர்வாகம், பாதுகாப்பு வரலாறு, சமூகம் — முக்கியத்துவம் பெற்று வருகிறது. நல்லூரும் அதன் சுற்றுப் பகுதியும் சில சமயங்களில் மீண்டும் ராஜதானியாகிவிடக் கூடிய சூழலில் — அவை பற்றிய ஆய்வுகள் அவசியமல்லவா? அதே போன்று வர்த்தகம் பற்றிய மதிப்பீடுகளும் முக்கியமல்லவா?

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள அரங்கணக்கையும் மறு பிரிவுகளும் எவை? வண்ணுர்பண்ணைச் சிவன் கோயிலுக்கும், நல்லூர்க் கந்தசாமிக் கோயிலுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது? அன்று வழங்கப்பட்ட காணிகளுக்கும், இன்று மாநகரசபை விருத்திக்குப் பயன்படும் காணிகளுக்கும் உள்ள பிணைப்பு என்ன? நல்லூர்ப் பகுதியில் வேலணை மக்கள் எவ்வாறு பெருந்தொகையினராக வாழ்ந்தனர்? செட்டிமார்களும் தென்னிந்திய வர்த்தகம்? ஆங்கில ஏசெண்டாரும் தமிழ் மக்களும் கொண்டிருந்த உறவு — பற்றி வரலாற்று, சமூகவியல் பேராசிரியர்கள் இக்கால கட்டத்தில் ஆய்வு நடத்த வேண்டும் என்பதே எம் அவா.

— செம்பியன் செல்வன் —

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

நோத் தேசாதிபதி காலத்திற்றான் இலங்கைச் சனங்களுக்குச் சமய சுதந்திரங் கொடுக்கப்பட்டது. எல்லாச் சமயத்தவருந் தத்தமக்குத் தேவையான கோயில்களைக் கட்டித் தங்கள் தங்கள் பிரியப்படி நித்திய நைமித்திகங்கள் செய்யத் தொடங்கினர். கொட்டில்களிலும் வீட்டுச்சார்களிலுமிருந்த சைவ மதக் கோயில்கள் தலை நீட்டத் தொடங்கின. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கி. பி. 1793-ல் சில பிராமணருடைய விண்ணப்பத்தின் பேரில் கட்டுவதற்கு இடங்கொடுக்கப்பட்டதென முன்னதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கோயில் ஆங்கிலேயர் காலத்திற்றான் பெரிதாகக் கட்டப்பட்டது.

இக்கோயிலிருக்கிற இடத்துக்கருகே அநேக முஸ்லீம் குடிகள் இருந்தனவென்றும், அவர்கள் தங்கள் காணிகளை விலைக்குக் கொடுக்க மறுத்தபடியால், கிணறுகளில் பன்றி மாமிசங்களைப் போட்டு அனுசாரஞ் செய்யவே, அவர்கள் குடியெழும்பி நாவாந்துறைக்குப் போனார்களென்றும் ஒரு கன்னபரம்பரையுண்டு. பின்பு கோயிலைப் பெருப்பித்துக் கட்டும்பொழுது அங்கிருந்து இறந்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு முஸ்லீம் பெரியாருடைய சமாதி அக்கோயிலின் உள்வீதிக்குள் அகப்பட்டபடியால், அதையிட்டு முஸ்லீம்கள் கலகஞ் செய்தனரென்றும், பின்பு கோயில் மேற்குவீதியில் வாயில் வைத்துக் கொடுத்துச் சமாதியையணுகி அவர்கள் வணங்கிவர இடங்கொடுத்ததால், கலகம் ஒருவாறு தணிந்ததென்றுங் கன்னபரம்பரை. அதற்குச் சாட்சியாக அவ்வாயிற் கதவு இன்றுமிருப்பதும் அதனருகே வெளிப்புறம் பந்தலிட்டுச் சிலகாலத்தின் முன்வரை தொழுகை நடத்தி வந்ததும் அக்கன்னபரம்பரையை வற்புறுத்தும்.

கி. பி. 1805-ல் சுப்பையர் என்னும் வேதியரொருவருக்குக் கண்டிகை வரிசையுடன் இக்கோயிற் குருக்களென்னும் நியமனப்பட்டோலையொன்று தேசாதிபதியின் கைச்சாத்துடன் கொடுக்கப்பட்டது. 1807-ல் கணபதி ஐயருக்கும் இராமசாமி ஐயருக்கும் இக்கோயிற் குருக்களென்னுமதிகாரங் கிடைத்தது. 1807-ல் கச்சேரிச் சிறுப்பராயிருந்த மாப்பாண முதலியாருக்கும் பிரதமகுருக்களுக்கும் கோயிலையிட்டு விவாதமுண்டாகவே யாழ்ப்பாணச் சுப்ரீங்கோட்டுக்கு வந்த முதல்நீதிபதி ஸேர் அலக்ஸான்டர் ஜோன்ஸ்ரன் (Sir Alex Johnstone) என்பவர் விசாரித்துச் செய்த தீர்ப்பின்படி, களஞ்சியத்திறவுகோலை இரண்டாக்கி ஒன்று குருக்களிடத்திலும், மற்றொன்று மாப்பாண முதலியாரிடத்திலுமிருக்கவேண்டுமென அரசினர் கட்டளைசெய்தனர். 1810-ல் மாப்பாண முதலியார் கொடுத்த பெட்டிசத்தை விசாரித்த கறிங்ரன் (Carrington) என்னுங் கலக்டர், இம்மாப்பாண முதலியாருடைய தகப்பனே இக்கோயிலைக் கட்டுவதற்கு முக்கிய காரணமாயிருந்தமையால் இவரே இக்கோயிலதிபதித்துவம் பெறுதற்குரியவரென்று அரசாட்சியாருக் கறிக்கைசெய்தும், முன்போலவே இருவரிடத்தும் ஒவ்வொரு திறவுகோல் இருக்கவேண்டுமென்று பழைய தீர்ப்பின்படியே அரசினர் உத்தரவு செய்தனர்.

கி. பி. 1811-ல் கச்சேரியில் காசு குறைந்ததென்னுங் காரணத்தால் மாப்பாணர் சிறுப்பு வேலையால் விலக்கப்பட்டார். விலகிய சில நாட்களுள் அவர் இறந்திருக்கவேண்டும். அவருக்குப் பின் அவர் மருமகனாகிய சின்னத்தம்பி யென்பவர் கோயிலதிகாரத்தையேற்றார். பின்பு சிறுப்பு மாப்பாணருடைய பேரனாகிய மாப்பாண முதலியார் அதிகாரியாயினர்.

1807-ல் தீவாந்தர தண்டனையடைந்து மலாக்காவுக்கு அனுப்பப்பட்டு, 1812-ல் மன்னிக்கப்பட்டுத் திரும்பிவந்த வில்லவராய முதலியாரும் பெரிய தாமோதரம்பிள்ளையும் பிராமணர் பக்கஞ்சார்ந்து மாப்பாண முதலியாருக்கு மிகவும் இடர் விளைத்தனர். அதுபற்றி மாப்பாண முதலியார் 1819-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், அவர்கள் தனக்குச் செய்யும் இடையூறுகளைப்பற்றி பிறௌண்றிக் (Brownrigg) தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்தனர். அதனை அவ்வூர்ச் சர்வாதிகாரி (கலக்டர்) யே கவனித்து அதற்கு வேண்டிய நீதி செய்ய வேண்டுமென்று தேசாதிபதி கட்டளையிட்டார். கலக்டர் செய்த நீதி இன்னதென்று தெரியவில்லை.


முதலியார்
**செ. இராசநாயகம்**

கி. பி. 1851ல் கோயில் அருச்சகர்களாயிருந்த பிராமணர், தேசாதிபதியின் கைச்சாத்துடன் தங்கள் முன்னோருக்கு அதிகாரச் சீட்டுக் கொடுத்திருந்ததென்றும், தங்களுக்கும் அவ்வித சீட்டுக் கிடைக்கவேண்டுமென்றும் தேசாதிபதிக்கு விண்ணப்பித்தனர். அதற்குக் கண்டி ஆதீன புத்த கோயில்களிலுள்ள குருமாருக்கன்றிப் பிராமணருக்கு அவ்வித சீட்டுக் கொடுப்பதில்லையென்றும், அவர்களுக்குள் வியாச்சியமிருந்தால் டிஸ்திரிக் கோட்டில் வழக்குத் தொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அரசாட்சியார் உத்தரவிட்டனர். அப்படியே வழக்கு வைக்கப்பட்டது. உடனே அக்காலத்திலிருந்த கோயிலதிகாரியாகிய இர

குநாத மாப்பாண முதலியார், பிராமணருக்கு அவ்வித அதிகார நியமனம் கொடுப்பதற்கு அரசினர்க்கு எவ்வித சுதந்தரமுமில்லையென்றும், உளதேல் அரசினரே அதனை வெளிப்படுத்த வேண்டுமென்றுந் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தனர். டயிக் ஏசண்டர் அவ்விண்ணப்பத்தைப்பற்றி விசாரித்துச் செய்த அறிக்கையினால் அரசாட்சியார் அக்காரியத்திற் பிரவேசியாது நெகிழவிட்டனர்.

கி. பி. 1873ல் கந்தையா மாப்பாணர் அதிகாரியாயிருந்த காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் அக்கோயிற்றிருப்பணியைக் கருங்கல்லாற் கட்டும் விருப்பினராய், அஃதோடு கோயிலாதீனம் ஊரவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சபையால் நடத்தப்பட வேண்டுமென்னும் நோக்கமுடையவராய், அவ்வருடம் தை மாசத்தில் அக்கோயிலில் மகாசபை ஒன்று கூட்டிப் பிரசங்கஞ் செய்து ரூபா 6000வரையில் கையொப்பமுஞ் சேர்த்தனர். ரூபா 3000 வரையிற் செலவுசெய்து கருங்கற்களும் எடுப்பிக்கப்பட்டன. ஆனால் தேர்த்திருவிழாவுக்கு முதனாள் செய்துவருகிற ஆட்டுக்கொலையை இனிமேல் அவ்வாறு செய்வதில்லையென்று நாவலருக்கு முன் செய்து கொடுத்த பிரதிக்கினைக்குமாறாகப் பின்னும் அக்கொலை நடந்தபடியால், நாவலர் அவர்கள் கோபித்து, 1876-ம் ௵ மார்கழி மாசம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் ஒரு மகாசபை கூட்டி, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலதிகாரியை விலக்குவதற்கு ஒரு வழக்குத் தொடரவும், பின் அக்கோயிலை ஒழுங்காய் நடத்துவதற்குமாக, ஒரு சபை அக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்ட சபையார் கோயிலதிகாரிமேல் வழக்குத் தொடர்ந்தனர். அது விளக்கத்துக்கு வருமுன் நாவலரவர்கள் தேகவியோகமாயினர். 1929-ம் ௵ ஜூன் ௴ 10ந் உ இக் கோயில் பொதுவென்றும் கோயிலதிகாரி கோட்டுக்குக் கணக்குக் காட்ட வேண்டுமென்றுந் தீர்ந்த டிஸ்திறிக்கோட்டுத் தீர்மானம் நாவலர் அவர்கள் தொடங்கிய வழக்கின் பெறுபேறேயாகும்.

எமது தேசத்திலே மூலைக்குமூலை பல கோயில்கள் பெரும் பொருள் செலவு செய்து கட்டப்பட்டு பூசைக்கு வழியின்றியும், பூசைக்கு வழியிருந்தால் நடத்துமதிகாரியின்றியும் நடத்துமதிகாரியிருந்தால் எனதுனதென்று வழக்குப் பேசியும், வழக்குச் செலவாற் கோயிற்பொருளும் கைப்பொருளும் இழந்தும் இப்படியே பல கேடுகள் அடைந்து அல்லலுறும் கோயில்கள் மிகப்பல. பெரும்பான்மை எக்கோயில்களுக்கும் பொருள் பண்டம் பூமி முதலியன இல்லாதிரா. ஒரு கிராமத்தில் ஒரு கோயிலிருந்தாற் போதுமானது. அக்கோயிலுக்கும் ஆடம்பரச் செலவுகளை யொழித்து, ஆகமவிதிப்படியுங் காலரீதிக்கேற்றபடியும் நித்திய நைமித்திகங்களை வைத்து நடத்தினால் போதுமானது.



டாக்டர்...டாக்டர்... நீங்கள் தந்த தண்ணி மருந்து முழுவதையும் பிள்ளை 'குடிச்சிட்டான்...

(ஏதோ நினைவாக) பரவாயில்லை; கிணத்தில நிறையத் தண்ணி கிடக்கு.

—புவனி

## பட்டுத் தம்பி

பட்டுத்தம்பி! பட்டுத்தம்பி!!
பட்டுச் சட்டை போட்டுக்கொண்டு
பவளவாயில் சிரிப்பைச் சிந்திப்
பாடம் படிக்கப் பள்ளிக்குப்போ.

பள்ளிக் கூடம் விட்ட பின்பு
துள்ளி நீயும் விளையாடு
மாலை முழுதும் விளையாடு - உன்
மனம் குளிரும் வரையும் விளையாடு.

பொய்களவு பேசாதே - நீ
பொல்லா உறவை நாடாதே.
கள்ளம் இல்லா உள்ளம் தான்
கடவுள் வாழும் இல்லமடா.

அன்பு ஒன்றே பெரிதாகும் அதனால்
அனைவர் இதயமும் ஒன்றாகும்
அன்பு வழியில் நீ நடந்தால்
அறமே அகிலத்தில் உருவாகும்.

— "தமிழ்ச் செல்வி" —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தமிழ் மன்றம்
நடாத்திய

# குறு நாவல் போட்டி பரிசு நாவல்

## 'ஸ்வாதி'

## நிகழ்வுகள், நிகழ்தகவுகள் அல்ல...

### 1

"கவனம் ராசா! வழியில... அங்க இருந்து வாற வாகனக்காரரிட்டக் கேட்டுக், கேட்டுக் கொண்டு போ அப்பு. இருந்திருந்தாப் போல துவங்கும். நல்லூரானைக் கும்பிட்டுக் கொண்டு போனை." வழிக்கு வழி அம்மா சொல்லியனுப்பியது தான் இன்னும் காதுக்குள் கேட்டுக்கொண்டிருந்தது. சட்டைப் பையில் 'அடையாள அட்டை, பத்திரமாக இருப்பதை கை அடிக்கடி தொட்டுப் பார்த்து உறுதிப் படுத்திக் கொண்டிருந்தது.

நேரம் காலை மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது. "போம்...போம்" இரண்டு முறை ஹோர்னை அடித்துக் கொண்டு பஸ்ஸை "ஸ்டாட்" பண்ணினான். கிளீனர் பிரயாணிகளின் டிக்கட்களைப் பரிசோதித்துவிட்டு 'ரைட்' சொன்னான். கொழும்பை நோக்கித் தனது பிரயாணத்தை அந்தச் சொகுசு சேவை பஸ் ஆரம்பித்து விட்டது.

பிரயாணிகள் அமைதியும் அமைதியில்லா நிலையிலுமிருந்தனர். பெருமூச்சுகளும் 'அப்பாடா'க்களும்



பெரும்பாலானோரிடமிருந்து வெளிப்பட்டன. "ஒரு ஆபத்தும் இல்லாமல் கொழும்பு போய் சேர வேண்டுமே', என்ற ஒரு பிரார்த்தனை தான் எல்லோரிடமும்ஏகோபித்த நிலையிலிருந்தது.

"ம்...பஸ் ஏறியாச்சு. இனிப் பத்துப் பதினைஞ்சு இடத்தில ஏத்தியிறக்கப் போயினம். இங்கயும் தப்பி, வழியில மற்ற ஆபத்துக்களிலயும் தப்பி... சேச்சே! கொழும்பு போய்ச் சேருமட்டும் பெரிய இலுசுகேடு" ஒரு பிரயாணி அலுத்துக் கொண்டார்.

"முந்தின காலமெண்டா... கொழும்புக்குப் போறதே ஒருபெரிய சந்தோஷம் தான். இப்ப... அப்பிடியே? நரக லோகத்துக்குப் போற மாதிரியெல்லோ போறம்" இன்னொருவர் ஆதங்கப்பட்டார்.

பயணிகளின் சம்பாஷணையைக் கேட்டுப் புன்னகைத்தான்.

"நாட்டில் எவ்வளவோ மாற்றங்கள் தான்."

பஸ் தனது ஓட்டத்தில் வேகத்தைச் சேர்த்துக் கொண்டது. சக்கரங்களுக்கடியில் தார்வீதி வழுக்

கிக் கொண்டு போகிறது. வழக்கத்துக்கு மாறாக - அவன் மௌனமாக வருவது கிளீனரான தேவராசாவுக்கு அதிசயமாக இருந்தது. அலுப்பாகவுமிருந்தது.

"என்னண்ணை இண்டைக்கு ஒரு மாதிரியா இருக்கிறியள்? கிளிநொச்சி வர இன்னும் கனதூரமிருக்கெண்டு அலுப்பா இருக்கே?" சிரித்தபடி, குறும்பாகக் கண்டித்த தேவனைப் பார்த்து வரட்சியாகப் புன்னகைத்தான் அவன்.



(கோபத்துடன்) இதென்ன.. கோப்பியா... டீயா?... கழுதைக்குப் போட்டது போல (எரிச்சலுடன்) அப்படி யார் சொன்னது?... அது கழுநீர்....

—தேனீ

"தேவன்! எனக்கென்னவோ இண்டைக்கு மனம் சரியில்லாமலிருக்கடா. ஏனெண்டு தெரியேலை. குடும்பப் பிரச்சினையளாலேயோ- இல்லைக் கனநாளைக்குப் பிறகு கொழும்புக்கு பஸ் ஓடுறதாலேயோ மனம் குழம்பியிருக்கெண்டு விளங்கேலை. உனக்குச் சொல்லாத விஷயமே. நேற்று எங்கட வீட்டில ஒரே அமளி. அது இருக்கட்டும்... நீ என்ர தங்கச்சின்ர விஷயம் கேள்விப்பட்டனியே?"

"ஓம்... கேள்விப் பட்டன். அதுக்கென்ன இப்ப?"

"அதுக் கொண்டு மில்லையடா... இவ்வளவு நாளும் மூத்தக்காவுக்குக் கலியாணம் பேசி ஒண்டும் சரிவராம இப்பதான் ஒருமாதிரி ஒரு சம்பந்தம் முற்றுக்கினது. அந்தப் பகுதியார் சரியாச் சாதி பாக்கிறவை. எங்கட ஐயா பகுதி கொஞ்சம் குறைஞ்சவையெண்டு முதலில முணுமுணுத்தவை. அந்த முணுமுணுப்பை அடக்க சீதனத்தில இன்னும் பத்தாயிரம் கூடத் தாறதாகச் சொல்லி சரிப்படுத்தி வைச்சிருந்தம். இது கிடக்க இடையில சின்னக்காவுக்கும் வலிய ஒரு சம்பந்தம் வந்திருக்கு. சீதனமெண்டு வாய் விட்டுக்கேக் காட்டியும் 'அதுமாப்பிள்ளைக்கு; இது பொம்பிள்ளைக்கு' எண்டு ஒவ்வொரு இட்டம் சொல்லினம். எவ்வளவு. கேட்டாலும் எனக்குப் பரவாயில்லை. என்ர சகோதரங்களை நல்ல படியாக் கரை சேத்திட்டனெண்டால் அதுவே எனக்கு பெரிய நிம்மதி. ஆனல் ரெண்டு கலியாணத்தையும் ஒரேயடியா நடத்திற அளவுக்கு ஐயா என்னத்தைச் சேத்து வைச்சார்? எதுக்கும் நான் வெளியில போனத் தான் எல்லாம் ஒரு மாதிரி நல்லா முடியும்" பெருமூச்சுடன் கூறியபடி பின்னல் வந்த லொறிக்கு 'சைட்' கொடுத்தான்.

"அது சரியண்ணை. இதுக்கும் உங்கட தங்கச்சின்ர விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்?" தேவனுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவன் தேவனை விட மூன்று வயது மூத்தவன். அவனைப் போல் தேவனுக்குப் பொறுப்பென்று குடும்பத்திடம் இல்லைத்தான். ஆனல் அவனைப் போன்றவர்களின் பொறுப்புகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பாரிய பொறுப்பை நிறைவேற்றத் திடம் பூண்ட தோழர்களில் ஒருவனகத் தன்னைத் தேவன் புடம் போட்டு நீண்ட நாட்களாகி விட்டது. தேவனைப் போல்- எத்தனையோ இளைஞர்களைப் போல் அவனுக்குக் கூடத் தன்னுடைய ஆக்ரோஷமான உணர்ச்சிகளுக்குப் பதிலளிக்க- தோழர்களோடு தோழர்களாக- அட்லீஸ் தொண்டனகவாவது சேர்ந்து அந்தப் புரட்சிப் பாதையில் போக விருப்பம் தான்.

பூட்டியிருக்கும் அடிமை விலங்குகளை அறுத்தெறிய அவனுக்கும் துடிப்புத்தான்.

பிறந்த மண்ணில் தனது இரத்தச் சொட்டுகளை விடுதலைக்குரமாகச் சிந்த அவனும் தயார்தான்.

குருதித் துளிகளை போராட்டத்துக்காக, தன்னுடலில் சேர்த்து வைக்க அவனுக்கும் ஆவேசம்தான்.

ஆனல்...

அவனுக்கும் போராளிகளுக்கு மிண்டியில் வெளியாக... நிரந்தர ஆஸ்துமா நோயில் படுக்கையிலிருக்கும் அம்மா- தையல் இயந்திரத்தோடு இயந்திரமாக, 'தனக்கு ஏது எதிர்காலம்' என்ற ஏக்கச் சலிப்போடு, குடும்பத்துக்காகவே ஒவ்வொரு விஞடியும் ஓடாகத் தேய்கிற மூத்தக்கா- கிடுகுகளோடும், சமையலறைப் பாத்திரங்களோடும் வாழ்க்கை நடத்தும் சின்னக்கா- படிப்புக்கும், எதிர்கால வாழ்க்கைக்கும் ஒளிதர அண்ணன் இருக்கின்றன் என்று கவலையை மறந்த தங்கை- குடும்பத்தைப் பார்க்க அண்ணன் இருக்கின்றன் என்ற துணிவில் போராட்டப் பாதையில் உயிரிழந்த மூத்த தம்பி - அதே வழியில் மூத்த தம்பியின் பயணத்தைத் தொடர சொல்லாமல் கொள்ளாமல் சென்றுவிட்ட பதினன்கு வயதுகூட நிரம்பாத சின்னத்தம்பி எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றிய பின் தனக்கு வாழ்வு தர வருவான் என்று எதிர்பார்ப்பில் காத்திருக்கும் அந்தப் பேதை.

ஓ! அது ஒரு பெரிய வேலிதான்.' குடும்பமா? பிறந்தமண்ணு?' என்று மற்றவர்கள் வாய்ச்சவாடல் அடிக்கலாம். ஆனல் தனது ஒவ்வொரு கடமைகளையும் முழுவதுமாகப் புரிந்துகொண்ட அவனல் அந்த வேலியைக் கடந்து போக முடியாது; முடியவில்லை. அவனைப் பொறுத்தவரை அவனுக்கு அவனுடைய குடும்பத்துக்கும், அவனே நம்பியிருப்பவளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் தான் விஸ்வரூபமாகத் தெரிந்தன. அதுதான் அவனுடைய தற்போதைய முக்கியங்கள். பிறந்த

மண்ணுக்கு என்ன செய்தேன்?, என்று தோன்றும் போது சாப்பாட்டுப் பொட்டலங்களாலும், அடிக்கடி சில சில்லறைகளைப் போராளிகளின் உண்டியலில் அகதிகளுக்காகப் போடுவதிலும் அந்தக் குறையை ஆற்ற நினைத்தாலும் 'இதுவே போதுமா?' என்று தனக்குள் ஒரு உணர்வு மறுகும் போது - அதை அடிக்கடி வேதனையுடன் தாங்கிக் கொள்வான்.

''ம்... பஸ் துள்ளத் தொடங்கிட்டுது. நாவற்குழி வந்திட்டுது'' முகாமுக்கான வீதித்தடைகளில் பஸ் மேலேறிக் கீழ் வருவதையுணர்ந்து, பிரயாணிகளில் ஒருவர் முணுமுணுத்தார்.

''சில நேரம்தான் இங்க செக்கிங் நடக்கிறது. இண்டைக்கு என்ன மாதிரியெண்டு தெரியேலை'' எல்லோரும் தமது அடையாள அட்டைகளையும், பிரயாணப் பொதிகளையும் தயார்நிலையில் வைத்துக் கொண்டனர்.

கவசத் தொப்பிகள் - கையில் கனரக ஆயுதங்கள் தாங்கிய பச்சை நிறச் சீருடையினரின் பகுதிக்குள் பஸ் பிரவேசித்தபோது - எல்லோருடைய முகங்களும் வெறுப்பு, அலுப்பு, பீதி, விரக்திப் புன்னகைகளின் பிரசவங்களால் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தன. அவன் பஸ்ஸை மெதுவாக ஓட்டினான். 'போகும்படி' சைகை கிடைத்ததும் ''அப்பாடா'' என்று நிம்மதியுடன் எல்லோரும் ஆசனங்களில் நன்றாகச் சாய்ந்து கொண்டனர். காலை வேளை என்பதால் முகாம் வளவினுள் பயிற்சிகள் நடந்து கொண்டிருந்தன. சிலர் யன்னலினூல் அதை எட்டிப் பார்த்துக்கொண்டு வந்தனர்.

''ஒரு கண்டத்தில இருந்து தப்பியாச்சு. இன்னும் பத்துப் பதினொரு கண்டங்களைத் தாண்ட வேணுமே''

'' அதுகளும் பாவங்கள் தானே! எல்லாம் இளம் பெடியள். விடிய வெள்ளணை, வெறும் வயித்தோடை பிரக்டீஸ் செய்யுதுகள். இதுகளும் இண்டைக்கோ, நாளைக்கோ எண்டு உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டிருக்குதுகள். இந்தப் பிள்ளையளைப் பெத்ததுகள், சகோதரங்கள், பெண்சாதி பிள்ளையள் என்னெண்டு அங்க இருந்து நிம்மதியாச் சாப்பிடுங்கள்? இஞ்ச... நாங்களும் இப்பிடித் தானே... எங்கட பெடியள் போனா எவ்வளவு அவலப்படுறம்? அப்பிடித் தானே இதுகளின்ட தாய், சகோதரங்களும் துடிக்குங்கள்? அதுகளும் மனிசர் தானே?'' என்று பஸ்ஸினுள் இருந்த பெண் பயணி வருத்தப்பட்டார்.

''இது தான் எங்களிட்ட இருக்கிற நல்ல குணம். விரோதியளுக்கும் இரக்கப்படுறம், பகையாளிக்கும் பாவம் பாக்கிறம். ஆனா நாங்கள் எந்த நிலையில இருக்கிறமெண்டு யோசிச்சுப் பாக்கிறதில்லை. எங்களில் எத்தினை பேர் அழிஞ்சிட்டம்? எத்தனை விதவையள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்குதுகள்? ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் கடைசி ஒரு தாயாவது கதறிக் கொண்டு தானே இருக்கினம்கள்? இதையெல்லாம் மறக்க முடியுமா? இதெல்லாம் சட்டத்துக்குட்பட்டதா? சரி! எங்கட பிரச்சினையளில எது தான் சட்டத்துக்குட்பட்டது சொல்லுங்கோ பாப்பம். சட்டத்துக்குட்படாததால அந்தப் பிரச்சினைகளை பகிங்கரப்படுத்தக் கூடாது. பொறுமையா இருக்க வேணும். முடியுமே?'' தேவராசா அவனைப் பார்த்துக் கேட்கிறான். அவன் பதில் சொல்லவில்லை. அவனுடைய மனக் கண்ணில் மூத்த தம்பி ஆனந்தனும், சின்னத்தம்பி காந்தனும் தான் தெரிந்தார்கள்.

ஆனந்தன் வீட்டில எல்லாருக்கும் தெரியத்தக்கதாகவே போனான். எல்லாருக்கும் கவலை தான். ஆனா எதையோ எங்கட பிள்ளை பெரிசாச் சாதிக்க போறான் எண்ட மாதிரி அந்தக் கவலைகளுக்கிடையிலயும் ஒரு சந்தோசம். நான் செய்யாததை, என்ர தம்பி செய்யப் போறான் எண்டு ஒரு சின்னப் பொறுமை. அதைவிடப் பெரிய

## மருத்துவம்

1. கண் மங்கலுக்கு- மிளகை அரைத்து நல்லெண்ணெய்யில் போட்டு ஒரு வாரம் வெயிலில் காய வைக்கவும். பிறகு சீசாவில் பத்திரப்படுத்தவும். வாரம் இருமுறை இந்த தைலம் வைத்து ஸ்நானம் செய்ய கண்மங்கல் நீங்கும்.

2. காமாலைக்கு- கரிச்சலாங் கண்ணி இலையை கசக்கிப் பிழிந்து சாறெடுத்து வேளைக்கு கால் அவுன்ஸ் வீதம் பருகினால் நான்கு நாட்களில் குணமடையும்.

3. கபத்திற்கு- குப்பைமேனி இலையை தூள் செய்து வேப்பெண்ணெயில் குழைத்து உட்கொண்டால் கபம் வெளிப்படும்.

4. கண் வலிக்கு- நந்தியாவட்டை பூவை எடுத்து கண்களில் ஒத்திக் கொண்டிருக்க கண் வலி நீங்கும்.

5. கணைச்சூட்டுக்கு- காய்ச்சிய பசுவின் பாலில் வில்வம் பழச் சதையை சேர்த்து சக்கை நீக்கி சாற்றை மட்டும் பருகி வர கணைச்சூடு குணமாகும்.

தகவல் தொகுப்பு:-

செல்வி - திரௌபதி சிவலிங்கம்
ஏழாலை.

பெருமை. ம்ஹூ... கடைசில என்ன நடந்தது?''

"உதில போட்டு வாறனெண்டு போனான். போன ரெண்டொரு மணித்தியாலத்தால பெரிய, பெரிய சத்தங்கள். இரவு எட்டு மணி போல ஆனந்தனைக் கொண்டு வந்தாங்கள். கடவுளே! என்ர தம்பி... என்ர குஞ்சு...'' கண்களைப் பனிப் புகார் போல் நீர் மறைத்தது.

''சாகப் போறானெண்டு யார் கண்டம்? அவன் எத்தினையோ சாதிப்பானெண்டெல்லோ இருந்தம்? ஆனா அற்பாயுசிலே போய்ட்டான். அவனுக்கு வடிவா ஒரு சின்னப் பிறந்த நாள் கூடக் கொண்டாடினதில்லை. கடைசியில அவன்ர செத்தவீட்டக் கூட நடத்த முடியாமப் போச்சு. அண்டைக்குப் படுக்கையில படுத்த அம்மா... இன்னும் எழும்பேலை. இதுக்கிடையில சொல்லாமல், கொள்ளாமல் மற்றவனும் போய்ட்டான். கேட்டால் இனி விடமாட்டம் எண்டு கேக்காமலே போய்ட்டான். அம்மாவின்ட மடியில நித்திரை கொள்ளுறவன் இப்ப எந்தக் கல்லு, முள்ளுக்கில கிடக்கிறானோ? சின்னக்காவின்ர கையால சாப்பாடு தின்னாட்டி அவனுக்குச் சாப்பாடே இறங்காது. அப்பிடியிருந்தவன்... இப்ப எண்ணெண்டு தான் எங்களை விட்டிட்டு இருக்கிறானோ? தெரியல்ல'' கண்களை விட்டு வெளியே வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டான். நெஞ்சினடித் தளத்திலிருந்து நீண்ட பெருமூச்சு, உணர்வுகளுக்கு வேதனையைக் கொடுத்துக் கொண்டு வெளிப்பட்டது.

அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தேவராசாவுக்கு, அவனுடைய கண்ணிலிருந்து கண்ணீர் வழிவதைக் கண்டதும் 'பகீரெ'ன்றிருந்தது. பதட்டத்துடன் அவனருகே குனிந்து ''என்னண்ணை?'' என்று ஆதரவாகக் கேட்ட போது தான் அவனுக்குச் சுய உணர்வு வந்தது. ''ஒண்டுமில்லை. தம்பிமாரை நினைச்சன் அது தான்...'' என்றான் நாத்தளுதளுக்க.

சிறிது நேரம் இருவரிடையேயும் மௌனமாகக் கழிந்தது. தேவராசா அவனைப் பரிதாபமாகப் பார்த்தபடியிருந்தான். தேவன் ஒருவன் தான் அவனை நன்கு புரிந்து கொண்ட மூன்றாம் ஜீவன். ஆனந்தனின் வயதொத்தவன் என்பதால் தேவன் மேல் அவனுக்கு அதிக அன்பு. ஒளிவு மறைவின்றி தன்னுடைய குடும்பக் கஷ்டங்களை, ரகசியங்களை எல்லாம் தேவனிடம் சொல்வான். இருவரும் ஒரு ஊர் என்பதால் அவனைப் பற்றியும், அவனுடைய பொறுப்புகளைப் பற்றியும் தேவன் நன்றாக அறிந்திருந்தான்.



கண்ணே! அத்தைக்கு மீசை முளைச்சா சித்தப்பா தானே?

அப்ப .. மாமாவுக்கு முடி வளர்ந்தா சித்தியா?

— ச. ராணி

''அண்ணை நடந்ததுகளைப் பற்றிக் கவலைப்படுறதில என்ன பலன்? வீணா மனசைப் போட்டுக் கவலைப் படுத்தாதையுங்கோ. சும்மா யோசிச்சுக் கொண்டிருக்காமல் றோட்டப் பாத்து பஸ் ஓட்டுங்கோ. இல்லாட்டி ஏதாவது கதைச்சுக்கொண்டு வாங்கோ அண்ணை'' அவனைத்திசை திருப்பினால் தான் தேவனுக்கு மனம் அமைதியடையும்.

''என்னத்தையடா நான் கதைக்க? என்ர கஷ்டங்களைத் தான் சொல்லுவன் அதக் கேட்டுக், கேட்டு உனக்கு அலுப்புத் தட்டிப் போடும்'' என்றான் விரக்தியாக.

''எங்கட இனத்தில தொண்ணூறு சத வீதமான மக்கள் தங்கட வாழ்க்கையை ஒவ்வொருவிதமான கஷ்டங்களோட தான் நடத்துதுகள். எங்கட மக்களின்ர கஷ்டத்தைப் பாத்து எங்களுக்கே அலுப்புத் தட்டினா நாங்கள் உயிர் வாழுறதில என்ன பிரியோசனம்? பிறகு ஏன் இந்தப் போராட்டம்? யாருக்காண்டிச் சுதந்திரம்? மிச்சப் பத்து வீதத்துக்கா? அண்ணை! உங்கட கஷ்டத்தை எனக்குச் சொல்லுங்கோ. ஏனெண்டா நான் எங்கட இனம் முழுதுக்கும் சொந்தம்'' பெருமூச்சுகளுடன் சொந்தம் கொண்டாடும் பெரும்பான்மையரில் ஒருவனான அவனும் தேவன் சொன்னவற்றுக்குப் பெருமூச்சாலேயே வாழ்த்துத் தெரிவித்தான்.


''தேவன்! எனக்குச் சௌதியில நல்ல சம்பளத்தோட டிரைவர் வேலை கிடைச்சிருக்கு. மூத்தக்காவின்ர விஷயத்தை முடிச்சிட்டுத் தான் போகவேணும். எத்தினை வருஷத்துக்கு அவவும் தையல் மெஷினோட கிடந்து எங்களுக்காண்டி மாயிறது சொல்லு பாப்பம். வயசும் முப்பதாப்போச்சு.''

''அதுக்கென்ன அண்ணை இப்ப? மூத்தக்காவின்ர கலியாணத்தை முடிச்சிட்டு நீங்கள் போங்கோவன். என்ன பிரச்சினை? சின்னக்காவுக்கும் உடன நடத்தச் சொல்லிக் கேக்கினமா?''

''சீச்சீ... முதலிலேயே சொல்லிட்டம். இருக்கிறது முழுத்தலும் மூத்தக்காவுக்கே போயிடும். சின்னக்காவுக்கு நான் போய் உழைச்சு அனுப்பின பிறகு தான் எண்டு சொல்லி மாப்பிள்ளை வீட்டாக்களும் ஓமெண்டு சொல்லிட்டினம்''.

''அப்ப... பிறகு என்னண்ணை கரைச்சல்?''

''இவள் - என்ர தங்கச்சி மலர் இப்ப அட்வான்ஸ் லெவலெல்லே படிக்கிறாள்? படிப்பில ஆள் வலு கெட்டிக்காரி. அவளுக்குத்தான் பெஸ்ட் றிசல்ட் வருமெண்டு பள்ளியிலயும்,ஊருக்கிளயும் கதைக்கினம். இதுக்கிள அவள் எங்களிலயும் குறைஞ்ச சாதிப் பெடியனை விரும்பினாள். நீயும் கேள்விப்பட்டிருப்பாய் என்ன? உண்மையைச்



''அப்பாவுக்கு நாங்கள் கடற் கரையில சந்திக்கிறது தெரிந்து போச்சு... கோவிச்சுக் கொண் டார்''

''தொலைஞ்சம்''

''போயும் போயும் கடற் கரையிலா சந்திக்கிறது... அங்க என்ன கிடைக்கும்? கடலைக் கொட்டை தானே. கோல் பேஸ் ஹோட்டலில சந்திச்சா என்ன? என்று கோபித்துக் கொண்டார்.''

— செ. செல்வானந்

---

சொன்னு என்னடா...! எனக்கோ, அக்காமாருக்கோ சாதியைப் பற்றி ஒரு கவலையுமில்லை. அவள் விரும் பிற பெடியன் உண்மையிலேயே நல்ல பிள்ளை. இந்த நாளையில எங் கட பொம்பிளைப் பிள்ளையள நல்ல சாதியில கட்டி வைக்க வேணு மெண்டு நான் ஒருக்காலும் நினைச் சதில்லை. எங்கயெண்டாலும் நல்ல குணமான ஒருத்தன்ர கையில ஒப் படைக்க வேணுமெண்டது தான் என்ர விருப்பம். அக்காமாருக்குக் கூட மாப்பிள்ளை பாக்கேக்கில நான் குடி, கூத்து எண்டில்லாமல் நல்ல குணமாகத்தான் தேடினனுன். அதால தான் மலரின்ர விஷயத்தில ஒரு பிழையும் சொல்லேலை. அவள் அவனை விரும்பினதால படிப்பில கவலையீனமா குறைஞ்சிட்டாளா இல்லை பண்பில, நடத்தையில தவறிட்டாளா நான் அவளைக் கண் டிக்க? என்ர தங்கச்சி பண்பாத் தான் இருக்கிறுள். இல்லையெண்டா அவளுக்குச் சமாதி கட்டுறவனே நானுத்தானிருப்பன்.'' அவனு டைய பேச்சில் உண்மையான பெரு மிதமும், நியாயமும் தெரிந்தன.

''சரி. பிழையில்லைத் தானே பிறகென்ன கவலை?''

''நான் அவளில பிழை சொல் லேலை. அவளால அக்காமாரின்ட வாழ்க்கை தடம்புரண்டிடுமோ வெண்டு தான் பயப்பிடுறன்'' என்று அவன் பீதி கலந்த துயரக் குரலில் சொன்னபோது தேவராசா வுக்குக் காரணம் புரியவில்லை.

''மூத்தக்காவுக்குப் பேசின மாப்பிள்ளை வந்து அக்காவோடை கதையோட கதையா மலரின்ட விஷயத்தைப் பற்றி விசாரிச்சிருக் கிறு. அதுக்கு அக்கா! எங்கட சம்மதத்தோடதான் காதலிக்கி ருள். அவனத்தான் அவளுக்குப் படிப்பு முடிஞ்சப்பிறகு கட்டி வைக் கப் போறம்' எண்டு சொல்லியிருக் கிறு. உடன அவர் அவள் அப்பி டிக் குறைஞ்ச சாதியில போற தெண்டால் நாங்கள் வேற பொம் பிளை பாக்கிறம். இல்லாட்டி தாற சீதனத்தில இன்னும் பதினையாயி ரம் கூட்டித் தர வேணுமெண்டு பேரம் பேசியிருக்கிறுர்.''

''என்னது... பதினையாயிரமோ? அடியடா புறப்படலையில எண்டா லும். என்னண்ணை ஆகக் குடிக்கா தது மாத்திரம் நல்ல குணமெண்டு இந்த மாப்பிள்ளையை முற்ருக்கியி ருக்கிறியள். ஆனு இவனிட்ட அத விடப் பெரிய கெட்ட குணம் இரு க்கே. அவன் அப்பிடிக் கேக்க, அக்கா என்ன சொன்னவ''? தேவராசாவுக்குக் கோபத்தில் உட ம்பு பதறியது''.

அவன் தேவராசாவுக்குப் பதில் சொன்ன போது நேற்று அக்கா மாப்பிள்ளைக்கு முன்னுல் நின்ற அந்த ''ருத்ர கோலம்'' தான் மனக் கண்ணில் படமாக ஓடியது.

''என்ன நீங்கள் என்னை வைச்சு என்ர குடும்பத்தை 'பிளாக்மெயில்' பண்ணலாமெண்டு நினைச்சிட்டி யளா? ஐயா பகுதிகுறைந்த சாதியெ ண்டதுக்குப்பத்தாயிரம்கூடவேணும். இப்ப .. ஒன்ர தங்கச்சியக் கட்டப் போறவன் சாதி குறைந்தவன் எண் டதுக்குப் பதினையாயிரம் வேணும். ஏன் இவ்வளவு காசு தந்து உங்களை நான் கட்ட வேணும்? உங்கட லெவலுக்கு நாங்கள் வரவேணு மெண்டா? இவ்வளவு காசு தந்தா என்ர ஐயான்ர சாதியும், அவன்ர சாதியும் உயர்ந்த சாதியா மாறி டுமா? இல்லை... எங்கட லெவலுக்கு பெரிய மனசோட நீங்கள் இறங்கி வாறதுக்கு உங்களுக்கு நாங்கள் லஞ்சம் தரவேணுமா? இருபத்தை யாயிரம் தந்து நீங்கள் குறைஞ்ச சாதிக்கு இறங்கவோ இல்லை சாதி குறைஞ்ச நாங்கள் உங்கட லெவ லுக்கு வரவோ வேண்டாம். உங்க ளுக்கு ஏத்த இடத்தில பொம்பிள யப் பாருங்கோ.''

''வாய் விட்டுப் பிச்சை கேக்க வெக்கமாயிருக்கெண்டதுக்காக எங் கட இறந்த காலச் சாதியையும் எதிர்காலச் சாதியையும் இந்த நிகழ்கால வாழ்க்கைக்கு காரணம் காட்டிக் காசு பறிக்கலாமெண்டு நினைக்கிறியள். பொம்பிளயள தாயக் கட்டையளா நினைச்சிட்டியள் போல. நீங்கள் வெளியால போறி யளா?'' அக்கா...! மூத்தக்காவா... இப்படிக் கதைக்கிறுல் என்று எல் லோருமே திகைத்துவிட்டனர்.

''வெல்டன்! அக்கா தான் சரி. இப்பிடிப்பட்ட சொறி நாயளுக்கு அக்கா குடுத்தது தான்செருப்படி.'' தேவனுக்கு அக்காவின் முடிவு திருப் தியாகவிருந்தது. குட்டக்குட்ட குனி கிறமடத்தனத்தில் பெண்கள்மடிந்து போகாமல் மூத்தக்காவைப் போல் எதிர்த்து, நிமிர்ந்து திருப்பிக் குட் டினுல்தான் கேடுகெட்டுப் போகும் இந்தச் சமுதாயமும் ஒரு நிலையில் கலங்கும். தேவனின் இந்த எதிர் பார்ப்பு நிறைவேற இன்னும் நிறைய அக்காமார் தேவையா யிற்றே...?

ஆனுல் தேவனைப் போல் அவ னுல் சந்தோஷப்பட முடியவில்லை. ''ஐயா செத்தப் பிறகு பத்து வரு சமா இந்தக் குடும்பத்தின் ஒவ் வொரு ஜீவனின் பசியையும் ஆசை யளையும் நிறைவேற்ற தன்னுடைய பசி, தூக்கம், ஆசையள் கனவு கள் எதையும் பொருட்படுத்தாமல் இன்பங்களை அனுபவிக்கிற அந்த இருபது வயதிலேயே இயந்திரமாக

மாறி உழைச்ச உழைப்பு இன்று வரை ஓயவில்லை''.

அவளுடைய இதயத்தில் ஆசைகள் இல்லையா? அந்த இதயத்தினடித் தளத்தில் இருதயம் முழுதும் நிரம்பியிருக்கும் சகோதரங்களின் முன்னேற்றத்திற்கான நினைவுகளினடியில் அவளுடைய ஆசைகள் புதையுண்டு, நைந்து செல்லரித்துப் போயிருக்கும்.

அவளுக்கு உணர்ச்சிகள் இல்லையா? ஆனால் குடும்பப் பொறுப்பு-ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வழியில் முன்னேற்றி விட வேண்டும். என்ற துடிப்பு, அவளின் உணர்ச்சிகளின் முனையை மழுங்கச் செய்திருக்க வேண்டும். அவளுடைய கண்கள் கனவுகளின் அறிமுகங்களுக்காகக் காத்திருக்கின்றன. ஆனால் அவள் தூங்க வேண்டுமே...! இளமை நினைவுகள் உணர்ச்சிகளில் ஊற நினைத்தாலும் 'குடும்பம்' என்ற கோவில் அந்த நினைவுகளுக்கு கல்லறையாக மனதை மாற்றிவிட்டது.

அவள் அதையெல்லாம் நினைத்துக் கவலைப் படாமலிருக்கலாம். ஆனால் அவளைப் போல் அம்மாவால் இருக்க முடியுமா? அல்லது அவளுடைய உடன்பிறப்புக்கள் இருப்பார்களா?

அண்டை அயல் வீடுகளிலுள்ள பெண்கள் எல்லோரும் மணக் கோலத்தில் வரும்போது ''எப்ப நாங்கள் மூத்தக்காவை இப்பிடிப் பாக்கப்போறம்?'' என்று ஒவ்வொருவரும் ஏங்கினார்கள். அக்காவின் சிநேகிதிகள் நண்டும் சிண்டுமாக வந்து போகும்போது "என்ர அக்காவும் இப்பிடிப் புருஷன், பிள்ளையள், குடும்பமெண்டு வாழுற நேரம் வருமா?'' என்று அவன் ஏக்கத்துடன் நினைத்துப் பார்த்திருக்கின்றான்.

அந்த ஏக்கங்கள் நிரந்தரமான ஏக்கங்களாகப் போவதற்கா அவன் இவ்வளவு கஷ்டப்பட்டு அக்காவுக்கு மாப்பிள்ளை தேடினான். அக்காவை வாழ வைக்க அவன் எடுக்கும் முயற்சிகளெல்லாவற்றிலும் ஏதாவது ஒரு தடை ஏன் குறுக்கிடுறது என்று அவனுக்குப் புரியவில்லை.

நேற்று...

அக்கா அப்படித் திடீரென்று நேருக்கு நேர் மாப்பிள்ளையைப் பேசியதை யாருமே எதிர் பார்க்கவில்லை. மாப்பிள்ளை கூட ஸ்தம்பித்து விட்டார். அவமானத்தாலும் அதிர்ச்சியாலும் முகம் வெளிறி என்ன பேசுவது என்று புரியாமல் திணறிப் போனார். இவ்வளவு நாளும் கதவுக்கருகில், குனிந்த தலை நிமிராமல், அதிகமாகக் கதைக்காமல், மௌனத்திலேயே அதிக நேரம் கழிக்கும் அவளை அவர் இந்தக் கோலத்தில் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு நாளும் தன்னுடன் கதைக்க வெட்கப்பட்டுக் கொண்டு தான் அவள் அப்படி ஒதுங்கி நிற்கிறாள் என்று நினைத்து அவளோடு சால வார்த்தைகள் பேசிய அவருக்கு இன்று தான் புரிந்தது. "அவள் வெட்கப்பட்டு நிற்கவில்லை, தன்னை வாழ வைக்கத் தன்னுடைய குடும்பத்திடம் மாப்பிள்ளையின் 'ரேட்' உயரும் வீதத்தில் வேதனைப் பட்டு, வெறுப்படைந்து மௌனமாக ஒதுங்கி, ஒடுங்கியிருந்திருக்கிறாளென்று.'' நெஞ்சை நிமிர்த்திப் பெண் பார்க்கப் போன இடங்களெல்லாவற்றிலும் தன்னை ஏலம் பேசிய அந்த மாப்பிள்ளை முதன் முதலாக மூத்தக்காவின் முன் கூனிக் குறுகித் தலை குனிந்தபடி வெளியேறிய போது அவர்களுடைய மனதில் அக்காவின் நியாயமான, துணிவான பேச்சினால் ஒருபுறம் சந்தோஷமாகவும், மறு புறம் அவளுக்கு முடிவு செய்த எதிர்காலம் சீதனப் பேயின் பின்னால் வாசலைக் கடக்கிறதேயென்று வேதனையாகவுமிருந்தது.

திடீரென்று மலர் தான் மாப்பிள்ளையிடம் ஓடிப் போய் "அத்தான்! அக்காவை விட்டிடாதையுங்கோ. எங்களுக்காக அக்கா இவ்வளவு நாளும் பட்ட கஷ்டங்கள் போதும். என்னால தானே அக்கா விட்ட இப்பிடிச் சீதனம் கேக்கிறியள்? வேணுமெண்டா நான் அவரை மறந்திடுறன். என்ரை அக்காவைக் கை விட்டிடாதையுங்கோ. உங்கட காலில விழுந்து கேக்கிறன்'' என்று அழத் தொடங்கிய போது அவருக்கு என்ன சொல்லதென்று தெரியவில்லை. மலைத்துப் போய் நின்றார்.

"அண்ணை! எனக்கு அவர் வேண்டாம். அக்காவுக்கு இந்தக் கலியாணத்தை நடத்துங்கோ. என்னால அக்காவின்ர வாழ்க்கை பாழாக வேண்டாம். அத்தானிட்டச் சொல்லுங்கோ அண்ணை. அவரப் போக வேண்டாமெண்டு சொல்லுங்கோ அண்ணை. அவரக் கூப்பிட்டு வைச்சுக் கதையுங்கோ அண்ணை'' என்று அவனை உலுக்கினாள் மலர்.

''தம்பி! உன்ர மூத்தக்காவானை நீ அவரக் கூப்பிடக் கூடாது சின்னக் குழந்தைதன்ர ஆசையளப் புதைச்சு, அதுக்கு மேல நீ எனக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டாம். அத விட உன்ர அக்கா இப்பிடி இருந்தாலே நிம்மதியாயிருப்பன்.''

''இல்லையக்கா... அண்ணை உங்களுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டு முற்றுக்கியிருக்கிறார்? உங்களைக் கலியாணக் கோலத்தில எப்ப பாப்பமெண்டு, எத்தினை நாள் ஆசைப் பட்டிருப்பம்? அந்த ஆசையள் எல்லாம் என்னால கருக வேண்டாம். என்ர அக்காவெல்லே...? எனக்கொரு கவலையுமில்லை. அவரை நான் மறந்திடுவன். சத்தியமா மறந்திடுவன். அக்கா..? ஓமெண்டுங்கோ அக்கா'' மூத்தக்காவின் நாடியைத் தடவிக், கையைப் பிடித்து எவ்வளவு தான் மலர் கெஞ்சியழுத போதும் அக்கா மசியவில்லை.

"என்னைக் கலியாணக் கோலத்தில பாக்க ஆசையா இருந்தா... வா... வந்து எனக்குச் சோடிச்சுப் பார். அதவிட்டிட்டு இப்பிடி மாப்பிள்ளையைக் காசு குடுத்து வாங்கித் தான் என்னை நீ மணக்கோலத்தில பாக்க வேணுமெண்டா அதவிட நான் நிம்மதியாச்சாவன். சொல்லு! உனக்கு எது வேணும்? என்ர செத்த வீட்டுக்கும் என்னைக் கலியாணப் பொம்பிள்ளை மாதிரிச் சோடிக்கலாம்'' அக்கா கோபத்துடன் கேட்ட போது மலர் விக்கித்துப் போய் நின்றாள். "நீங்கள் ஏன் இன்னும்

நிக்கிறியள்? இதில நிக்கிறதால ஒரு பிரயோசனமுமில்லே. கடைசிவரைக்கும் உங்கட நிபந்தனைக்கு நான் சம்மதிக்கமாட்டன். நீங்கள் போகலாம்'' என்று ஆவேசமாக அக்கா, அதுவரை அங்கு நின்றிருந்த மாப்பிள்ளையைப் பார்த்துச் சொன்ன போது ''ஐயோ வேண்டாம். நில்லுங்கோ'' என்று கத்தியபடி அவரை நோக்கி ஓட எத்தனித்த மலரைப் பிடித்திழுத்துக் கொண்டு அக்கா வீட்டுக்குள் போவதைத் திரும்பிப் பார்க்கும் திராணியில்லாமல் தலை குனிந்தபடி வெளியேறினர் விலைவாசி கூடிய அந்த மாப்பிள்ளை.

மூத்தக்காவைத் தவிர எல்லோரும்கவலையோடிருந்தனர். ஒருவேளை அக்கா தனது கவலையை வெளிக்காட்டவில்லையோ? அவன் மலைத்துப் போயிருந்தான். அவனுடைய எதிர்பார்ப்புகளெல்லாம் இப்படிக் கண்ணுடி வார்ப்புகளின் உடைசல்களாகப் போய்விட்டதே! அவனுக்குக்கோபம்கோபமாகவந்தது. ஆனுல் யார்மீது அந்தக் கோபமென்று அவனுல் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

சாதி குறைந்தவனைக் காதலித்துவிட்டு இப்போது முற்றுகிப் போன அக்காவின் கலியாணமும், எதிர்காலமும் குழம்பக் காரணமாயிருந்த மலர்மேல் கோபமா? அல்லது...

எங்கள் குடும்ப விஷயங்களையும், சாதியையும் பணயம் வைத்துத் தாயமாட நினைத்த அந்த மாப்பிள்ளை மீது கோபப்படுவதா? அல்லது...

குடும்பத்துக்காக, சகோதரங்களுக்காகவென்று தன்னுடைய வாழ்கையில் சகலதையும் இழக்கத் தயாராக இருக்கும் அக்கா-அவன் இவ்வளவு கஷ்டப்பட்டு முற்றுக்கிய மாப்பிள்ளையை ஒரு கணத்தில், ஒரேயொரு கணத்தில் தூக்கியெறிந்த மூத்தக்கா மேல் கோபப்படுவதா? அல்லது...

இவ்வளவு கஷ்டங்களையும் பார்த்துக் கொண்டு கையாலாகாத்தனமாக அம்மா கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கச் செய்துவிட்ட ஐயா -பொறுப்பில்லாமல் குடித்துக் குடித்துக் குடியாலேயே சேமிப்புகளையும், தன்னையும் சாகடித்த ஐயா மேல் கோபப்படுவதா? அல்லது...

சாதி, மதம், இனமென்று தங்தங்கள் தேவைகளுக்காக- வசதிகளுக்காக வரையறைகள் வகுத்த முன்னேர்களை- அந்த முன்னேர்களின் கோட்பாடுகளைச் சுயநலங்களுக்காக இன்றும் ஆமோதிக்கும் இந்தக் கேடுகெட்ட சமுதாயத்தைக் கோபிப்பதா?

அவன் கோபித்து.என்ன பலன்? அவன் மனமெரிந்து சாபங் கொடுக்கிருன். ஆனுல் அவனுடைய சாபங்கள் பலிக்காதவையாயிற்றே!

மலர் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

''எடி விசரி! நானே கவலைப் படேலை. நீ என்னத்துக்கடி அழுகிருய்! நீதானே அடிக்கடி சொல்லுறனி, 'பொம்பிளயள் தங்கட வாழ்க்கைக்காக அடங்கியிருக்கக் கூடாது வாழ்கையில அர்த்தங்களை அடக்கியிருக்க வேணும்' எண்டு. என்ர வாழ்க்கையில நான் அடங்கியிருக்க விரும்பேலை. கூடப் பிறந்த சகோதரத்தின்ர- அதுவும் என்ர கையால சாப்பிட்டு, வளர்ந்த, நான் தூக்கி வளத்த குஞ்சின்ர வாழ்கையை சாகடிச்சு- அதில எனக்கொரு வாழ்க்கை வாறதில எந்த அர்த்தமும் இல்லையடி.'

''அதைவிட சீதனப் பேயை எதிர்த்து நான் கலியாணத்தைப் பகிஷ்கரிக்கிறன். சாதிப்பேயைமுறியடிச்சு நீஉன்ரகாதலை வாழவை, இது தான் அர்த்தமான வாழ்க்கை. உன்ர சந்தோஷத்தைக் கெடுத்து இந்தக் கலியாணம் நடந்தா-அந்த ஆளோட நான் சந்தோசமா வாழ்க்கை நடத்த முடியுமெண்டு நீ நினைக்கிறியா? என்ர மனச்சாட்சிக்கு விரோதமா வாழுறத விட என்ர தாய், சகோதரங்களின்ட முகங்களைப் பாத்துக் கொண்டு நிம்மதியா இருப்பனே?''

''தம்பி என் பேசாமலிருக்கிருய்? நீ என்ன சொன்னுலும்-செய்தாலும் பிழை சொல்லாத அக்கா, இண்டைக்கு இப்பிடிச் செய்திட்டனே யெண்டு கோபப்படுறியே?'' அவனுடைய தலையை அன்போடு கோதியபடி மூத்தக்கா கேட்ட போது அவ்வளவு நேரமும் குமுறிக் கொண்டிருந்த ஆவேசம் அழுகையாக வடியத் தொடங்கியது.

''உன்னை வாழவைக்க வேணுமெண்டு எவ்வளவு ஆசைப்பட்டன்? எத்தனை கஷ்டப்பட்டன்? எல்லாத்தையும் பாழாக்கிட்டியே அக்கா! அப்படியென்ன அவர் கூடக் கேட்டிட்டார்? ஒரு பதினையாயிரம் தானே? உனக்காக ஒரு பதினையாயிரம் உழைக்கிறது எனக்குக் கஷ்டமா? நான் வெளியிலே போனதும் உழைச்சு அனுப்புவனெண்டு அவரோட கதைச்சு எல்லாத்தையும் சரியாக்கியிருப்பனே! நீயேன் அக்கா அவசரப்பட்டு அதக் குழப்பினனீ?'' நாத் தளுதளுக்க அவன் கேட்ட போது அக்கா ஆறுதலாகச் சிரித்தாள்.

''தம்பி! இப்ப எனக்கு என்ன வயசு? முப்பதாப் போச்சு. இத்தனை ஷமும் நான் வாழ்ந்ததெல்லாம் உங்களோட தான்.. உங்களுக்காகத் தான். கலியாணம் செய்யாட்டியும் பரவாயில்லை. எனக்கு இந்த வாழ்க்கை தான் பிடிச்சிருக்கு. அந்த மாப்பிள்ளை என்னைப் பொம்பிளை பாக்கவந்தண்டு சீதனத்தைப் பேசி முடிச்சிட்டுத்தான் என்னைப் பாக்கச் சம்மதிச்சவர். அப்பிடிப் பாத்தா சீதனத்துக்காகத் தான் அவர் என்னைக் கலியாணம் செய்யப் போருர். காசுதான் அவருக்கு முக்கியம். எவ்வளவு காசைக் கறக்க முடியுமோ அவ்வளவையும் பறிக்கக் குறி பாக்கிற வழக்கமான மாப்பிள்ளைதான். எங்கட ஐயாவின்ர சாதியையும், மலரின்ர பெடியன்ச் சாதியையும் காரணம் காட்டிர சீதனம் கேட்ட பிறகும் என்னுல அவரோட வாழ்க்கை நடத்தவோ, அன்போட அணுகவோ முடியாது. அவரோட வாழுற ஒவ்வொரு நிமிஷமும் என்ர சகோதரங்களைக் கஷ்டப்படுத்திக் காசு பறிச்சப்பகல்


காள்ளைக்காரனைப் பாக்கிற வெறுப்புணர்வோடதான் பாப்பனே தவிர ஒரு புருஷனைப் பாக்கிற உணர்வே எனக்கு ஏற்படாது.' ''காசுக்குத் தானே என்னைக் கட்டினவர்; எனக்காகவோ, என்ர அன்புக்காகவோ என்னைக்கலியாணம் செய்யேலையே'' யெண்ட காழ்ப்புணர்சியாலேயே செத்த மனதோடதான் என்ர வாழ்கை நடக்குமே தவிர நீ நினைக்கிற மாதிரி 'புருஷன், பிள்ளையள், குடும்பம் எண்டு சந்தோஷமா வாழ மாட்டன்.''

''இண்டைக்கு இத வைச்சுச் சீதனம் தேப்பார். நாளைக்கு- கலியாணம் கட்டின பிறகு காசு தேவைப்படுற நேரமெல்லாம் என்னை இஞ்ச கொண்டு வந்து இவ்வளவு காசு எனக்கு வேணும். அத தந்த பிறகுதான் உன்ர அக்காவை என்னோடை சேப்பன்' எண்டு விட்டிட்டுப் போவார். அப்பவும் அக்காவுக்காக, அக்காவுக்காக வெண்டு சௌதிக்குப் பறந்து கொண்டிருக்கப் போறியா? அப்பிடி உங்களையெல்லாம் கஷ்டப்படுத்திக், கவலைப்படுத்தித்தான் நான் வாழ வேணுமா? அப்பிடியொரு வாழ்க்கையை எனக்கு அமைச்சுத் தாறதை விட ஒரு பிடி சோறு எனக்குப் போட உன்னால முடியாதா? அந்தளவுக்கு உனக்கு நான் ஒரு பாரமாவா இருக்கிறன்?'' என்று அவள் கேட்ட போது அவளுடைய மடியில் முகம் புதைத்துத் தேம்பினான் அவன்.

''அழாதை ராசா! சீதனப் பேயோட வாழுறதை விட அதை எதிர்த்து வாழுற புதுஜென்மமா இருந்திட்டுப் போறன். நீ இருக்கிற காசில சின்னக்காவின்ர கலியாணத்தை முடிச்சிட்டு வெளியில போய் உழைச்சுக் கொண்டு வா'' என்று அக்கா ஆறுதலாக- முடிவாகக் கூறினாள்.

''பிறகெதுக்கு அவன் வெளியில போக வேணும்? நீ தானே புரட்சி செய்யப் போறியே! பிறகாற்ர கலியாணத்துக்காக- சீதனம் சேக்க என்ர பிள்ளை வெளியில போக வேணும்? சாதி குறைஞ்சவனைக் காதலிச்சு ஆடும இந்த ஆட்டக்காரிக்காண்டியா? அவதானே காதலிக்கிறுவாச்சே...? அவவுக்கு என்ன சீதனம்.? ஒரு செப்புக் காசு கூடக் குடுக்க மாட்டன். அவ்வளவு நேரமும் அழுது கொண்டிருந்த அம்மா ஆவேசமாகக் கேட்டாள்.

''அம்மா! இந்த இழுப்பு வியாதியிலயும் இவ்வளவு வார்த்தையளை என்னெண்டு கொட்டினனி? கொஞ்சம் யோசிச்சுப் பார். இதே கேள்விய உன்னட்டத் திருப்பி நான் கேட்டா நீ என்ன மறுமொழி சொல்லப் போறாய்? மலரிண்ட விஷயம் மட்டுமில்லை — உன்ர புருஷன்ர சாதியும் தான் எனக்குப் பேசின வியாபாரத்தில அடிபட்பட்டது. ஞாபகத்தில வைச்சிரு. மலர் செய்தது பிழையெண்டா நீ செய்தது மட்டும்..?''



ஒருவர்: என்ன பாதுகாப்புக்குக் குழி வெட்டி விட்டீர்களா?

மற்றவர்: என்ர வீடு றோட்டுக் குப்பக்கத்தில இருக்கிறதால வெட்டேல்ல...

ஒருவர்: என்ன?

மற்றவர்: றோட்டில கிடக்கிற பள்ளங்களில ஒரு நகரமே பாதுகாப்புத் தேடலாம்.

— மேகலா சிவப்பிரகாசம்

''அவளின்ர வாழ்க்கையில இனி எந்தத் தடையுமிருக்கக் கூடாது. இருக்கவும் விடமாட்டன். அவளின்ர கெட்டித்தனத்துக்கு அவள் நல்லாப் படிச்சு, நல்ல நிலைக்கு வரவேணும். அதுவும் நாங்கள் இந்த நிலையில இருந்தால் நாளைக்கு அவளைக் கட்டப் போறவன்ர சாதியை வைச்சு இந்தச் சமுதாயம் — சொந்தங்களும் எங்களைக் கேவலம் படுத்த இடமாப் போயிடும். வருங்காலத்திலயாவது எங்கட குடும்பமும் மற்றவைன்ர குடும்பங்களைப் போல இருக்க வேணும். நாங்களும் கௌரவமா இருக்க வேணும். எல்லாத்துக்கும் காசு தானே காரண கர்த்தா? அதுக்காண்டியாவது அவன் கொஞ்சக் காலத்துக்குப் போய் உழைச்சிட்டு வரத் தான் வேணும்'' அக்கா தீர்மானமாகக் கூறிய போது அந்தப் பேச்சை எதிர்த்துக் கதைக்கும் உணர்வு யாருக்கும் வரவில்லை.

''தம்பி! நீ மற்றவைன்ர கதையளைக் கேட்டுப் பின் வாங்காதே. மற்றவையா நாங்கள் கஷ்டப்படேக்கில ஒரு பிடி சோறு தந்தவை? மற்றவையா எங்களை வாழ வைக்கப் போகினம்? எங்களுக்கு நாங்கள் தான் ராசா துணை. நீ ஒண்டுக்கும் யோசியாதே. இருக்கிறதை வைச்சு அவளின்ர கலியாணத்தைச் செய்வம்'' என்று மூத்தக்கா சொல்லிக் கொண்டு வரும் போது ஆவேசமாகக் குறுக்கிட்டாள் சின்னக்கா.

''ஏன்... உனக்கில்லாத வாழ்கை எனக்குத் தேவையா? நீ மட்டும் சீதனம் கேக்கிற மாப்பிள்ளையைத் துரத்தியடிக்கிறாய். நான் இன்னொரு சீதனப் பிசாசோட மாரடிக்க வேணுமா? 'சீதனம் மாதிரி நினைக்க வேண்டாம்' எண்டு சொல்லிச் சொல்லியே அவையள் கேக்கிற ஒவ்வொண்டையும் மொத்தமாப் பாத்தா ரெண்டு கலியாணம் நடத்திடலாம். அப்ப... நீ சொன்ன அதே காரணங்கள் எனக்கு மட்டும் நடக்காதெண்டு என்ன நிச்சயம்? தம்பி! நீ எனக்குக் கலியாணம் பேசேக்கில நான் வாயை மூடிக் கொண்டிருந்தனான். அக்காவின்ர காரியம் முதலில ஒப்பேற வேணுமெண்டதுக்குத் தான். எனக்காக நீ வெளியில போய்க் கஷ்டப்பட வேண்டாமெண்டு எத்தினையோ தரம் கெஞ்சிக் கூடப் பாத்திட்டன்' என்ர ராசா !எனக்கிந்தக் கலியாணம் வேண்டாமடா. அக்காவுக்கில்லாத வாழ்க்கை எனக்கு வேண்

டாம். அக்கா வாழாவெட்டியா வாழ, நான் குடியும் குடித்தனமுமா இருக்க என்ர மனம் கேளாது. எனக்குக் கலியாணம் வேண்டாம். கலியாணம் வேண்டாம்.'' விசரி மாதிரிச் சின்னக்கா கத்திய போது எல்லோரும் விக்கித்துப் போயிருந்தனர்.

அந்தக் கணம்... அவனுக்குத் தலையில் பெரிய பாறாங்கல் விழுந்தது மாதிரி- நெஞ்சில் ஆயிரம் ஈட்டிகள் ஒரே நேரத்தில் பாய்ந்தது மாதிரி- முதுகில் பலமாகச் சாட்டையால் மொத்தியது போல்... உடலெங்கும் உணர்ச்சிகள் விதிர் விதிர்த்து, மனம் தாங்க முடியாத வேதனையுடன் 'விண்' ணென்று நெருடி வலித்தது.

''உண்மையிலேயே ரெண்டு அக்காமாரும் சமுதாயப் புரட்சிக்கு அத்திவாரம் போடத் தீர்மானிச்சிட்டினமா? இல்லாட்டி யாரால பெரிய தியாகம் செய்ய முடியுமெண்டு போட்டி போட்டுப் பாக்கினமா? ஒரு வேளை நான் அவைன்ர விஷயங்களில ஏதாவது பிழை விட்டிட்டன் எண்டு நினைச்சு என்னைத் தண்டிக்கினமோ? ஏன் இப்படி ரெண்டு பேரும், சின்னப் பிள்ளையள் மாதிரி யோசியாமல் முடிவெடுக்கினம்? இவையளுக்கு ஏதாவது மன வியாதியோ?'' அவனால் ஒன்றையுமே நிதானிக்க இயலவில்லை. சின்னக்காவைக் கோபத்தோடு- ஆற்றாமையோடு முறைத்துப் பார்த்தான். அவள் முகத்தை மூடியழுது கொண்டிருந்தாள். மூத்தக்கா தானெறிந்த கல் திரும்பித் தன்னுடைய நெற்றிப் பொட்டிலேயே வந்து விழுந்துவிட்ட அதிர்ச்சியில் வாயடைத்துப் போயிருந்தாள். மலரும் சின்னக்காவையே மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ர ராசா..! என்னையேன் விட்டிட்டுப் போனனீர் அப்பு! இந்த நாசமாப் போன குடும்பத்தில என்ன சீரைப் பாக்கச் சொல்லி என்னை விட்டுட்டுப் போனனீர்? என்ர ஐயா! நான் உம்மட்டய வந்திடுறன். என்னைக் கூட்டிக் கொண்டு போணை. ஐயோ! நான் என்ன செய்ய... யாரிட்டச் சொல்லியழ? கடவுளே! உனக்குக் கண்ணே இல்லையா? நான் ஏன் இனி இருக்க வேணும்? யாருக்காண்டி வாழ வேணும்?'' தலையிலடித்து அழுத அம்மாவை ஆறுதல் படுத்த வேண்டும் என்று யாருக்குமே தோன்றவில்லை.

இந்தத் தாய் எதற்காக அழுகிறாள்? சீதனம் கேட்ட மாப்பிள்ளையை அவமானப்படுத்தியது - கலியாணம் வேண்டாமென்று சொல்வது, சாதிக்குப் பயப்பிடாமல் காதலிப்பது... இதெல்லாம் தன்னுடைய பெண்களின் தவறான நடத்தையென்று நினைத்துவிட்டாளா? அதற்காகவா இவ்வளவு கண்ணீர்? தன்னுடைய பெண்களைப் பார்த்து- அவர்களுடைய முடிவுகளை நினைத்துப் பூரிக்கவேண்டாம்? சந்தோஷப்பட வேண்டுடாம்? பெருமைப்பட வேண்டாம்? அவர்களுடைய நியாயங்கள் அவளுக்குச் சரியாகப்படவில்லையா?

'கல்யாணம்' என்றால் என்ன? இந்தக் காலத்தில் அதற்கு என்ன மதிப்பு, மரியாதை கொடுக்கிறார்கள்? 'திருமணம்' என்ற சொல்லுக்கு இங்கு என்ன அர்த்தம்?

தற்போது 'கல்யாணம்' என்ற பெயரில் பெண் வீட்டார் விலைவாசி கூடிய மாப்பிள்ளையை நஷ்டத்திற்கும் -கஷ்டத்திற்கும் வேண்டுவதும், தங்கள் ஆண்பிள்ளைகளை கொள்ளை லாபத்தில் மாப்பிள்ளை வீட்டார் விற்பதுமாக ஒரு வியாபாரமாக மாறிவிட்டதே...? 'திருமணம்' உண்மையில் இளமை - பருவவெறி அதாவது காமம். இரண்டினதும் தாகத்தைத் தீர்க்க மேற்கொள்ளப்படும் லைசன்ஸ் வழங்கப்பட்ட 'விபச்சாரம்' அதுதான் உண்மை. இதுதான் நடைமுறை. ஆனால் வெளியில்... 'புனிதமான அர்த்தம்' 'தெய்வீக உறவு - பந்தம்...' இதற்குத்தானா இவள் அழுகிறாள்?

வியாபாரம்- விபச்சாரம்- இதனால் கிடைக்கப் போகும் பலன் புதிய வாரிசுகள். இருபது, இருபத்தைந்து வருடங்களின் பின் விலை போக வேண்டிய வியாபார உடல் அல்லது விபச்சாரம் செய்ய வேண்டிய உடல்... இதற்குப் பெயர் குழந்தை-குடும்பம். அதே பழைய கதை தொடரப் போகிறது எந்த விதமான மாற்றமுமில்லாமல். அவ்வளவு தானே...? இதற்குத் தானா...? இது வாழ்க்கையில் ஒரு அத்தியாவசியமென்றா...? இது இல்லாமல் வாழ முடியாதா...? எதற்காக இந்தத் தாய் உயிரை மாய்க்கும் அழுகை அழுகிறாள்?

இரண்டு உடம்புகளின் சேர்க்கைக்கு- இச்சைக்கு வடிகாலான கல்யாணத்திற்கு ஒரு சீதனம்—ஒரு எழுத்து— ஒரு தாலிகட்டு அப்படித் தானே...? முன் பின் அறியாத இரண்டு உள்ளங்கள் + உடல்களின் இச்சைக்கு — சேர்க்கைக்கு சீதனம் லஞ்சமா? அல்லது பெண் வீட்டிடம் விலை போன ஆண் வடிவத் தசைப் பிண்டம் தானும் தன் குடும்பமும் வாங்கிய ஆயிரங்களுக்கும், லட்சங்களுக்குமான வேலையை= அது வியாபாரத்தில் விலை போன போது, அதை விலை கொடுத்து வாங்கிய பெண் உடலுடன் 'விபச்சாாம்' செய்வதில் தனது கடமையை நிறைவேற்றுகிறதா? என்ன இது? இது தான் வாழ்க்கை? எத்தனை நாளாக இந்தப் பழைய அவல் மெல்லப்படுகிறது? இன்னும் எத்தனை நாட்களுக்கு மெல்லுவது? எப்போது இது விழுங்கப்படும்? என்றாவது ஒரு நாள் இது செரிக்குமா? இதை ஏன் இந்தத் தாய் புரிந்து கொள்ளவில்லை? இந்த விலங்குகளிடம் சிறைப்படாது விதிவிலக்காக இருக்க நினைக்கும் தன் பெண்களுக்கு ஆசீர்வாதம் வழங்காமல் இவள் அழுகிறாளே!

இவளுக்கு கலியாணம்- கொண்டாட்டம்-அலங்காரம் இத்யாதி மேல் மோகமா? மற்றவர்களைப் போல் தன் வீட்டிலும் ஆடம்பரங்கள்-விலையுயர்ந்த மாப்பிள்ளை வேண்டும் என்று ஆசைப்படுகிறாளா? தன்னுடைய பெண்களை புருஷன்-பிள்ளைகளோடு வாழ வேண்டும் என்பது அவளைப் பொறுத்தவரை நியாயமாக- ஆசையாக இருக்கலாம். ஆனால் அந்த நியாயத்தை விட அவளுடைய பெண்களின் முடிவி

லுள்ள அர்த்தங்களை, நியாயங்களைப் புரிந்தும்-விலக்கி விட வேண்டிய விலங்குகளை விலக்க நினைக்காமல், மனிதாபிமானங்களை மடியச் செய்ய- குடும்பத்தின் கௌரவத்தை, உரிமைகளைச் சிறையிட-அனுமதி வழங்க இவள் ஏன் விரும்புகிறாள்? நாளைக்கு ஊர் நாலு விதமாகப் பேசப் போவதையெண்ணி இப்போதே அழுகிறாளா? தன் அழுகையை நிறுத்தி-ஊரை ஒதுக்கி வாழ முடியும் என்ற நம்பிக்கையில்லாத யாழ்ப்பாணத் தாய்மார்களின் ஒரு மாதிரி இவள்.

❖ ❖ ❖

நேற்று இரவு யாருமே சாப்பிடவில்லை. எத்தனையோ இரவுகளை சாப்பிடாத இரவுகளாக அந்தக் குடும்பம் கழித்திருந்தாலும் நேற்றைய இரவு வித்தியாசமானது. அவனுடைய மனதில் ஒரே சஞ்சலம். தூக்கத்திற்காக அந்தக் கணம் ஏங்கினான். ஏதோ ஓர் உணர்வு மூட விரும்பிய இமைகளைப் பிடித்திழுத்து நிறுத்திக் கொண்டிருந்தது. படுக்கையில் படுத்திருந்தாலும் யாரும் உறங்கவில்லை. அவர்கள் உறங்கும் பாவனைகள்.

இரவு பயங்கரமான அமைதியோடு பிணைந்திருந்தது. மங்கலான குப்பி விளக்கின் ஒளி அவனுடைய கால்மாட்டில் நின்ற மலரின் நிழலை அடையாளம் காட்டிய போது அவன் யோசனையுடன் அவளைப் பார்த்தான். 'என்ன?' என்று கேட்க நினைத்துக் கேட்காமல் புரண்டு படுத்துக் கொண்டான்.

அவனுக்கு கவலையாக இருந்தது. அவன் கூட மலரை வெறுக்கிறானா? அவனுக்கும் அந்த மாப்பிள்ளையைப் போல் மலரின் காதல் பிழையாகத் தெரிகிறதா? அவனுடைய அனுமதியுடன் தான் மலர் அந்த இளைஞனை விரும்பினாள். அவர்களிருவருடைய படிப்பும் முடிந்த பின் இருவருக்கும், திருமணம் செய்து வைப்பது தன்னுடைய பொறுப்பு என்று அவன் தான் சத்தியம் செய்து கூடக் கொடுத்திருக்கின்றான்.

"சாதி குறைஞ்சவன்" என்று அம்மா ஆரம்பித்த போது "சாதி என்ன சாதி? மண்ணாங்கட்டி. எதவைச்சு உயர்ந்த சாதி, குறைஞ்ச சாதியெண்டு பிரிச்சுப் பாக்கிறியள்? தொழிலை வைச்சா? கொலையையும், கொள்ளையையும் தவிர மற்றதுகளெல்லாம் நல்ல தொழில் தான். ஏன்... நானே... இந்த டிரைவர் வேலை கிடைச்சிருக்காட்டி மரமேறவோ, மீன் பிடிக்கவோ, கான் கழுவவோ போயிருப்பன். அப்ப நானும் குறைஞ்ச சாதியா? என்னம்மா உங்கட கதை? வேற என்னத்தை வைச்சு அவங்களைக் குறைஞ்ச சாதியெண்டு சொல்லுறியள்?"

"அவன்ர ரெத்தமும் எங்கட ரெத்தத்தம் போல சிவப்புத் தான். அவனும் எங்களப் போல ரெண்டு கை, கால் மனுசன் தான். ஏன் வித்தியாசமா அவங்களிட்ட நாலு கை காலா எங்கயாவது பாத்திருக்கிறியா? அவனுக்கும் முப்பத்திரண்டு பல்லுத் தான். உனக்கும் அப்பிடித் தானே? அவன்ர உடலமைப்பில எதுவும் உங்கட உயர்ந்த சாதிக்காரரிண்ட உடலமைப்பிலயிருந்து வித்தியாசமில்லை. அவங்களும் உழைச்சுத் தான் சம்பாதிக்கிறான்கள். எல்லாரையும் போலத் தான் அவங்களும் கலியாணம் முடிச்சுப் பிள்ளை பெறுகிறான்கள். பழக்க வழக்கம், குணம், நடை கூட சொல்லப் போனா நீ சொல்லுறியே உயர்ந்த சாதி... அவைன்ர பழக்க வழக்கத்தை விடத் திறமாத்தானிருக்கு. பிறகென்...?"

"எனக்குத் தேவை என்ர தங்கச்சியக் கண் கலங்காம வைச்சிருக்கக் கூடிய நல்ல பெடியன் தான். அவன் என்ன சாதியெண்டாலும், என்ன சமயமெண்டாலும் எனக்கதைப் பற்றிக் கவலையில்லை" என்று அம்மாவின் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்ததும் அவன் தான். அதற்குப் பிறகு அவனுடைய பேச்சுக்கு அம்மா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அந்த தைரியத்தில் தான் அவன் கூட மேரியைக் காதலிக்கிறான்.

அப்படியிருக்க... இன்று மலர் தான் தவறு செய்து விட்டது போல் அவளை மட்டும் தனியே தள்ளி வைத்து ஏன் கோபப்படவேண்டும்? ஒரு குற்றவாளியைப் போல் அன்று முழுவதும் கூனிக் குறுகி அழுது கொண்டிருக்க - இவன் பார்த்துக் கொண்டு தானே இருந்திருக்கிறான்? ஏன் அவளுடைய அழுகையைநிறுத்த நினைக்கவில்லை? அவளுக்கு ஆறுதலை சொல்லித் தேற்ற வேண்டும்-தைரியம் கொடுக்க வேண்டுமென்று ஏன் தோன்றவில்லை? அந்த நிமிடத்திலிருந்து அவனுடைய சுயம் மாறிவிட்டதா? ஆக... அவனும் சாதாரண மனிதன் தானா? அவனுடைய உணர்வுகளே அவனைக் கீழ்த்தரமாக நோட்டமிட்ட போது - இப்போதே மலரிடம் மன்னிப்புக் கேட்டு விட வேண்டுமென்ற துடிப்போடு புரண்டு எழுந்தான். ஆனால் அங்கு மலரில்லை.

"அண்ணன் தன்னோடு கதைப்பான், என்று வந்திருப்பாளோ? நான் கதையாமல் திரும்பிப் படுத்ததும் கவலைப்பட்டு, அழுது கொண்டு போய்ப் படுத்திட்டாளோ?"

உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

"மலரா .. என்னடி... எங்க போனாய்?"

"ஒண்டுக்கு வருது... அது தான்..."

"தனிய போக மாட்டாய்... இண்டைக்கு என்ன புதிசாய்?"

"எனக்கென்ன பயம்? வளவுக்கிள தானே? அண்ணையைக் கூட்டிக் கொண்டு போறன் நீங்கள் படுங்கோக்கா..."

"இல்லை. அவன் பாவம். அவனை எழுப்ப வேண்டாம். நாளைக்கு வெள்ளனையோட அவன் எழும்ப வேணும். வா... நான் வாறன்..."

"இல்லையக்கா... அண்ணா முழிச்சுக் கொண்டு தானிருக்கிறார். அவரைக் கூட்டிக் கொண்டு போறன்"

"முழிச்சிருக்காம கெதியா அவனை நித்திரை கொள்ளச் சொல்லடி, அவனுக்கு என்னில கோபமா இருக்கும். பாவம். நீ போய்ச் சொல்லு."

"பாவம் மூத்தக்கா. ம். எனக்கென்ன கோபமக்கா உன்னில. உனக்காண்டித் தானே எல்லாம்..." என்று இங்கே அவன் தனக்குள் பெருமூச்சு விட்டான். மலர் தன்னை எழுப்ப வருவாள் என்று எதிர்பார்த்திருந்த அவன் சில நிமிடங்களாகியும் வராததால் யோசனையுடன் படுக்கையை விட்டு எழுந்தான். ஏதோ ஐமிச்சத்துடன் வீட்டின் பின்பக்கம் போனான்.

அங்கே...!

"தங்கச்சி... என்ர ராசாத்தி!", நல்ல வேளை அவன் அந்த நேரம் வந்திருக்கா விட்டால் என்ன கொடுமை நடந்திருக்கும்?

"ஏனடி இப்படியொரு முடிவுக்கு வந்தனீ? உனக்கு அண்ணன் நானிருக்கிறன் எண்டது ஞாபகமில்லையே? உங்கள் எல்லாருக்கும் நான் ஒருத்தன் இருக்கிறது கண்ணில படேல்லையே? என்ர ராசாத்தி! அண்ணாவைத் தவிக்க விட்டிட்டுப் போக வேணுமெண்டு எப்பிடியாச்சி உனக்கு மனம் வந்தது?" அவன் அவளைக் கட்டிக் கொண்டு புலம்பினான். 'அண்ணை...' 'அண்ணை' என்று ஒரேயொரு வார்த்தையைமட்டும் ஒப்பித்துக் கொண்டிருந்தாள் அவள்.

'என் மலர் இப்பிடிச் செய்யப் போனனீ?"

"என்னால தானே அக்காமார் கலியாணம் வேண்டாமெண்டுசொல்லினம்? நான் சாதி குறைந்தவரை விரும்பினதால தானே அக்காவுக்குப் பேசின மாப்பிள்ளை சீதனம் கூடக் கேக்கிறார்? எனக்காண்டித் தானே மூத்தக்கா அவரை அப்பிடிப் பேசிக் கலைச்சவ? நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ரெண்டு பேருக்கும் கலியாணம் முற்றாக்கினனியள்? அம்மா எவ்வளவு சந்தோஷமாயும், நிம்மதியாயும் இருந்தவ? இப்ப எல்லாம் என்னால தானே குட்டிச்சுவரா- நாசமாப் போச்சு. என்னால அவரை மறந்து வாழ முடியாது. அக்காமார் ரெண்டுபேரும் வாழாம இருக்க அவரோட வாழவும் என்னால முடியாது."

"உங்களிட்டக் கேட்டு- உங்கட அனுமதியோட தானே அண்ணை அவரை விரும்பினனான்? இப்ப நீங்களே என்னில கோவிச்சுக் கொண்டு கதையாமல் இருக்கிறியளெண்டா நீங்களும் என்ர விஷயத்தால அக்காமாற்ர வாழ்க்கை பாழாகிட்டுதெண்டு வெறுக்கிறியளெண்டு தானே அர்த்தம்? அதால தான் யோசிச்சுப் பார்த்தன். என்ர அக்கா ரெண்டும் நல்லா வாழ வேணும். அதுக்கு என்னால இதத் தவிர வேற எதுவும் செய்ய வரேல்லையண்ணை." விம்மலுடன் மலர் கூறிய போது அவன் தனது செய்கையை நினைத்து வெதும்பினான் அவனை விட அக்காமாரை நினைத்து அவள் வேதனைப்பட்டது அதிகம் என்று உணர்ந்த போது அவனுள் ஒரு உணர்வு வெட்கத்துடன் ஒடுங்கித் தலைகுனிந்து கொண்டது.

"என்னண்ணை பேசாமலிக்கிறியள்..? என்னில கோபமே? நான் செய்தது பிழையே?"

"விசரி அக்காமார் வாழ வேணும் அக்காமார் வாழ வேணும், எண்டு தான் உனக்கு யோசிக்கத் தெரியுதே தவிர... உன்ர சாவால அவையளின்ட வாழ்க்கை நிரந்தரமா நாசத்தில விழுமெண்டதை மட்டும் யோசிக்கத் தெரியேல்லையே! திடீரெண்டு நீ தற்கொலை செய்ய நாளைக்கு இந்த அயலட்டை, ஊர், உலகம் எல்லாம் உன்ர ஒரு சாவுக்கு ஆயிரம் காரணம் சொல்லும். உனக்கென்ன... நீ நிம்மதியாச் சாவாய்' ஆனால் உன்ர ஒரு சாவால வரப் போற அவப்பெயரும், பழியும் எந்தஅக்காமார்வாழவேணுமெண்டு நீ ஆசைப்படுறியோ அவையின்ரவாழ்க்கையையே ஒரேயடியாப் பறிச்சிடும்,

"ஏற்கனவே... சாதிகுறைஞ்சவனை நீ விரும்பிறது வெளியில பரவிட்டுது. எங்களுக்குத்தான்உன்னைப் பற்றியும், உன்ர நடத்தையைப் பற்றியும் வடிவாத் தெரியும். ஆனா ஊருக்கு..? உன்னைப் பற்றி நல்லாத் தெரிஞ்சாக் கூட நல்லவிதமாப் பேச நினைக்காது இந்தச் சமூகம். இப்ப நீ சாக- நீ வாயில வயித்தில வாங்கிக் கொண்டு செத்திட்டாய், அவன் உன்னைக் கைவிட்டிட்டான், இந்தக் குடும்பமே இப்பிடித்தான் எண்டு பேசுமே தவிர, அந்த மாப்பிள்ளை சாதியைக் காட்டிச் சீதனம் கேட்டது பிழையெண்டோ, அக்காமார் வாழ வேணுமெண்டு தான்நீ செத்தனியெண்டோ சொல்லாது எங்கட குடும்பத்துக்கு மட்டுமில்ல, நல்லதை நினைச்சா நீ செய்யப் போறதை புனிதமான தியாகத்துக்கும் அவமானம் தான் கிடைக்கும். இது தேவையா?"

"அண்ணை!"

"எடியேய்! அவன் உன்னை உயிருக்குயிரா விரும்பிறானெல்லே? சொல்லடி... விரும்பிறன் தானே?" அவனுடையகேள்விக்கு மலர்மெள்ளமாகத் தலையை ஆட்டினாள்.

"ஆ...அப்ப உன்ர சாவால எத்தனை பேர் சாகமல் சாகப் போயினமெண்டு யோசிச்சியா? உன்னை உயிருக்குயிரா விரும்பிற அவன் பிறகு நடைபிணமாத் திரியமாட்டானா? சொல்லடி" அவளைப் பிடித்து உலுக்கினான்.

"அண்ணை" அவனுடைய நெஞ்சில் சாய்ந்து குமைந்து குமைந்து அழுதாள் மலர்.

"அண்ணை... இப்ப ஏன் என்னைக் கூப்பிடுறாய்? இந்த வேலை செய்ய முன்னம் அண்ணைன்ர ஞாபகம் எங்க போச்சுது? நான் மட்டும் ஒரு கணம் பிந்தியிருந்தா இந்த நேரம் என்ன நடந்திருக்கும்? அண்ணையாம் அண்ணை. அண்ணனில ஒரு துளியாவது பாசமிருந்தா எல்லாரையும் மறந்து-இந்த அண்ணனையும் விட்டிட்டுச் சாக நினைச்சிருப்பியா?"

"இல்லையண்ணை... நான்...வந்து ... அக்கா... மூத்தக்கா... சின்...' பேச வார்த்தைகள் வராமல் அழுகையுடன் தவித்த அவளை அன்புடன் அணைத்து ஆதரவுடன் தலையை வருடிக் கொடுத்தான். "பாவம் அவள் சின்னக் குழந்தை தானே? வேறு என்ன செய்ய முடியும் அவளால் அவளால் இதைத் தவிர...?"

"நீ செத்தால் தான் அக்காமார் வாழ முடியுமெண்டு ஒருக்காலும் நினையாதே. நல்லபடியா அவையள் வாழுறதை உயிரோட

இருந்து- உன்ர கண்ணுல பாக்க வேணுமெண்டு சபதம் போடு. மலர்! நான் கனக்கப் படிக்கேலைத் தான். ஆனு என்ர மனசில இருக்கிற வைரம் உங்கள் எல்லாரையும் நல்லபடியா வாழவைக்க வேணுமெண்ட ஒண்டுதான். எங்கட ஐயா குடிச்சுக் குடிச்சுக் குட்டிச் சுவராக்கின இந்தக் குடும்பத்தை கோபுரத்தில ஏத்தி வைக்காம விடமாட்டன்.''

''இந்த ஊர் என்ன கதைச்சாலும் நான் பயப்பிடப் போறதில்லை. உனக்கு நீ விரும்பின அவனைத் தான் கட்டி வைப்பன். என்ர அக்காமார் என்ன மாதிரி விருப்பப்படினமோ அப்பிடியே அவைன்ர வாழ்க்கையை அமைச்சுக் குடுப்பன். இது சத்தியம். அந்தக் கடமையை முடிச்சப் பிறகுதான் எனக்கு நிம்மதியான நித்திரை வரும். அது வரைக்கும் நீ பொறுமையா இருக்க வேணும். இப்பிடி இன்னொருக்கா விசர்த்தனமொண்டும் செய்யமாட்டனெண்டு அண்ணை மேல சத்தியம் செய்து தா ராசாத்தி!'' என்று அவன் கண் கலங்கக் கேட்டபோது அவள் வாயைப்பொத்திக் கொண்டு குமுறியழுதாள்.

''அண்ணை! அண்ணேய்!' தேவராசாவின் குரல் கேட்டுச் சுய நிலைக்கு வந்தபோது பஸ் மறுபடி துள்ளத் தொடங்கியது. ''ம்.. ரெண்டாவது கண்டம்!...''

''அது... அதுக்கிடையில ஆனையிறவு வந்திட்டுது என்ன?''

ஏற்கனவே பலலொறிகளும், மினிவான்களும், இரண்டொரு சி. ரி. பி. பஸ்களும், மற்ற சொகுசு பஸ்களும் வரிசையில் நின்றன. தன்னுடைய பஸ்ஸையும் அந்த வரிசையில் நிறுத்திவிட்டு சோம்பல் முறித்துக் கொண்டான். கை விரல்களின் தீர நெட்டி முறித்து விட்டான். தமது படபடப்பையடக்கியபடி பிரயாணப் பொதிகளையும், தமது அடையாள அட்டைகளையும் திருப்பித் திருப்பி சரிபார்த்துக் கொண்டனர். 'வரச்சொல்லி' அங்கிருந்து சைகை வர கூப்பிட்ட சொல்லுக்கு ஓடிப் போக வேண்டிய விதியில் இவர்கள் பொதிகளுடன் வரிசையாகப் போகிறார்கள்.

சுதந்திரமாகத் திரிந்த மனிதனின் பாதைகளில் சட்டங்கள் கணக்கின்றிப் பல பரியர்களைப் போட்டிருக்கிறது. இது மனிதனைச் சட்டத்துக்குட்படுத்தவா? இல்லைச் சாகடிக்கவா? ஆனல் இங்கு இரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை.

இரண்டு பேர் கனரக இத்யாதிகளுடன் பஸ்ஸினுள் ஏறிச் சோதிக்கும் பாவனையில் பஸ்ஸின் அந்தம் வரை போய் வருகிறார்கள். அவனிடமும் தேவராசாவிடமும் தேசிய அடையாள அட்டைகளை வேண்டிப் பார்த்துவிட்டு ''நம மொகாத?'' என்று கேட்கின்றனர். இவர்கள் சொன்னது காதில் விழுந்ததோ என்னவோ பஸ்ஸை விட்டிறங்கி, லக்கேஜ் பகுதியைத் திறக்கச் செய்து, சோதித்துவிட்டுப் போனார்கள்.

முகாமிலிருந்து இன்னெருபடைவீரன் இவர்களிடம் வந்து விசாரிக்கிறான். யாழ்-கொழும்பு பஸ் சேவையினுல் இவர்களுக்கும் அந்தப் படைவீரனுக்கும் பழக்கமாயிருந்தது. ஒவ்வொரு 'ரிப்'பிலும் அநேகமாக அவன் இவர்களைச் சந்தித்துக் குசலம் விசாரிப்பது வழக்கமாகிவிட்டது.

''கோமத?'' - (எப்பிடி?)

''கொந்த'' - (நல்லது.) - இது இவனின் பதில்.

''கௌத ஓய பத்த? ரிறபில்ஸ் நா நேயத?'' (எப்படி உங்கள் பக்கம்? குழப்பங்களில்லை அல்லவா?)

''கமக் நா'' (பரவாயில்லை.) என்று அவன் உயிரில்லாமல் கூறுகிறான். எத்தனையோ இளைஞர்கள் இறந்துவிட்டனர்; எத்தனையோ பேரைக் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள்; என்ற உண்மைகளைச் சொன்னல் மட்டும் இந்தப் படைவீரன் என்ன செய்து விடப் போகிறான்? அந்தப் படைவீரனல் என்ன செய்து விட முடியும்? ஆக... வாயளவில் நண்பர்கள். அடுத்த ரிப்'' பஸ் வரும் வரை இவர்களை அவன் மறந்திருப்பான். கண்டவுடன் ஒரு ''கலோ'', ஒரு ''கோமத'' அவ்வளவு தானு? அவ்வளவே தானு...? உயிரோடும், ஆத்மாவின் உணர்வுகளோடும் ஒன்றிணைந்து, எங்களைப் புரிந்து, உண்மையான அன்பு செலுத்தும் ஆத்மார்த்தமான சிநேகம் வராதா? கடைசி வரைக்கு... ம் ?

அந்த ஆயுதந்தாங்கி எதையோ நினைத்துப் பெருமூச்சு விட்டான். இவர்களுக்கும், அவனுக்கும், இதில் தான் ஒற்றுமை. இவர்களைப் பார்த்து வரட்சியாகப் புன்னகைத் தான்.

தேவனைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான். ''ஒய... கரியட்ட, அப்பே மல்லி வாகே'' (நீ சரியா எனது தம்பியைப் போலிருக்கிறாய்.) என்றான். கண்ணில் சிறிய அன்பின் ஒளி மின்னி மறைந்த போது மீண்டும் ஒரு பெருமூச்சுடன் ''றைட், ஷால் வீ மீட் நெக்ஸ்ட் ரிப்'' என்று கூறிக் கொண்டு, கையசைத்து விடை கொடுத்து விட்டு முகாமினுள் போய் விட்டான்.

அந்த ஆயுதபாணிக்கும் பெருமூச்சுகள் அறிமுகமானவையாயிருக்கின்றன. அவனுக்கும் கவலைகளிருக்கின்றன. ஓ! அவனும் பாவம் தான். அப்படியானல் எல்லோருக்கும் துயரங்கள் செரிக்காமலிருக்கின்றன. தீயை விழுங்கமுடியாது. ஆனல் அணைக்க முடியாதா?

அவன் தேவனைப் பார்த்துக் கேட்கிறான், ''ஏன் தேவன்...! இவங்கள் ஒரு நேரம் நல்லவன்களாக் கதைக்கிறான்கள். இன்னெரு நேரம் சுயம் மாறி விடுறாங்களே ஏனடா?''

தேவன் புன்னகையுடன் சொன்னன், ''அவங்கட சுயமே அது தான் அண்ணை'' 'போகும்படி' சைகை கிடைக்க பஸ் மெதுவாகப் புறப்படுகிறது.

ஒரு அசம்பாவிதம் நடந்து பல நாட்களாக வட பகுதியில் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போக்கு

வரத்துகள், மீண்டும் தொடங்கி இரண்டு மூன்று நாட்கள் தான் என்பதால் சோதனைகளும், கேள்விகளும், கதைகளும் கடுமையாகவே இருந்தது. சகல பயணிகளும் பஸ் பரிசோதனைப் பிராந்தியத்தை விட்டு வெளி வந்த பின் தான் சாஸ்வதமாக நிம்மதியுடன் இருக்கைகளில் சாய்ந்தனர்.

* * *

பஸ்ஸின் வேகமும், அவனுடைய சிந்தனையின் வேகமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு போகின்றன. வழியெங்கும் தந்திக் கம்பங்களும், மரங்களும் விடைகொடுத்துக் கொண்டு நின்றன. வீதியெங்கும் ஒரே பள்ளங்கள். பஸ்ஸினுள் பிரயாணிகள் அடிக்கடி குலுங்கியெழும்பி இருந்தனர்.

''ம்... இனி வவுனியா மட்டும் இப்பிடித்தான். பஸ்ஸூம், 'குண்டுகளும் ரோட்டை நல்லாப் பதம் பாத்திருக்கு''

''யாரைக் குறை சொல்லிறது? 'உரலுக்கு ஒருபக்கம் இடியெண்டா, மத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் அடியாம்.' அப்பிடியிருக்குது எங்கட கதை. என்னத்தைச் சொல்லமுடியும்? எல்லாம் எங்கட தலைவிதி. அவ்வளவுதான்.''

''நன்மை தீமையெண்டு எல்லாத்தையும் விதின்ட தலையில போட்டு விடுறதால தான் நாங்கள் இவ்வளவு இழப்புகளையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறம். என்னண்ணை?'' தேவன் கேட்டது அவனுக்குக் கேட்கவில்லை. அவனுடைய சிந்தனைகளொவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் பறந்து கொண்டிருந்தன.

தேவன் குறும்புடன் அவனுடைய காதைப் பிடித்து இழுத்தான். ''என்னண்ணை! பஸ் கிளிநொச்சிக்குப் போறதுக்கிடையில், நீங்கள் அங்க போயிடுவியள்போல இருக்கே...'' என்று கேட்டபோது அசடு வழிந்தபடி ''சும்மா இரடா அலம்பாமல்'' என்றான்.

''உங்கட பஸ் இண்டைக்கு வருமெண்டு அண்ணிக்குத் தெரியுமே?''

''இல்லையடா. கன நாளைக்குப் பிறகு இண்டைக்குத் தானே பஸ் போகுது.''

''அப்ப ஏன் வீணா ஃபாஸ்டாப் போறியள்? அவவைக் காணாட்டி என்ன செய்யிறது?'' வேண்டுமென்ற தேவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் புன்னகைத்தான். பதில் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. ஏனென்றால் அவள் 'அவனுடைய பஸ் எப்போது வரு'மென்று வீதியையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு செய்தி அனுப்ப வேண்டிய அவசியமேயில்லை என்று தேவனுக்கு நன்றாகத் தெரியும்.

எங்கேயோ வாழ்ந்த அவனும் - எங்கேயோ இருக்கும் அவளும் சந்தித்தது பார்த்தது, உணர்ந்தது, பேசிப் பார்குமுன்பே விரும்பியது... எல்லாமே அதிசயமாயிருக்கிறது. எப்படித்தமது காதலை; நிறைவேற்றுவது என்பது கூட இன்னும் அவனுக்கு அதிசயமாகத்தான் இருக்கிறது. இது வரை அவளும் 'கல்யாணம்' என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. அவனும் அதைப் பற்றிப் பேசாமலிருக்கிறான். ஆனால் எப்போதாவது ஒரு நாள் அதைப் பற்றிக் கதைக்க வேண்டிவருமா? அது கூட அவனுக்கு அதிசயமாக இருக்கிறது.

''ரெண்டு பேரும் காதலிக்கிறம்- ஏன்...? இதென்ன கேள்வி... கலியாணம் கட்டத்தான். கலியாணம்?...! யாருக்கு? எனக்கா? எனக்கும் அவளுக்குமா நடக்குமா? அவளும் நானும் சேர்ந்து வாழ்கை நடத்தப் போகிறோமா? மேரி... நல்லவள், வடிவானவள். எனக்கு அவ்வளவு அதிர்ஷ்டமா?'' என்று அடிக்கடி அதிசயத்துடன் நினைத்துப் பார்த்து, அடிக்கடி தனக்குள் சந்தோஷத்துடன் வெட்கப்பட்டுக் கொள்வான். எல்லாவற்றையும் விட பெரிய அதிசயமென்றால் தன் குடும்பத்திடம் எந்த விஷயத்திலும் பரகசியமாக இருக்கும் அவன் இந்த விடயத்தில் மட்டும் ரகசியமாக இருக்க எப்படி முடிந்தது என்பதுதான். ''காதல் கள்ளத்தைக் கூட கற்றுத் தருகிறது போலும்''

''இன்னும் கொஞ்சத் தூரந் தான்......ம்... இந்தா... இன்னும் கொஞ்சம்— இன்னும் சொட்டு... ஆ... அந்தா... அங்க... குடிசை தெரியுது - ரோட்டில... அவளின்ர தம்பிமார் தான் நிக்கினம்...'' அவனுடைய மனதுக்குள் ஆயிரம் பூக்களின் வாசனை 'கம்' மென்று உற்சாகத்துடன் வீசியது. குதூகலத்தின் துள்ளல் முகத்தில் பிரதிபலித்தது.

பஸ்ஸின் வாசல்படியில் இறங்கி நின்று ''அண்ணை! உங்கட மச்சான்மார் தான் ரோட்டில நிக்கினம். கனநேரமாப் பாத்துக் கொண்டு நிக்கினம் போல இருக்கு. அங்க... ஒரு வால் உள்ளுக்கில ஓடுது... நியூஸ் சொல்ல— ஹோனை அடியுங்க அண்ணை ஓடி வரட்டும்' என்று நேர்முக வர்ணனை செய்தான் தேவன்.

''போம்... போம் ..'' ஹோனை விடாமல் அடித்துக் கொண்டு பஸ்ஸை மிகமெதுவாக ஓட்டினான். காரணம் விளங்காத பயணிகள் பீதியுடன் ஜன்னலால் வெளியில் எட்டிப் பார்த்தனர். ''என்ன விஷயம் தம்பி .. ஏதும் வாகனங்கள் அங்கயிருந்து வருகுதோ?''

''தேவன் சிரித்துக் கொண்டு ''சச்சி... அதெல்லாம் இல்லை பெரியவர். அவைன்ர வாகனம் வந்தா இப்பிடிக் ஹோண் அடிக்க முடியுமே. இது வேற விசயம். நீங்கள் பயப்பிடாம இருங்கோ ஐயா'' என்று அந்தப் பெரியவரை அமரச் செய்தான். பிரயாணிகளின் பெருமூச்சுகளின் சத்தம் தேவனை என்னவோ செய்தது. ''ஒவ்வொரு கணமும் நீதியோடு போராட வேணுமென்று எங்கள் விதியா?'' அவன் பெருமூச்சு விடவில்லை. உடம்பினுள் உணர்வுகள் கொதித்துக் கொண்டு கதறியதை உணர்ந்தும் மௌனமாக நின்றான். ஒரு கணத்தில் துடித்த ஆவேசத்துக்கு ''காலம்

வரும்'' என்று ஆறுதலளித்துக் கொண்டு கவனத்தைத் திருப்பினான். "என்ன அண்ணியைக் காணேலை... பாவம்... அங்க... பார்... அண்ணன்ர முகம் போற போக்கை..." குடிசைக்கு முன்னால் மிகமிக மெதுமாக பஸ்ஸை ஓட்டிய அவன் வெளியில் எட்டி வீதியில் நின்றபடி தன்னை அண்ணாந்து பார்த்துச் சிரித்த அவளின் தம்பியிடம் "எங்கயடா உங்கட அக்கா?'' என்று கேட்ட போது அவனுடைய குரலில் பாதிக் கோபத்தையும், பாதிக் கவலையையும் தேவன் உணர்ந்தான்.

''அக்காவுக்கு ரெண்டு கிழமையா நல்ல காச்சல்.'' பஸ்ஸை ஆசையுடன் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டு நின்றான் சிறுவன்.

''காச்சலோ?'' தேகத்தில் துள்ளிய உற்சாகம் முழுவதும் வடிந்து போக அதிர்ச்சியுடனும், துயரத்துடனும் அவன் கேட்டான். அதற்குள் பாதி திறந்திருந்த ஓலைப்படலையின் மறுபக்கத்திலிருந்து அவளுடைய முகம் புன்னகையுடன் வெளித் தோன்றியது.

காய்ச்சல் வேதனையை மறைத்து, அவனைக் கண்ட மகிழ்ச்சி-புன்னகை முகத்தில் படர அவள் வந்து நின்ற கோலம், தேவனிடமிருந்து அவன் கொடுத்த கடிதத்தையும், பொட்டலத்தையும் பொக்கிஷத்தைப் பெறுவது போல் பூரிப்புடன் வாங்கிய கோலம், தன்னுடைய கடிதத்தைத் தேவனிடம் கொடுத்து, அவன் வாங்கிய போது வெட்கத்துடன் புன்னகைத்த கோலம், அவன் எவ்வளவுக் கெவ்வவு சந்தோஷத்துடனும், ஆவலோடும் வந்தானோ அதேயளவு கவலையும், அக்கறையும் சேர "இப்ப எப்பிடி?'' என்று விசாரித்த போது- "பரவாயில்லை'' என்று தலையாட்டிய போது பொங்கிய சந்தோஷப் பூரிப்பு மின்ன நின்ற கோலம்... எல்லாவற்றையும் ஒரு சில நிமிடங்களுள் ரசித்து விட்டுப் - பழையபடி பஸ்ஸில் வேகம் பிடித்த போது மனம் பழையபடி ஏக்கத்துடன் சூனியத்தைத் தரிசிக்கத் தொடங்கியது.

அவளுடைய கடிதம் சட்டைப் பையிலிருந்து நெஞ்சை மிருதுவாகச் சரடியது.

கிளிநொச்சி பஸ் தரிப்பில் ஒருவர் ஏறிக் கொள்ள—பஸ் ஓடத் தொடங்கிச் சில நிமிடங்களில் அவனுடைய தோளில் உரிமையுடன் விழுந்த கைகளுக்குரியவரைத் திரும்பிப் பார்த்து போது... ஒரு கணம் ஸ்தம்பித்து - சுதாகரித்துச் சிரித்தான்.

"நீங்களே...! எங்க இருந்து வாறியள்?''

வெள்ளி பிரேம் போட்ட கண்ணாடிக்குள் சிரித்த கண்களைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். ''இவ்வளவு வடிவான மாப்பிள்ளையை சின்னக்கா வேண்டாமெண்டிட்டாவே'' என்ற நினைப்பு உதைத்த போது அவரை எப்படி எதிர்கொள்வது என்று தோன்றாமல் பாதையைப் பார்த்து பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''எனக்கு அவசரமா ஹெட் ஒப்பிஸுக்குப் போற வேலை வந்திட்டுது. எங்கட புறொஜெக்ட் வான் ஒண்டு கொழும்பில இருந்து வந்து நேற்று கொழும்புக்கு திரும்பினது. அதிலயே போவமெண்டு வந்தனான். இடையில கிளிநொச்சி பிறான்ச்சுக்கு போனா.. அங்க அவையின்ர வேக்ஸ் இன்னும் முடியேலை ஸோ... திறீ டேய்ஸ் செல்லும் அவையள் கொழும்புக்கு வர. நான் ருமோரோ மோர்னிங் ஹெட் ஒப்பிஸில நிக்க வேணும். ஸோ கிளிநொச்சியில இருந்து பஸ் ரவலிங் தான்.'' சிரித்துக் கொண்டு அவர் கூறுவதைக் கேட்டபடி மௌனமாக வந்தான். அடிக்கடி எதிரேயிருக்கும் கண்ணாடி வழியாக அவரைப் பார்த்து ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டான்.

"எவ்வளவு படிச்சவர்? என்ன மாதிரி இங்கிலிஸ் கதைக்கிறார்! பெரிய உத்தியோகம். ம்ஹ்... சின்னக்கா என்னடா வெண்டா...'' மனதுக்குள் ஒரே புழுக்கம்.


''எப்பிடி... வீட்டில... எல்லாரும் சுகமே?'', 'சின்னக்காவின் சுகத்தை விசாரித்தால் அவன் ஏதாவது நினைப்பான் என்றோ அல்லது வெட்கமோ என்னவோ... அதனால் தான் சின்னக்கா என்று தனியே கேட்காமல் 'எல்லாரும்' என்று குறிப்பிட்டு ஒரு இழுவலில் கேட்கிறார்' என்று புரிந்து கொண்ட அவன் புன்னகையுடன் "சுகம்தான்'' என்ற பாவனையில் தலையாட்டினான். அவர் மூச்சு விடாமல் தொடர்ந்து கதைத்துக் கொண்டு வந்தார்.

''நான் கொழும்பால வர ரூ திரி வீக்ஸ் செல்லுமெண்டு நினைக்கிறன். ஏலுமெண்டா நீர் யப்னா போக முன்னம் நான் தாற அட்ரஸுக்கு ஒருக்கா வந்திட்டுப்போம். ஒரு பிரஸன்டேஷன் வாங்கித் தாறன். கொண்டு போய் அவவிட்டக் குடும். இந்த ருவன்ரி போத் அவவின்ட பேத்டேயெல்லே? என்ன பாக்கிறீர்? அவவின்ட பேத்டே எனக்கு என்னண்டு தெரியுமெண்டு யோசிக்கிறீர் போல... பொருத்தம் பாக்க அம்மா அவவின்ர சாதகத்தை வாங்கிக் கொண்டு வந்தவவெல்லே? அதில அவவின்ர டேட் ஒப் பேத் இருந்தது அது தான்.''

''அவவின்ர சாதகமும் என்ர பாக்கில தான் இருக்கு. அண்டைக்குப் பாத்திட்டு வைச்சனான். அது அப்பிடியே இருக்கு.'' என்று சொல்லிச் சிரித்தார்.

"உம்மட அக்கா சரியான ஷைடைப் என்ன? அண்டைக்கு நல்லூர்க் கோவிலுக்கிள கண்டு கதைக்க சரியாக் கதைக்காமப் போய்ட்டா. வெக்கமாக்கும் கதைக்க. என்ர பிரண்ட்ஸ் எல்லாரும் உம்மட அக்காவைப் பாத்திட்டு அம்மன் மாதிரி இருக்கிறா. மரி பண்ணினா நான் லக்கி மான்தான் எண்டு விஷ் பண்ணிச்சினம். எனக்குச் சரியான சந்தோஷம். உண்மையைச் சொன்னா என்ன... எனக்கிந்த சீதனம், டொனேஷன் எல்லாம் விருப்பமேயில்லை. அதால தான் இவ்வளவு நாளும் எனக்கு பேசின கலியாணத்தையெல்லாம் ஒவ்வொரு சாட்டுச் சொல்லித் தட்டிக் கழிச்சனான். ஆனா உம்மட அக்காவைத் தட்டிக் கழிக்க எனக்கு விருப்பமில்லை. எனக்கு நல்லா அவவைப் பிடிச்சிட்டுது. எப்பிடியும் இந்தக் கலியாணம் முதலில நடந்து முடியட்டும் எண்டு பேசாமல் இருக்கிறன்.'' (தொடரும்)



பனி தழுவும் புது அரும்புகளே!

வணக்கம்

நலம். உங்கள் நலம் எதிர்கால நாட்டின் நலம் என்பதால், உங்கள் உடல், உள நலம் பற்றி ராஜா மாமாவுக்கு மிக்க அக்கறை.

பூமனங்களில் அழுக்குகள் படர வியாதிகள் தொற்ற விட்டுவிடாதீர்கள்.

'ரமணி'—பக்கங்கள் உங்களுக்கான சிறுவர் பத்திரிகையை உருவாக்க, எடுத்துக் கொள்ளும் பரீட்சார்த்த முறைகள் என்பதனை நீங்கள் நன்கு புரிந்து கொள்ளுங்கள்.

ஈழத்துச் சிறுவர்களுக்கான பத்திரிகையொன்று எவ்வாறு— எந்த அமைப்பில், விடயங்களில் இருக்க வேண்டுமென்ற ஒரு ஆய்வினையே ராஜாமாமா நடத்திக் கொண்டிருக்கிறார். எனவே,

சின்னஞ்சிறு அரும்புகளே!

உங்கள் எண்ணத்தை, விருப்பு வெறுப்புகளை எனக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் பெற்றோரையும் கலந்தாலோசியுங்கள்.

இந்த முயற்சி பற்றி உங்கள் கல்லூரி பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்.

ராஜாமாமாவுக்கு— சிறுவர் பத்திரிகையொன்று, உங்களுக்குப் குப் பொழுது போக்காகவும், எக்காலத்திற்கும் பயன்படும் சிறுவர் கலைக் களஞ்சியமாகவும் விளங்கவேண்டும் என்பதே பெரு விருப்பு.


நீங்கள் இப்போது இரண்டாம் தவணை விடுமுறையை அனுபவிக்கிறீர்கள்.


உங்கள் — ஆக்கத்திறமையை ஆற்றலை வெளிக்கொணர எங்கே கற்பனைக் குதிரையைத் தீட்டி விடுங்கள் பார்க்கலாம்.

சிறந்தவற்றிற்கு பரிசு தர மாமா காத்துள்ளார்.

சிறுவர் கலைக் களஞ்சியம்











3

பீக்கிங்
ஜூலை, 73.

# ஒப்பரேஷன் பார்த்தோம்

அன்புள்ள சுமதி,

ஒப்பரேஷன் என்றால் உங்களுக்குப் பயமா? எனக்கும் அப்படித்தான். ஆனாலும் சாங்சுன் மருத்துவக் கல்லூரியில் ஒப்பரேசன் பார்க்க உங்களுக்கு விருப்பமா? என்று கேட்டபோது ஒத்துக்கொண்டேன். மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு ஒப்பரேஷனைப் பார்த்தேன்.

இந்த மருத்துவக் கல்லூரி டாக்டர்களைப் பயிற்றுகிறது. அத்துடன் 4 ஆஸ்பத்திரிகள் அதன் கீழ் இருக்கின்றது. ஒரு மருந்து மூலிகைப் பண்ணை, மருந்தாக்க நிலையம் முதலியவற்றையும் நடத்துகின்றது.

மூலிகைகளை எங்கள் நாட்டிலும் மருந்தில் பாவிக்கின்றார்கள். ஆனால் இவை பற்றி ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ஒரு சில சுதேச வைத்தியர்களுக்குத் தான் தெரியும். அவர்கள் அதை இரகசியமாக வைத்திருக்கின்றார்கள். மேற்கத்தைய வைத்தியம் படித்தவர்கள் இதைக் குறைவாகப் பார்க்கின்றார்கள். சீனாவில் அப்படி அல்ல. அரசாங்கமே மூலிகை மருத்துவத்தில் பெருங் கவனம் செலுத்துகின்றது.

நாம் சாங்சுன் மருத்துவக் கல்லூரி நடத்தும் மூலிகைப் பண்ணையைச் சென்று பார்த்தோம். மருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளர் ஒருவர் எங்களுக்கு எந்த எந்த மூலிகை என்ன என்ன நோய்க்கு பிரயோஜனம் என்று விளக்கிக் கூறினார். உங்களுக்குத் தெரிந்த செவ்வரத்தி, துளசி, கத்தாழை முதலிய நூற்றுக்கு மேலான சுதேச மருந்துச் செடிகள் அங்கிருந்தன. இந்தப் பண்ணை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மூலிகைகளை அறிந்து கொள்வதற்காக நடத்தப்படுகின்றது.

என்ன தம்பி மாமா ஒப்பரேஷன் பற்றி ஆரம்பித்துவிட்டு வேறு ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறீர்களா? சரி, ஒப்பரேஷன் பார்த்த கதையைச் சொல்கின்றேன். முன் கூறியவாறு இம் மருத்துவக் கல்லூரி நடத்தும் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு நாம் சென்றோம். அங்கு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களும், டாக்டர்களும், தாதிமாரும் நோயாளிகளும் எம்மை வரவேற்றார்கள். முதலில் நாம் எமது உடைகளை மாற்றினோம். டாக்டர்கள் தாதிமார் அணியும் வெள்ளைக் கோட்டும் ட்ரவுசரும் தொப்பியும் வாய்மூடியும் அணிந்து கொண்டோம். அப்பொழுது எமக்குச் சிரிப்பு வந்தது. ஏனென்றால் ஒருவரை ஒருவர் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு சீனப் பெண் டாக்டர் என்னிடம் வந்து "சரியாக டாக்டர்போல இருக்கின்றீர்கள்" என்று கூறினார்.

நாம் முதலில் நெஞ்சுக்குக் கீழ் உள்ளே வளர்ந்த கழலை ஒன்றை வெட்டி எடுப்பதைப் பார்த்தோம். எட்டு டாக்டர்களும் தாதிகளும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். இந்த ஆண் நோயாளி எங்களைக் கண்டதும், "வெளிநாட்டு நண்பர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்" என்று தலையை அசைத்து சீனமொழியில் கூறினார். தாதி மாறி மாறிக் கத்தரிக்கோல் போன்ற வெட்டும் கருவிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். டாக்டர்கள் நுணுக்கமாகக் கழலையை வெட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். வெட்டி எடுக்கும்போது நோயாளிக்கு நோவுதெரியாமலிருப்பதற்கான மேற்கத்தைய முறை விறைப்பாக்க மருந்து செலுத்தப்பட்டிருந்தது. இந்த நோயாளியின் முகத்தில் இருந்த முகமலர்ச்சியைக் கண்டதும் ரத்தத்தைக்காண்பதில் எனக்கிருக்கும் பயம்குறைந்து விட்டது.



அடுத்த நோயாளி ஒரு பெண் விவசாயி. அவருக்குக் கழுத்தில் வளர்ந்த சங்குவளை ஒன்றை வெட்டிக் கொண்டிருந்தார்கள். இப்பெண்ணும் எம்மைப் பார்த்துத் தலையாட்டி வணக்கம் தெரிவித்தார். எம்முடன் சென்ற டாக்டர்கள் அவருடைய நோய் வரலாற்றைக் கூறினார்கள். அவருக்கு இந்த நோய் எட்டு ஆண்டுகளாக இருந்து வந்தது. அவர் இந்த ஒப்பரேஷனை முடித்து விட்டு நோயைக் குணப்படுத்திக் கொண்டு விரைவில் திரும்பி விவசாய வேலையில் ஈடுபட ஆசைப்படுகின்றார். டாக்டர் இதைக் கூறிய போது இந்தப் பெண் பார்த்து புன்னகை பூத்தார்.

இந்த பெண்ணுடைய ஒப்பரேஷனுக்கு" அக்குபஞ்சர் "விறைப்பாக்க முறை பாவிக்கப்பட்டிருந்தது. அக்குபஞ்சர் என்றால் என்ன என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பல்வேறு அளவுடைய மெல்லிய ஊசிகளால் உடம்பின் குறிப்பிட்ட பாகங்களில் துளைத்துச் சிகிச்சை செய்யும் சீனமுறை, அக்குபஞ்சர் என்று அழைக்கப்படுகின்றது.

சீனாவில் தொன்று தொட்டு இம்முறை பிரயோகத்தில் இருந்து வருகின்றது. ஆனால் சென்ற சில ஆண்டுகளில் தான் அது சீனாவில் மிகவும் பிரசித்தம் பெற்று உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கின்றது. இந்த அக்குபஞ்சரை நாம் இங்கு ஊசித்துளையீட்டு முறை என்று தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றோம். சாதாரண தடிமன், காய்ச்சல் முதல் சிக்கலான பல்வேறு நோய்களுக்கு இந்த முறையில் சிகிச்சை செய்ய முடியும். ராணி அக்காவுக்கு இடுப்பில் வலி ஏற்பட்டபோது அக்குபஞ்சர் முறை பாவித்தார்கள் அவருக்கு சுகமேற்பட்டது. அக்குபஞ்சர் ஊசியை துளைக்கும் போது கடும் நோவு ஏற்படுவதில்லை. அதன் பிரயோகத்தில் பயன் உண்டென்றால் மின்சாரத்தைத் தைத் தொட்டது போல் ஒருவகை உணர்ச்சி ஏற்படுகின்றது. இந்தச் சிகிச்சையினால் பக்க விளைவுகள் இல்லை. சிகிச்சைக்குப் பின் பாதிப்பு இல்லை.

அக்குபஞ்சர் முறையை இப்பொழுது சீனாவில் விறைப்பாக்கம் செய்வதற்கும் பாவிக்கின்றார்கள். இதுபெரும் வெற்றி தந்துள்ளது. இதைக் கண்டு உலக டாக்டர்கள் வியந்து அக்குபஞ்சர் விறைப்பாக்கம் பற்றிக் கற்றுக் கொள்ள சீனாவுக்கு சாரி சாரியாக வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அக்குபஞ்சர் விறைப்பாக்கம் தான் நான் மேற் குறிப்பிட்ட பெண்ணுக்குச் செய்யப்பட்டிருந்தது.

டாக்டர்கள் சொன்னார்கள். இதனால் இப்பெண் விரைவில் ஆஸ்பத்திரிப் படுக்கையை விட்டு எழுந்து குணமடைந்து தன் வேலைக்குத் திரும்ப முடியும் என்று. யார் தான் ஆஸ்பத்திரியில் நீண்ட காலம் இருக்க விரும்புகின்றார்கள்?

ஒரு ஆணுக்குக் கல்லீரல் ஒப்பரேஷன் செய்வதையும் இன்னொரு இரைப்பை ஒப்பரேஷனையும் நாம் இங்கு பார்த்தோம். கல்லீரல் ஒப்பரேஷனுக்கும் அக்குபஞ்சர் விறைப்பாக்கம் தான் செய்யப்பட்டிருந்தது. இந்த நாலு நோயாளிகளும் நம்பிக்கையும், முகமலர்ச்சியும் பொலிந்த முகங்களுடன் விளங்கி எங்களுக்கு வரவேற்பும் பிரியாவிடையும் கூறியது எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. எங்கள் நாட்டில் இப்பொழுது இத்தகைய காட்சியைக் காண்பது சுலபமல்ல.

ஒப்பரேஷன் பற்றி இவ்வளவு கூறியது போதும் என்று நினைக்கின்றேன். பின் நாங்கள் இம்மருத்துவக் கல்லூரியின் படிப்பறைக்குச் சென்றோம். அங்கு மனித உடம்பின் பகுதிகள் விளக்கங்களுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட உடம்புப் பகுதிகளும் அபூர்வமான உருவங்களுடைய இறந்த குழந்தைகளும் கண்ணாடிப் பெட்டிகளில் மாணவர்கள் படிப்புக்கு உதவி செய்யப் பேணி வைக்கப்பட்டிருக்கின்றன.

நோய்கள் தடுக்கப்பட முடியாதவை, கடவுளின் கோபத்தால் ஏற்படுகின்றன என்று எம்மில் பலர் இன்னும் நம்புகின்றார்கள் அல்லவா? இத்தகைய நிலையில் உலகிலும் சீனாவிலும் உடல் பற்றிய அறிவு, நோய் பற்றிய அறிவு ஆகியன எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன என்பதை இந்த விஜயத்தின் மூலம் நான் உணர்ந்து கொள்ள முடிந்தது. என்ன கடிதம் நீண்டுவிட்டதா? அடுத்த கடிதத்தில் தொடருவோம்.

அன்புடன்
தம்பி மாமா.

# உலகத்தில் மிகப் பெரியவை

(1) பெரியகண்டம்:- ஆசியாக்கண்டம். ஏறத்தாள 180 லட்சம் சதுர மைல்கள் பரப்புடையது. இதில் உள்ள நாடுகள் சில, இந்தியா, சீனா ஜப்பான், பாகிஸ்தான், பங்களாதேசம், பிலிப்பைன்ஸ், கொரியா, இலங்கை முதலியன.

(2) மிகப்பெரிய தீவு:- கிரீன்லாந்து. நீளம்-1,650 மைல், அகலம் 800 மைல், பரப்பு- 8,40, 00 சதுரமைல். இது கனடாவின் வடகிழக்கில் உள்ளது, இங்கு எஸ்கிமோவர் வாழ்கிறார்கள்.

(3) உயரமான மலை- இமயமலை. இது இந்தியாவின் வடக்கு எல்லையாக உள்ளது.

(4) உயரமான மலைச் சிகரம்- எவரெஸ்ற்.

இது இமயமலை தொடரில் உள்ளது. உயரம் 29, 002 அடி.

(5) நீண்ட நதி-நைல்நதி

நீளம் 4,145 மைல்

(6) பெரிய பாலைவனம்- சஹாரா பாலைவனம்

வட ஆபிரிக்காவில் உள்ளது. இதன் பரப்பு சுமார் 35லட்சம் சதுர மைல்

(7) மிகப்பெரிய சிலை- சுதந்திர தேவி சிலை

இது அமெரிக்காவில்உள்ளது. உயரம் 151 அடி. ஒருமங்கை வலக்கையில் தீப்பந்தத்தையும் இடது கையில் சுதந்தர பிரகடன தகடும் ஏந்தி நிற்பது போன்றும் அமைந்துள்ளது.

(8) பெரிய சுவர்- சீனப்பெரும் சுவர்

சீனாவில் உள்ளது. நீளம்- சுமார் 500 மைல், உயரம் 22 அடி.

(9) நீளமான புகைவண்டிப்பாதை டிரான்ற்ஸ் சைபீரியா ரயில்வே. ருசியாவில் உள்ளது- நீளம் 6,670 மைல் -கள்.

(10) பெரிய ஆலமரம்- இந்தியாவிலே கல்கத்தா தாவரவியல் தோட்டத்தில் உள்ளது.

மரத்தின் உயரம் 85 அடி, நிலத்தில் வேர் ஊன்றிய விழுதுகள்- 464 நிற்கும் பரப்பு- ஒன்றரை ஏக்கர். குறுக்களவு- 300 அடி,

—கீதன் —

## 1

| | | |
|---|---|---|
| 32 | 43 | 54 |
| 33 | 44 | 55 |
| 34 | 45 | 56 |
| 35 | 46 | 57 |
| 36 | 47 | 58 |
| 37 | 48 | 59 |
| 38 | 49 | 60 |
| 39 | 50 | 61 |
| 40 | 51 | 62 |
| 41 | 52 | 63 |
| 42 | 53 | |

## 2

| | | |
|---|---|---|
| 64 | 73 | 82 |
| 65 | 74 | 83 |
| 66 | 75 | 84 |
| 67 | 76 | 85 |
| 68 | 77 | 86 |
| 69 | 78 | 87 |
| 70 | 79 | 88 |
| 71 | 80 | 89 |
| 72 | 81 | 90 |

## 3

| | | |
|---|---|---|
| 4 | 31 | 62 |
| 5 | 36 | 63 |
| 6 | 37 | 68 |
| 7 | 38 | 69 |
| 12 | 39 | 70 |
| 13 | 44 | 71 |
| 14 | 45 | 76 |
| 15 | 46 | 77 |
| 20 | 47 | 78 |
| 21 | 52 | 79 |
| 22 | 53 | 84 |
| 23 | 54 | 85 |
| 28 | 55 | 86 |
| 29 | 60 | 87 |
| 30 | 61 | |

## 4

| | | |
|---|---|---|
| 2 | 31 | 62 |
| 3 | 34 | 63 |
| 6 | 35 | 66 |
| 7 | 38 | 67 |
| 10 | 39 | 70 |
| 11 | 42 | 71 |
| 14 | 43 | 74 |
| 15 | 46 | 75 |
| 18 | 47 | 78 |
| 19 | 50 | 79 |
| 22 | 51 | 82 |
| 23 | 54 | 83 |
| 26 | 55 | 86 |
| 27 | 58 | 87 |
| 30 | 59 | 90 |

## 5

| | | |
|---|---|---|
| 1 | 31 | 61 |
| 3 | 33 | 63 |
| 5 | 35 | 65 |
| 7 | 37 | 67 |
| 9 | 39 | 69 |
| 11 | 41 | 71 |
| 13 | 43 | 73 |
| 15 | 45 | 75 |
| 17 | 47 | 77 |
| 19 | 49 | 79 |
| 21 | 51 | 81 |
| 23 | 53 | 83 |
| 25 | 55 | 85 |
| 27 | 57 | 87 |
| 29 | 59 | 89 |

## 6

| | | |
|---|---|---|
| 8 | 31 | 62 |
| 9 | 40 | 63 |
| 10 | 41 | 72 |
| 11 | 42 | 73 |
| 12 | 43 | 74 |
| 13 | 44 | 75 |
| 14 | 45 | 76 |
| 15 | 46 | 77 |
| 24 | 47 | 78 |
| 25 | 56 | 79 |
| 26 | 57 | 88 |
| 27 | 58 | 89 |
| 28 | 59 | 90 |
| 29 | 60 | |
| 30 | 61 | |

# உங்கள் நண்பர்களின் வயதைக்

## - கண்டு பிடிக்க -

உங்கள் நண்பனின் வயது பின்வரும் கட்டங்களில் எதில் இருக்கின்றது என்பதனை மட்டும் சொல்லச் சொல்லுங்கள்.

நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு அவன் வயதைக் கூறிவிடலாம். அதைப் போலவே அவன் அம்மா, அப்பா, தாத்தா வயதினைக் கூடக் கூறிவிடலாம். எப்படி—?

அவன் கூறும் வயது இருக்கும் கட்டங்களின் முதல் எண்ணை மட்டும் கூட்டினால் சரியான வயது வந்து விடும்.

உதாரணமாக நண்பன் வயது 20 ஆயின், அந்த எண் 3, 7 ஆகிய கட்டங்களிலுள்ளது. அந்தக் கட்ட முதல் எண் 4+16 ஆகும். எனவே வயது 20.

99 வயது வரை இம்முறையில் காணலாம்.

## 7

| | | |
|---|---|---|
| 16 | 31 | 62 |
| 17 | 48 | 63 |
| 18 | 49 | 80 |
| 19 | 50 | 81 |
| 20 | 51 | 82 |
| 21 | 52 | 83 |
| 22 | 53 | 84 |
| 23 | 54 | 85 |
| 24 | 55 | 86 |
| 25 | 26 | 87 |
| 26 | 57 | 88 |
| 27 | 58 | 89 |
| 28 | 59 | 90 |
| 29 | 60 | |
| 30 | 61 | |

# 'சத்யஜித்ரே'
# பத்திக் சந்த்

## 11

அவர்கள் இருவரும் சித்பூரிலுள்ள உணவு விடுதி ஒன்றில் அமர்ந்து சப்பாத்தியும் இறைச்சிக் கறியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹருண் அவ்விடத்துக்கு முன் எப்போதும் வந்ததில்லை. ஹருண் அண்ணா இல்லாவிட்டால் இன்றுகூட வந்திருக்கமாட்டான். ஹருணுக்கு பத்திக் பற்றி இன்று எல்லாம் தெரியும். பத்திக் அவனுக்கு எல்லா விபரங்களையும் சொல்லி விட்டான். கேட்ட கேள்விகளுக்ெல்லாம் முழுமையாக விடை அளித்தான். பாடசாலையிலிருந்து திரும்பும் வழியில் நான்கு மனிதர்களால் தான் எப்படிக் கடத்தப்பட்டான் என்பதையும் விபரித்தான்.

"லோடன் தெருவில் உள்ள வீட்டிற்குச் செல்ல உனக்கு வழி தெரியுமா? அதன் அயல், சுற்றுப்புறம் எனக்கு அவ்வளவு தெரியாது."

"மிகச் சுலபம்" சொல்லிவிட்டு பத்திக் சிரித்தான்.

"ஹம்ம்"

ஹருண் சிறிது மௌனம் சாதித்தான்.

"இன்றைக்கு உன்னை உன் வீட்டிற்கு அழைத்துச்செல்ல இயலாது. நேரம் ஆகிவிட்டது. நீயும் இன்னும் சிறிது கலாதியாக இருக்க வேண்டும். நாளை துப்புரவான காற்சட்டையும் சேட்டும் நீ அணிந்து கொள்ளவேண்டும். உபேன் அண்ணாவிற்கு இன்னும் நான் ஒரு விபரமும் சொல்லவில்லை. பிறகு அது பற்றி யோசிக்கலாம்."

பத்திக் இவைபற்றியெல்லாம் தெளிவாகச் சிந்திக்கவில்லை. வீட்டிற்குப் போகவேண்டும் என்பதை மட்டுமே அவன் அறிந்திருந்தான். அங்கே அவன் தகப்பனார், பாட்டி, அவனைக் கவனிக்கும் பழைய வேலைக்காரன் ஹரிநாத் ஆகியோர் இருக்கிறார்கள். கேட்காமலே எல்லா விஷயங்களையும் ஹரிநாத் தானே கவனித்துச் செய்வான். ஆனால் வயது முதிர்ச்சி காரணமாக அறளைக் குணம் உண்டு. அதை ஒருவாறு சகித்துச் சமாளிக்கலாம். மேலும்... பாடசாலை இருக்கிறது. அதிபர் சுகுல், தர்வான், உடற் பயிற்சி ஆசிரியர் தத்... அஞ்சன், பிறீதம், றஸ்ஸி, பிரத்யோத் மன்மோகன் இவர்கள். சகபாடிகள். பாடசாலை மாணவர் சென்ற சுற்றுலா நினைவில் வந்தது. அந்தச் சுற்றுலாவின்போது அவனும் சகமாணவர்களும் ஆசிரியர்களும் சந்த்பால் கட்டடத்தினை யந்திரப்படகில் சென்றடைந்தார்கள். அடுத்து தாவரத் தோட்டம்.

அவ்வேளையில் ஹருணுக்கு அவன் ஏதோ உடனடியாகச் சொல்ல நினைத்தான்.

"ஹருண் அண்ணா, எங்கள் வீட்டின் கீழ்த்தளத்தில் ஓர் அறை இருக்கிறது. அதை யாரும் உபயோகப்படுத்துவதில்லை. பழைய கப்பேட் ஒன்றும் கால் முறிந்த மேசை ஒன்றும் இருக்கின்றது. அந்த அறையை துப்புரவாக்கி விடுவோம், நீங்கள் அதில் தங்கலாம்." ஹருண் கண்ணை இடுக்கியபடி பத்திக்கைப் பார்த்தான். பிறகு சப்பாத்தி ஒன்றை எடுத்து இரண்டு துண்டுகளாய்ப் பிய்த்து ஒரு துண்டைத் தன் வாய்க்குள் போட்டுக் கொண்டான். "சேரியில் நான் வைத்திருந்த அறைபோல உங்கள் வீட்டு அறையையும் அலங்கரிக்கவும் பயன்படுத்தவும் உன் அப்பா என்னை அநுமதிப்பார் என்று நினைக்கிறாயா?"

பத்திக் தகப்பனாரை நினைத்துப்பார்த்தான். அவர் அவ்வாறு அனுமதிப்பாரா என்பது பற்றி அவனால் ஒரு முடிவுக்கு வரக்கூடவில்லை. ஆனால் அவன் சொன்னான் "ஏன் அநுமதிக்க மாட்டார்? கட்டாயமாக அநுமதிப்பார். இது என் நம்பிக்கை"

"நல்லது. அப்படியானால் உன் அப்பாவும் ஒரு கலைஞராகத்தான் இருக்கவேண்டும். காலில் ஹருண் போன்ற ஒரு கலைஞனை மதிப்பிட இன்னொரு கலைஞனால்தான் முடியும்."

பத்திரிகையில் வெளியாகும் எல்லாச் செய்திகளையும் எல்லாரும் வாசிப்பதில்லை. பத்திரிகைக் கடைசிப் பக்கத்திலே வெளியான விளம்பரத்தைப் பலர் பார்க்கத் தவறி விட்டனர். வாசித்தவர்கள் கல்கத்தாவின் உயர் அறிஞர் குழுவில் இடம்பெறும் பரிஸ்டர் சன்யால் போன்றவர்களாலேதான் இத்தகைய பெரிய சன்மானம் வழங்கக் கூடியதாயிக்கும் என்பதை அங்கீகரித்தனர். ஐயாயிரம் ரூபா என்பது சாதாரணமான தொகை அல்ல.

உபேன்பாபு விளம்பரத்தைப் பார்க்கவில்லை. எப்பொழுதாவது பத்திரிகைகளை மேலோட்டமாகப் பார்க்கும் வழக்கம் உடைய ஹருணும் பார்க்காதது அதிசயம் அல்ல. அவன் அன்று உற்சாகமாகவும் இல்லை. அவன் காலை ஐந்து முப்பதுக்கு நித்திரைவிட்டெழுந்து தேநீரை அவசரம் அவசரமாக அருந்திவிட்டு ஏழுமணியளவில் பத்திக்கின் தேநீர்க்கடைக்கு வந்தான். பத்திக் என்ற பெயர் அந்தச் சிறுவனின் பெயராக இனியும் இருக்காது. ஆனால் ஹருணுக்கோ அவன் அவனது பத்திக்தான். நிகால் அல்ல சன்யாலும் அல்ல. அவனால் அறியப்பட்டவன் பத்திக் சந்திரபால்தான்.

உபேன் பையனை அழைத்துச் செல்லும் இடத்தை ஹருணிடம் கேட்டார்.

“அயலிலுள்ள சாகிப் ஒருவரிடம் நான் திரும்பிவந்து விபரம் தெரிவிக்கிறேன்'' ஹருண் சொன்னான்.

ஹருண் தெருச்சுற்றி என்றாலும் அவன் நல்லவன் என்பதே உபேன் பாபுவின் கருத்து. பத்திக்கை அழைத்துச் செல்வதற்கு அவர் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அவர் கெஸ்டோவின் மகன் சோட்டுவை அழைத்தான். ''அருகே சோம்பிக் கொண்டு நில்லாதே. முகம் கழுவிக் கொண்டு தயாராகு வேலை இருக்கிறது.''

---

❖ பட்டாசு வெடிகளைக் கண்டு பிடித்தவர்கள் சீனர். எதற்காகத் தெரியுமா? தீயசக்திகளை விரட்டவும், வேடிக்கையாகப் பொழுது போக்கவுமே கண்டு பிடித்தனர். ஆனால், பட்டாசு ரகஸ்யம் ஐரோப்பியருக்குப் பரவியதும், அதைப் பயங்கர ஆயுதங்களுக்குப் பயன் படுத்தலாயினர்.

❖ செய்திகளை ஒளியின் மூலமாக அனுப்பும் கருவியின் பெயர் என்ன தெரியுமா?
ஹெலியோ கிராப்.

❖ நாயின் ஆயுட் காலம் 12 ஆண்டுகள். பூனையினது 10 ஆண்டுகள், குதிரையினது 25 ஆண்டுகள்.

❖ நமது உடம்பில் எத்தனை எலும்புகள் உள்ளன தெரியுமா? 206 ஆகும்.

❖ நமது உடல் எலும்பின் வலிமையானதன் பெயர் பீமூர் (FEMUR) ஆகும்.

---

## 12

சாரதிந்து சன்யால் தமதுஎழுதுவினைஞர் ரஜனிபாபு பக்கம் திரும்பி, “பிரசுரதரமும் பிரசுரிக்கப் பயன் படுத்தும் தாள்களின் தரமும் இக்காலத்தில் படுமோசம். பாப்லுவின் படம் மிகவும் அழகானது. ஆனால் இந்தப் பத்திரிகையில் அந்தப் படம் ஆளையே அடையாளம் காண முடியாது செய்திருப்பதைப் பார்த்தீரா?'' என்றார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைக் கையில் எடுந்த ரஜனிபாபு, ''இதைப் பார்த்தீர்களா சேர், இது நல்ல தெளிவாயிருக்கிறது. பாப்லுவை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம்'' என்றார்.

செய்திப் பத்திரிகைகள் சாரதிந்து சன்யாலின் முன்னால் ஒழுங்கின்றிக் கும்பலாய்க் கிடந்தன. ரஜனிபாபுவிற்கு அறிவுறுத்தியிருந்தபடி அவர் அன்று வரும் பொழுது வாங்கிவந்த பத்திரிகைகள் தாம் அவை. கண்டநின்ற காத்தான் பூத்தான்களெல்லாம் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்ததும் யாராவது ஒரு பையனைப் பிடித்துக் கொண்டு வந்து 'கொண்டுவா சன்மானம் ஐயாயிரம்' என்று நிற்கப் போகிறார்களே என்று சன்யால் அஞ்சினார். விஷயம் கைக்கு மிஞ்சிப் போக முன்னமே ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும். எனவே பிரதீந்திராவுக்கும் உதவியாளர் கிஷோரிலானுக்கும் பக்கத்துணையாகத் தம் வீட்டிற்கு நேரகாலத்தில் வந்திருக்கும்படி அவர் ரஜனிபாபுவிற்கும் தமது யூனியரான தவன் சர்க்காருக்கும் பணித்திருந்தார். சர்க்கார் இன்னும் வந்து சேரவில்லை. பரீட்சைக்காக இரவில் நீண்ட நேரம் விளித்திருந்து படித்ததால் பிரீதிந்திரம் இன்னும் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை. அவன் காறக்பூர் செல்ல மத்தியானப் புகை வண்டியைப் பிடிக்க இருந்தான்.

தமது வீட்டுக்கு முன்னால் டாக்சி ஒன்று வந்து நின்ற ஓசையைக் கேட்ட சன்யால் காப்பிக் கோப்பையை வைத்துவிட்டு எழுந்தார்.

''அங்கே போவோம்'' என்று அவர் சொன்னார். ஆனால் தொடக்கமே முடிவாகிவிடப் போகிறது என்பதை அவர் நினைக்கவில்லை.

''அப்பா!''

பாப்லுவின் குரல்! ஏன்!

சன்யாவின் கண்கள் திரையிட்ட வாயிற் கதவுகளை நோக்கி நகர்ந்தன. பாப்லு திரையை ஒரு பக்கமாக விலக்கியபடி உள்ளே நுழைந்தான்.

“என்ன நடந்தது? எங்கே இவ்வளவு காலமும் இருந்தாய்? உன்னை அழைத்து வந்தது யார்? உனது தலைமயிருக்கு என்ன நடந்தது?''

கேள்விகள் நடுக்கத்துடன் வெளிவந்தன. தொடர்ந்து அமைதிப் பெருமூச்சு விட்ட வண்ணம் சன்யால் தமது ஆசனத்தில் சாய்ந்தார். விடைகள் வேண்டாத கேள்விகள் அவை. அவரின் மகன் வந்து விட்டான். அது போதும்.

அப்பொழுது கதவின் திரைக்கப்பால் ஓர் உருவம் காத்து நிற்பதை அவரின் கண்கள் கண்டன.

''தயது செய்து உள்ளுக்கு வரலாம்'' சன்யால் அவர்கள் அழைத்தார்; ஆள் யாராயிருந்தாலும் அழைக்க வேண்டிய முறைக்காக அழைத்தார். சன்மான விஷயம் வேறு இருக்கிறது. சன்யால் தமது எழுதுவினைஞரை நோக்கி, ''பையன் எவனையாவது 'இனியாரும் அழைத்து வந்தால் அவனை அனுமதிக்க வேண்டாம் என்று தர்வானுக்குச் சொல்லும்'' என்றார். ''அவன் என் மகன் வந்துவிட்டதாக வருபவர்களுக்குச் சொல்லட்டும்.''

ரஜனி பாபு, கட்டளையை நிறைவேற்ற அறைக்கு வெளியே சென்றபொழுது திரை விலகியது. அந்த மனிதன் கதவினருகில் நின்று கொண்டிருந்தான். சன்யால் அவனைப் பார்த்தார்.

கௌரவமான மனிதனாக இவன் தோற்றுகிறானா? சன்யால் அவர்கள் 'இல்லை' என்பதை உறுதி செய்து கொண்டார். அவனது சட்டை கசங்கி இருந்தது. மலிவானதுங்கூட அவனது காற் செருப்புகள் நாட்பட்டவை; தூசி படிந்து காட்சி தருகின்றன. அவனுடைய பருத்தித் துணியாலான காற் சட்டை அழுக்குடையது. அவனது தலைமயிர்? கன்னத்தாடி? இல்லை, கன்னத்தாடியை அவர் எதிர்க்க வெறுக்க முடியாது. பிரீதிந்திரா

கன்னத்தாடி வைத்திருக்கவில்லையா? அதே மாதிரியில் தான் இவனது கன்னத்தாடியும் உள்ளது.

"உள்ளே வா"

ஹருண் இரண்டடி உள்ளே வைத்து இன்னும் கதவின் அருகி லேயே நின்றான்.

"உன் பெயர் என்ன?"

"ஹருண், அப்பா! ஹருண் அண்ணா ஒரு கலைஞர். பெரிய வித் தைக்காரர்."

சன்யால் மீண்டு வந்த தன் மகனை எரிச்சலோடு பார்த்தார். "போதும் பாப்லு.அவரே பேசட்டும் மேல் மாடிக்குப் போய் நீ திரும்பி வந்ததைப் பாட்டிக்குச் சொல். அவள் மிகவும் கவலையோடிருக்கிறா. பிரீதிந்திராவும் அங்கே தான் அவ ளைப் போய் எழுப்பு."

ஆனால் பாப்லு தந்தை கூறி யதை உடனடியாக நிறைவேற்றாது தயங்கிக் கொண்டே நகர்ந்தான். ஹருண் அண்ணாவை விட்டு அவன் எப்படிப் போவது? எனினும் தகப் பனுடைய கட்டளையை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக அறை யைவிட்டு நகர்ந்து போய் விறாந் தையில் நின்றான்.

சாரதிந்து சன்யால் அந்த மனி தனை நோக்கித் திரும்பினார்.

"சரி நடந்தவற்றையெல்லாம் சொல்."

காறக்பூரிலிருந்து இவர் என் னோடு வந்தார். ஓடிக்கொண்டி ருந்த புகைவண்டியினுள் பாய்ந்து ஏறினான். நான் இவரை உள்ளே இழுத்து விட்டேன். இங்கே அவர் இவ்வளவு நாளும் இருந்தார்.

"இங்கே என்றால்..? எங்கே?"
"கல்கத்தாவில்... பென்ரிங் தெருவில் தேநீர்க்கடை ஒன்றில்"

தேநீர்க்கடை ஒன்றில்?" "சன் யால் அவர்களின் கண்கள் பிதுங் கிக் கொண்டு வெளியே வந்துவிட் டது போல விழித்தன." தேநீர்க் கடையிலே என் செய்தான்?

"வேலைசெய்தார் சேர்"

தொடர்ச்சி 28ம் பக்கம்

# பசுவும், போர்வையும்

ஒரு ஊரிலே சங்கரன், சந்திரன் என்று இரு சகோதரர்கள் இருந் தார்கள். அவர்கள் சிறுவர்களாக இருக்கும் பொழுது ஒருவர்மேல் ஒரு வர் உயிராக இருந்தனர். ஆனால் இருவரும் வளர்ந்து பெரியவர்க ளாகி கலியாணம் செய்து கொண் டபின் அவர்களுக்கு வந்த மனைவிய ரால் அவர்களின் ஒற்றுமை குலைந் தது. ஒருவரை ஒருவர் நம்ப மறுத் தனர். எனவே, தங்கள் சொத்தைப் பாகம் பிரிக்க முனைந்தனர்.

எல்லாச் சொத்தையும் சரிசம னாகப் பிரித்துக் கொண்டனர்.ஆனால் இறுதியாக ஒரு போர்வையும், ஒரு பசுவும் மிஞ்சியது. பிரிக்க முடியா மல் தவித்தனர். எனவே, ஒரு ஒப்பந் தம் செய்து கொண்டனர்.

பசுவின் முன்பகுதி சந்திரனு க்கு, பின்பகுதி சங்கரனுக்கு. அதே போலவே,

போர்வையைப் பகலுக்கு சந்திர னும், இரவுக்கு சங்கரனும் பயன் படுத்த வேண்டும்.

பாகப் பிரிவினையின் சூட்சுமம் அறியாத சந்திரன் பாவம் ஏற்றுக் கொண்டான்.

அதிகாலை.

பசு பசியால் ம்மா... ம்மா... எனக் குரல் கொடுத்தது. மறு விநாடி சங்கரன் சந்திரனைக் கூப்பிட் டான்.

"சந்திரா பசுவின் முன்பகுதி உனதல்லவா? ஆதலால் அதற்குத் தீனி போடு. வைக்கோல் போடு..."

சந்திரனோ வாய் பேசாது வைக் கோல் எடுத்து வந்து போட்டான்.

சந்திரனோ பால் கறப்பதற்காக பாத்திரத்தோடு பசுவிடம் போனான். பாலைக் கறந்தான்.

சந்திரன்' 'அண்ணா கொஞ்சம் பால் தாறியா?' என்று கேட்டான்.

"நீ என்ன ஒப்பந்தத்தை மறந்து விட்டாயா? பசுவின் பின் பாதி எனக்குத்தான் சொந்தம் . . .

சந்திரனுக்கு பால் கிடைப்ப தில்லை. ஆனால் ஒழுங்காகப் புல்,வைக் கோல்; பிண்ணாக்கு என்று வைக்க வேண்டியதாயிற்று.

இரவில்- படுக்கைக்குப் போகும் போது சங்கரன் போர்வையை எடுத் துப் போர்த்துக் கொள்வான். சந் திரனோ இரவில் குளிரால் நடுநடுங் குவான். பகலில் அந்தப் போர்வை யால் பயனில்லை. ஆனால் பகலில் அதனைத் தோய்த்து சலவை செய் வது சந்திரன் வேலையாயிற்று.

சந்திரனுக்கு சில நாட்களின் பின்னால் தான் சகோதரனின் மோசடி புரிந்தது. அவசரம் அவசரமாக அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவரு டம் சென்று தன் பிரச்சனையைக் கூறினான்.

தலைவர், 'இதுக்கு ஒரு வழி சொல்கிறேன். அதன்படி செய்!'- என்று கூறி அனுப்பிவைத்தார்.

அடுத்த நாட்காலை.

சங்கரன் பால்கறப்பதற்காக, பாத்திரத்துடன் சென்று, மாட்ட டியில் குந்தினான்.

சந்திரன் ஒரு தடியை எடுத்து மாட்டின் தலையில் ஒரு போடுபோட் டான். வேதனையால் பசு பின்னங் காலால் அடித்தது. சங்கரனின் முன் பற்கள் சில பறந்தன. அன்றுபால் கிடைக்கவில்லை.

சந்திரனைக்கோபத்துடன், 'ஏன் பசுவினை அடித்தாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை பசுவின் எனக் குச் சொந்தமான முன்பகுதியில் அதனுடன் விளையாடினேன்.'-என் றான் சந்திரன்.

அன்றிரவு.

படுக்கைக்குப் போகுமுன் சங் கரன், "சந்திரா படுக்கப் போகி றேன். போர்வையைக் கொண்டு வா!"- என்றான்.

ஈரம் சொட்டச் சொட்டப் போர்வை வந்தது.

அடுத்த நாள் காலை.

சந்திரனைக் கூப்பிட்டு, 'இனி இரண்டையும் மாற்றி மாற்றி பயன் படுத்துவோம். 'என்னை மன் னித்துவிடு என்றான் சங்கரன்.

வேலை? என்ன மாதிரிவேலை?'' சன்யால் அவர்களுக்குத் தமது செவிகளையே நம்பமுடியவில்லை.

ஹருண் சொன்னுன். சன்யாவின் தலையிலே மயிர் அதிகம் இல்லை. அப்படியிருந்திருந்தால் அவர் அத்தனையையும் பிடுங்கி எடுத்திருப்பார்.

''இதெல்லாம் என்ன?'' உறுமிக்கொண்டே நாற்காலியிலிருந்து எழுந்தார். ''இந்த உலகம் அந்த அளவிற்கு வந்துவிட்டதா? நீ என் மகனைத் நேநீர்க் கடையில் எடிபிடியாளாய் இருக்க நிர்ப்பந்தித்திருக்கிருய் உனக்கு உணர்ச்சி ஏதாவது இருக்கிறதா? அவனைப் பார்த்த உடனேயே நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று உனக்குத் தெரியவில்லையா?''

பாப்லு விருந்தையிலிருந்து ஓடி வந்து ''நான் அந்தவேலையை விரும்பிச் செய்தேன், அப்பா'' என்ருன்.

''வாயை மூடு'' சன்யால் கர்ச்சித்தார். ''மேல்மாடிக்குப்போ என்று சொன்னேனல்லவா?''

பாப்லு மீண்டும் அறையை விட்டு வெளியேறினுன். வீட்டில் இல்லாமல் இருந்து இப்போதுதான் திரும்பியவன் அவன். வெளியிலிருந்த காலம் நீண்டதுதான். இப்படி ஒன்று நிகழும் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை.

ஹருண் அமைதியாக நின்ருன். மீண்டும் பேசிய பொழுது அவன் குரல் மிகவும் சாந்தமாக ஒலித்தது.

''இவர் யார் என்று நான் அறிந்திருந்தால் இவரை தடுத்து வைத்திருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இவருக்கு ஞாபக சக்தி போய்விட்டது. நடந்தவை எவையும் வெளிப்படாத வெற்றிடமாய் இவரின் மனம் இருந்தது.

''பத்திரிகையில் விளம்பரம் வெளியான கையோடு அவனது நினைவுகள் யாவும் திரும்பிவிட்டன. அப்படித்தானே?'' சன்யாவின் பேச்சிலிருந்து அவர் ஹருண் சொன்ன ஒருவார்த்தையைக்கூட நம்பவில்லை என்பது தெரிந்தது. ஹருண் குழம்பிப்போனுன்.

''நீங்கள் சொல்வது என்ன என்று எனக்கு விளங்கவில்லை சேர், கடந்த இரவுதான் இவருக்குப் பழைய நினைவுகள் திரும்பின. மழை பெய்ததால் உடன் அழைத்துவரக் கூடவில்லை. இவர் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். எனது கடமை முடிந்தது. ஆனல் ஒரு விஷயம். இவரின் தலையில் ஒரு பக்கம். அது இடையிடையே வலியைத் தருவதுண்டு. டாக்டருக்கு நீங்கள் காட்ட வேண்டியிருக்கும். என்பதால்தான் இதைச் சொன்னேன். பத்திக், வருகிறேன்.''

ஹருண் அறையை விட்டுவெளியேறினுன். பாப்லு விருந்தையிலே தான் அதுவரை நின்றுகொண்டிருந்தான். என்ன நடந்தது என்று அவன் விளங்கிக்கொள் முன்னமே தகப்பனுர் அவனை அழைத்தார். ''பாப்லு, வா இங்கே.''

பாப்லு அறையுள் நுழைந்து தந்தையின் மேசையருகில் சென்ருன். சாரதிந்து சன்யால் எழுந்து அவன் அருகே வந்தார்.

''எங்கே நோ இருக்கிறது?'' என்று கேட்டார். பாப்லு தலைவீக்கத்தைக் காட்டினுன். அந்த வீக்கம் இன்னமும் முற்ருகக் குறைந்து விடவில்லை. சன்யால் அதனைத் தொடாமல் மிகவும் கவனமாகப் பார்த்தார்.

''நீ சரியாகத்தான் கஷ்டப்பட்டிருக்கிருய். இல்லையா பாப்லு'' பாப்லு தலையை மறுப்பிற்கு அறிகுறியாக ஆட்டினுன். இல்லை. அவன் கஷ்டப்படவில்லை.

''மேல் மாடிக்குப் போ. ஹரிநாத்திடம் வெந்நீர் வைப்பித்துக் குளி. இன்றைக்கு உனக்கு விடுமுறை டாக்டர் வந்து பார்ப்பார். நீ சுகமாய் இருந்தால் நாளைக்குப் பாடசாலைக்கு போகலாம். நாளை தொடக்கம் காரில் தான் பாடசாலைக்கு உன்னை அனுப்புவேன். போ.''

பாப்லு போனுன்.

சன்யால் அவர்கள் மேசையில் கிடந்த பத்திரிகைகளை மிகுந்த வெறுப்போடு அப்பால் தள்ளிவிட்டார்.

''தேநீர்க்கடை, சைக்...'', ரஜனிபாபு பக்கம் திரும்பிய பொழுதும் ''தேநீர்க்கடை! கற்பனை செய்து பாரும்'' என்று அதே வெறுப்போடு சொன்னுர்.

ரஜனிபாபுவின் மூளையோ வேறொரு விஷயம் பற்றிக் கடுமையாகச் சிந்தித்தது. தமது தலைவருக்குச் சொல்ல முடியாத விஷயம் அது? சன்யால் அவர்கள் தம் மகனை அழைத்து வந்தவனுக்கு உரிய சன்மானம் அளிக்காதது சரிதானு? அவன் பத்திரிகையை வாசிக்காத ஒரே காரணத்திற்காக... ''இல்லை. அது சரி இல்லை'' ரஜனிபாபு இவ்வாறு சிந்தித்தார்.

ஒரு மணித்தியாலம் முன்பினுகப் போலிஸ் அதிகாரி தொலைபேசியில் பேசினுர். ''விளம்பரம் பலன் அளித்ததா?''

சன்யால் அவர்களின் மறுமொழி அவருக்குத் திருப்தியை மட்டுமல்ல அதிர்ச்சியையும் அளித்தது.

''இது அற்புதந்தான் சேர். சில வேளைகளில் ஒருவர் சுவரில் தட்டுத் தடுமாறித் தடவுகிருர். அவனுக்குத் திடீரென்று கதவு தட்டுப்படுவது போலத்தான் இந்த விஷயமும்... உங்கள் மகன் பாதுகாப்பாக வீட்டில் அந்தத் துஷ்டப்பயல்கள் இருவரும் இங்கே கம்பிகளுக்குப் பின்னல்...''

''உண்மையாகவா? எப்படி அவர்களைப் பிடித்தீர்கள்'' சன்யால் வியப்போடு கேட்டார்.

யாரோ ஒருவன் அவர்கள்இருக்கும் இடம் பற்றித் தொலைபேசியில் தகவல் தந்தான். நாங்கள் அவன் சொன்ன இடத்துக்குச் சென்று அவர்களை அவர்களின் படுக்கையில் வைத்தே கைதுசெய்தோம் மணித்தியாலத்துக்கு முன்புதான். பயல்கள் இப்பொழுது முற்ருக விழித்துக்கொண்டார்கள். தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்திருக்கிருர்கள்.''

பொலிஸ் அதிகாரியுடன் பேசிய சிலநிமிஷங்களிலேயே சன்யால் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டார்.

பாப்லுவின்பாட்டிபாப்லுவைத் திணற அடித்துவிட்டாள். என்செல்வம், ''என்குஞ்சு என்முத்து, என்ராஜா, என்று சொல்லிச் சொல்லி அவனை இறுக அணைத்து தலையைத் தடவி-

வீக்க இடத்தில் நோ எடுத்தது. உடலைத் தடவி உச்சி முகர்ந்து அழுதாள், சிரித்தாள், கிருஷ்ண பரமாத்மா அவளின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு பேரனை மீட்டும் அனுப்பிவைத்துவிட்டார். பூசை மணியும், மந்திர செபமும், புராண கதாகாலாசேபமும் நிறைந்த உலகத்தில் வாழும் பாட்டி தனது உலகிலிருந்து வெகுவெகு தொலைவில் இருப்பதாகப் பாப்லுவுக்குத் தோற்றியது.

பிரதீந்திரா இரண்டரை மணிப் புகைவண்டியில் காறக்பூருக்குப் புறப்பட்டான். காறக்பூரில் பெயர் கூட இல்லாது அநாதை போன்று நீ தெருக்களில அலைந்து கொண்டிருந்தபொழுது நான் உனக்கு ஒரு மைல் தொலைவில்தான் இருந்தேன். ஒரே நகரத்தில் உனக்கு நேர்ந்தவை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்தப் பொறுக்கிப் பயல்கள் மட்டும் என் கைகளில் சிக்கியிருந்தால் நான் கொடுக்கும் இரண்டொரு கருட்டி அடிகள் அவர்கள் தங்கள் தகப்பன் பெயரைக்கூட மறந்திருப்பார்கள், அதெல்லாம் போகட்டும் உனக்குக் கொஞ்சம் வீட்டுவேலை தரப்போகிறேன். ஆங்கில பாடத்தில்தான். நீ இப்போழுது ஆங்கிலக் கட்டுரை எழுதத்தொடங்கியிருக்கிறாய். அதில் ஓரளவு தேர்ச்சியும் காணப்படுகிறது. நான் அடுத்தமுறை வரும்பொழுது ஒருகட்டுரை எழுதிவைத்திருந்து காட்டு, என் ஏற்பாடு எப்படி?''

வீட்டில் பாப்லுவுக்கு எல்லாமே பழக்கப்பட்டவைதாம். வீட்டின் மூலை முடுக்குகள், அறைகள், விருந்தைகள், மாடியின் படிக்கட்டுகள் எல்லாமே அவனுடைய அறைச் சுவரில் முன்பு மழைநீர் நனைப்பினால் ஆபிரிக்கா போன்ற உருவம் அமைந்திருந்தது. இப்பொழுது அது வட அமெரிக்காவாம். மாறியிருந்தது! அவ்வளவுக்கு அழுக்கு படர்ந்துவிட்டது.

டாக்டர் போஸ் மத்தியானம் மூன்றரைமணிக்கு வந்தார். வட்டமுகம், இரட்டை நாடி உடம்பும், எப்போழுதும் சிரிப்பும் உடையவர். அவர் பாப்லுவுக்குச் சுரம் 104° காட்டியபொழுதும் அவர் சிரிப்பு மாறவில்லை. பிரிதீந்திரா டாக்டரின் சிரிப்புக்கு அவரின் முகநரம்புகளில் அமைந்துள்ள ஓர் அபூர்வ தன்மையே என்பான். அவர் சிரிக்க விரும்பாத போதிலும் அவ்வேளையிலும் சிரித்துக் கொண்டேயிருப்பார். ஹரிநாத் டாக்டரின் மருந்துப் பையை எடுத்து வந்தான். ரஜனி பாபுவும் வந்தார். பாட்டியும் தொடர்ந்து வந்து திரைக்குப் பின்னால் நின்றாள்; தனது தடித்த மூக்குக் கண்ணாடியூடாக, திரையைச் சற்றே விலக்கிப் பேரனைப் பார்த்தாள். பாப்லுவின் தந்தை நீதிமன்றத்திலிருந்து இன்னும் திரும்பவில்லை.

“மிஸ்டர் பாப்லு, உமது பெறுமதி எவ்வளவு என்று தெரியுமா?'' என்று கேட்டுக் கொண்டே டாக்டர் போஸ் அறையினுள் நுழைந்து பாப்லுவின் படுக்கையருகில் வந்து நின்றார். ''உம்மைப் போல் ஐந்து பேரின் பெறுமதிக்கு ஒரு அம்பாசிடர் கார் விலைக்கு வாங்கலாம். இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?''

பாப்லுவுக்கு அவர் சொன்ன தன் பொருள் உடனடியாக விளங்கவில்லை. டாக்டர் அவனைப் பரிசோதனை செய்த பின் அவன் முதுகிலே செல்லமாகத் தட்டிவிட்டு ரஜனிபாபுவை நோக்கித் திரும்பி ''அந்த அதிர்ஷ்டசாலி யார்? ஐயாயிரம் ரூபா என்பது பகிடியல்ல'' என்றார்.

ரஜனிபாபு சற்று இருமியபடி ''நல்லது. பாபு நான் அதுபற்றி இன்னொருநாள் சொல்கிறேனே'' என்று கூறினார்.

ஹரிநாத்தும் ரஜனிபாபுவும் தொடர டாக்டர் சென்றுவிட்டார்.

இப்பொழுதுதான் பாப்லுவுக்குத் தெரிந்தது. ஹருண் அண்ணாவை அவன் தந்தை ஏமாற்றி விட்டார்- எப்பொழுதாவது பாப்லு செய்திப் பத்திரிகைகளை எடுத்து வாசிப்பதுண்டு. அவனைப் பத்திரிகையில் கவரும் பகுதி விளையாட்டு, சினிமாச் செய்திகள்தாம். ‘காணாமற் போனவர்கள் பற்றி வெளியாகும் விளம்பரங்களையும் அவன் மேலோட்டமாகப் பார்த்திருக்கிறான். காணாமற்போனவர்களின் விபரங்கள், அவர்களின் நிழற்படங்கள், அவர்களைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு வழங்கப் போகும் சன்மானம் ஆகிய விபரங்கள் இத்தகைய விளம்பரங்களின் உள்ளடக்கங்கள். அவன் தந்தை இப்படியான விளம்பரம் பத்திரிகைகளுக்குக் கொடுத்தாரா?

பாப்லு தந்தையின் அலுவலகத்துக்குச் சென்றான். அங்கே பத்திரிகைகள் சிதறிக் கிடந்தன. அவற்றை எடுத்துப் பார்த்தபொழுது அவனைப் பற்றிய விளம்பரங்கள் ஐந்து மொழிகளில் பத்துப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. ஒவ்வொரு விளம்பரத்திலும் பிரீதிந்திரா டார்ஜீலிங்கில் எடுத்த அவனது நிழற்படமும் காணப்பட்டது. “பாப்லு என்ற மறுபெயர் கொண்ட நிகில் பற்றிய விபரங்களை அளிப்பவர்களுக்கு ரூபா 5000/- சன்மானம் வழங்கப்படும்.'' ஹருண் அன்றைய காலைப் பத்திரிகைகள் எதுவும் பார்க்கவில்லை. அதனாலேதான் அவன் தனக்குரிய சன்மானப் பணத்தைக் கோரவில்லை. அவன் அதைக் கோராவிட்டாலும் அதனைப் பெற உரித்துடையவனே. தந்தை சன்மானம் வழங்கியே இருக்க வேண்டும். ஆனால் அவர் வழங்கவில்லை.

பாப்லுவுக்கு மிகுந்த வேதனை உண்டாயிற்று. அவன் வீட்டிலிருந்து வெளியில் வந்து தோட்டத்தை நோக்கிச் சென்றான்; அங்குநின்ற கொய்யாமரம் ஒன்றின் கீழ் அமர்ந்தான்; நீண்டநேரம் சிந்தித்தான்.

அவனுடைய தந்தை ஹருணை ஏமாற்றி விட்டார். இந்த சன்மானப் பணத்தில் ஹருண் தனது வித்தைகளுக்கான எத்தனையோ பொருள்களை வாங்கியிருத்தல் கூடும். அவன் இப்பொழுது தங்கியிருக்கும் அறையிலும் விசாலமும் வசதியும் கூடிய அறையில் வசிக்கலாம்; பணம் பற்றிய கவலையையே நீண்ட காலத்திற்கு மறந்து ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும், வித்தை காட்டிக் கொண்டும் திரிந்திருக்கலாம்.

ஹருண் இதுவரை பத்திரிகையில் வெளியான விளம்பரத்தைப் பார்த்திருப்பான். அவன் என்ன நினைப்பானோ?

பாப்லு திரும்பி வீட்டிற்குள் நுழைந்தான். விசாலமான பெரிய அறைகள்... சோபாக்கள்... புத்தக அலமாரிகள், பூச்சாடிகள், படங்கள், ஆனால் எவையும் இதயத்தைக் குளிர்விப்பனவாய் இல்லை. தளபாடங்கள் தூசி படிந்து கிடந்தன. அவற்றின் வடிவங்களே புலப்படாதவாறு அவ்வளவு தூசியும், அழுக்கும் எவரும் அவற்றைத் துடைத்து, துப்புரவாய், அழகாக வைக்க முயல்வதில்லை. அவன் தமக்கை இருந்த வரையில் அவற்றைக் கவனித்துச் சுத்தமாக்கி வந்தாள். ஆனால் இன்று எவருக்கும் அக்கறை இல்லை.

சோபாவில் கால்களை வைத்துக் கொண்டு பாப்லு சிறிது நேரம் அமர்ந்திருந்தான். கடிகாரம் நான்கு முறை ஒலித்தது. அடுத்த வீட்டில் டியூக் குரைத்த சப்தம் கேட்டது. வீட்டின் முன்பக்கத்தில் தெருநாய் ஒன்று நிற்பதைக் கண்டான். ஹருண் அன்றொரு நாள் அவனைத் தெருநாய் என்று அழைத்தது நினைவில் வந்தது.

உண்மையில் ஒரு தெரு நாய் கூட அவனிலும் மேலானது தான்.

# வேப்ப மரத்தடிப் பேய்

சி. சிவதாசன்

## 1

பவளத் தீவினுள் வடக்கு நோக்கி பத்து மைல் தூரம் உள் நோக்கிச் செல்வோமானால் பசுமை நிறைந்த வயல்கள் கண்ணுக்கு குளிர்மை தரும் அழகான காட்சியை நாம் காணலாம். அந்த வயல்வெளிக் கூடாகச் செல்லும் மண் பாதையில் மேலும் ஒரு மைல் தூரம் செல்லின் பாரிய வேப்பமரங்கள் எங்கள் கண்களுக்கு தென்படும். அந்த வேப்பங் கூடலுக்கு மத்தியில் கண்கள் முழி பிதுங்க, நாவினை வெளியே நீட்டிய வண்ணம் கையிலே சூலாயுதம் தாங்கி நிற்கும் காளியம்மனின் சிலை அமைதியான அந்தச் சூழ்நிலையில் பார்ப்போர் உள்ளத்தைப் பயங்கரம் கொள்ளச் செய்யும். இக் காளியம்மன் சிலைக்குப் பின் புறமாக சிறிய கேணியொன்று உண்டு. வேம்பும் கேணியும் அருகருகே இருப்பதனால் இச் சுற்றாடலைக் கொண்ட கிராமத்திற்கு "வேப்பம் கேணிக் கிராமம்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இக் கிராமத்தில் வாழும் மக்கள் விவசாயம் செய்து வாழ்பவர்கள்.

இவ் உழைப்பாளிகளின் உதிரத்தை உறிஞ்சி ஏப்பமிடும் சில கள்வர் கூட்டமும் அக்கிராமத்தில் இருக்கத்தான் செய்தார்கள். அப்படியான கள்வர்களுள் ஒருவர்தான் "சங்கிலிக்கறுப்பன்." பெயருக்கேற்ற கறுப்பும் நல்ல உடற் பலமும் கொண்ட இவன் அந்தக் கிராம மக்களின் பொருள் வளத்தைச் சிறுகச் சிறுகச் சூறையாடிக் கொண்டிருந்தான். தோட்டங்களில் காய்க்கும் காய்கறிகளை இரவோடிரவாகப் பிடுங்குவதும் ஆடு மாடு, கோழிகளைத் திருடுவதும் இவன் வழக்கமாயிற்று. சங்கிலிக் கறுப்பன் தான் இவற்றையெல்லாம் செய்கிறான் என்பதைத் தெரிந்திருந்தும் அவன் தோற்றத்தைக் கண்டு அஞ்சும் வேப்பங்கேணிக் கிராம மக்கள் எதுவும் பேசாது மனதுக்குள் வேதனைப்பட்டு வாழ்ந்து வரலானார்கள். இதனால் மேலும் துணிவு கொண்ட சங்கிலிக் கறுப்பன் தன் களவுத் தொழிலை விருத்தி பண்ணலானான். இரவில் கிராம மக்கள் துயில்கின்ற நேரம் வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் தங்க நகைகளையும், சேமித்து வைத்த பணங்களையும் திருடிக் கொள்வதால் தினமும் ஒரு வீட்டிலாவது அல்லோல கல்லோலப் படுவது வழக்கமாகப் போய் விட்டது. அன்றொரு நாள் சங்கிலிக் கறுப்பன் அக்கிராமத்தின் பெரிய பணக்காரரான மாணிக்கம் பிள்ளை வீட்டின் கொல்லைப்புறம் திருடும் நோக்குடன் உட்புகுந்தான். இவன் உட்சென்றதை அவதானித்த வீட்டு வேலைக்காரன் அவன் பின்னால் பதுங்கிப் பதுங்கிச் சென்று கையில் வைத்திருந்த பொல்லினால் ஓங்கி அவன் மண்டையில் அடித்தான். இத்தாக்குதலைச் சற்றும் எதிர்பார்க்காத சங்கிலிக் கறுப்பன் ஐயா! எனக் கூக்குரலிட்டுக் கீழே மயங்கி வீழ்ந்தான்.

## 2

சங்கிலிக் கறுப்பனின் அலறல் கேட்டு அயலில் உள்ளவர்கள் எல்லோரும் மாணிக்கம் வீட்டுக்கு ஓடி வந்தார்கள். நித்திரையில் இருந்த மாணிக்கம் பிள்ளையும் சத்தம் கேட்டுக் கொல்லைப் புறத்திற்கு வந்து சேர்ந்தார். என்ன நடந்தது என்பதை வேலையாள் ஒன்றும் விடாமல் எடுத்துச் சொன்னான். கோபங்கொண்ட மாணிக்கம் பிள்ளை தன் மற்ற வேலைக்காரர்களைப் பார்த்து டேய்! என்னடா பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கள்ளக் கழுதையை இழுத்துச் சென்று ஊர் எல்லையில் போட்டு விட்டு வாருங்கள் என உத்தர விட்டான். மாணிக்கம் பிள்ளையின் உத்தரவைக் கேட்ட வேலையாட்கள் சங்கிலிக் கறுப்பனைத் தூக்கிச் சென்று ஊர் எல்லையில் அமைந்திருக்கும் காளியம்மன் சிலைக்கருகேயுள்ள வேப்பமரத்தடியில் தூக்கி வீசி எறிந்து விட்டு ஊருக்குள் சென்றார்கள். அன்றிரவு நடந்த இந்நிகழ்ச்சி அந்த ஊர் மக்களை மிகவும் சந்தோஷம் கொள்ள வைத்ததாயினும் சங்கிலிக் கறுப்பன் மயக்கம் தீர்ந்து எழுந்து விட்டால் ஊரில் நடக்கப் போகும் பெரும் கலவரத்தை எண்ணி வேதனை கொள்ளவும் செய்தது. ஏனென்றால் எதனையும் அஞ்சாது செய்யக் கூடிய கொடூரமானவன் சங்கிலிக் கறுப்பன். நேரம் செல்லச் செல்லச் எல்லோரும் நித்திரைக்குச் சென்று விட்டார்கள். வேப்பங்கேணிக் கிராமம் அமைதியடைந்தது. அந்த அமைதியைச் சீர்குலைக்கும் நோக்குடன் கோழிகள் கூவின. பறவைகள் சத்தமிட்டுப் பறந்தன. கிழக்கு வானம் வெளுத்தது. விடிந்து விட்டதை உணர்ந்த மக்கள் ஆரவாரம் எங்கும் ஒலித்தது. ஒரு சில பெரியவர்கள் வேப்பங்கேணிக்கு அருகே சங்கிலிக் கறுப்பன் என்ன செய்கிறான் என்பதைப் பார்க்கச் சென்றார்கள். என்ன அதிசயம்!! இரவு சங்கிலிக் கறுப்பன் வீசி எறியப்பட்ட இடத்தில் அவனைக் காணவில்லை. வேப்பமரத்தின் கீழே இரத்தம் ஆங்காங்கே சிதறிக் காய்ந்து போய் இருந்தது. அப்படியென்றால் சங்கிலிக் கறுப்பன் எங்கே போயிருப்பான் என மக்கள் தங்களுக்குள் பலவாறு சிந்தித்துக் கொண்டு ஊருக்குள் நுழையலானார்கள். நுழைந்து செல்லும் அவர்களை நோக்கி ஒருவன் களைக்க களைக்க ஓடி வந்தான். அவன் ஏன் இப்படி ஓடிவருகிறான் என்பதைக் கேட்கு முன்பே அவன் "சங்கிலிக் கறுப்பன் வசித்த வீடு முற்றாக எரிந்து விட்டதையும், வீட்டினுள் இருந்த அவனின் மனைவியும் பிள்ளையும் வீட்டோடு எரிந்து போனார்கள் என்றும் சொன்னான்.

எல்லோருமாக சங்கிலிக் கறுப்பன் வசித்த வீட்டிற்குச் சென்று நடந்தவற்றைப் பார்த்து அவன் மனைவிக்கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட நிலையை எண்ணிக் கவலைப்பட்டார்கள். கவலைப்பட்டு என்ன செய்வது? நாட்கள் பல கடந்தன. சங்கிலிக் கறுப்பனை எங்குமே காண முடியவில்லை. அவன் இறந்து விட்டானா? அல்லது வெட்கத்தினால் ஊரை விட்டே ஓடி விட்டானா? என வேப்பங்கேணிக் கிராம மக்கள் பலவாறு எண்ணலாயினர். அக்கிராம மக்களுக்குச் சங்கிலிக் கறுப்பன் இல்லாமல் போனது உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தாலும் இனி என்னென்ன நடக்குமோ எனப் பயமாகவும் இருந்தது.

# 3

இவ்விதம் நாளுக்கு நாள் பயந்து பயந்து வாழ்ந்த அவர்கள் நாளடைவில் சங்கிலிக் கறுப்பன் நினைவை மறந்து மிக்க சந்தோஷத்துடன் வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள்! அயல்கிராம மொன்றில் நடைபெற்ற திருமணச்சடங்கில் கலந்து விட்டு அங்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களோடு ஒற்றை மாட்டு வண்டியில் தனது கிராமமான வேப்பங்கேணிக் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார் சின்னக்கிளி ஐயர். அந்நேரம் மேற்கு வானில் சூரியன் மறைந்து எங்கும் இருள் பரவத் தொடங்கியது. அந்த இருளிலும் கரடு முரடான மண்பாதையில் மிக அவதானமாக தனது ஒற்றை மாட்டு வண்டியைச் செலுத்திக் கொண்டு கிராமத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தார். சின்னக்கிளி ஐயர். அப்பொழுது அவர் எங்கும் கண்டிராத அதிசயம் அவர் கண்களுக்குத் தெரிந்தது. அது எங்கே நடைபெறுகிறது என்பதை அவதானித்தார் ஐயர். என்ன அதிசயம்! காளியம்மனின் சிலைக்கு மிக அருகில் இருக்கும் வேப்பமரத்திலல்லவா அது தெரிகிறது. "எங்கும் யாரும் நடமாடாத அந்த நேரத்தில் இந்த வெளிச்சம் அதுவும் வேப்ப மரத்தில் எப்படித் தோன்றும்." இவ்வாறு தனது உள்ளத்தில் கேள்வியெழுப்பியவாறு மேலும் கிராமத்தை நோக்கி வண்டியில் முன்னேறிக் கொண்டிருந்தார் சின்னக்கிளி ஐயர். வேப்பமரத்தில் தோன்றிய வெளிச்சம் இப்பொழுது மறைந்து மறைந்து இடையிடையே பிரகாசமாகத் தோன்றியது. சின்னக்கிளி ஐயரின் உடல் இலேசாக நடுக்கம் கண்டது. வியர்வை உடலை நனைத்தது. வண்டியை மேலும் செலுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார், அப்பொழுது மீண்டும் வேப்பமரத்தில் வெளிச்சமொன்று பிரகாசமாகத் தோன்றியது. அந்த வெளிச்சத்திலே உருவமொன்று மங்கலாகத் தெரிந்தது. வெளிச்சம் மங்கி அணைந்தது. அதைத் தொடர்ந்து பயங்கரச் சத்தமொன்று இடியோசை போல முழங்கியது. சின்னக்கிளி ஐயர் வண்டியை விட்டுப் பாய்ந்தார். வேப்ப மரத்தை மீண்டும் அண்ணார்ந்து பார்த்தார். அங்கே சரசர என்ற ஓசையோடு ஏதோ ஒன்று கீழ் நோக்கி வருவது தெரிந்தது. மேலும் அவர் தாமதிக்கவில்லை. வயல்வெளியினூடாக ஓடத் தொடங்கினார்.

அவர் ஓடும் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் அவரின் பின்னால் மிக வேகமாக சத்தமொன்று தொடர்ந்து வருவதை ஐயர் உணர்ந்தார். ஐயோ! பேய்! பேய்!! வேப்பமரத்துப் பேய்! காளித்தாயே! என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று! எனச் சத்தமிட்டவாறே மிக மிக வேகமாக கிராமத்திற்குள் ஓடலானார். இப்பொழுது அவர் பின்னால் கேட்ட சத்தம் அடங்கி விட்டது. ஐயர் தப்பினேன் பிழைத்தேன் என ஒருவாறு தனது வீட்டை நெருங்கி வந்து கொண்டிருந்தார். ஐயர் பரக்கப் பரக்க உடலெல்லாம் வியர்க்க வருவதைக் கண்டோர் "ஐயா என்னையா! ஏன் ஓடி வருகிறீர்கள்? உங்கள் வண்டில் எங்கே?" எனத் தொடர்ந்து கேள்வி கேட்கத் தொடங்கினார்கள்.

# 4

அதற்கு ஐயர், "மிகப் பயங்கரமான சத்தம்! விகாரமான உருவம் அது பேய்தான்! பேயேதான்! மரத்தின் உச்சியிலிருந்து எவ்வளவு வேகமாக அது இறங்கியது. நினைக்கவே நெஞ்சம் பதறுகின்றது" என்றார். ஐயரின் இந்தக் கூற்றை அங்கு நின்றவர்கள் யாரும் நம்பத்தயாராக இருக்கவில்லை. "பொய்! முழுப் பொய்! பேயா! எங்கள் கிராமத்திலா! நீங்கள் கூறுவதை எங்களால் நம்ப முடியாது" என அங்கிருந்த ஒருவன் சத்தமிட்டுக் கூறினான். "நீங்கள் நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் விடுங்கள் அதையிட்டு நான் கவலை கொள்ளவில்லை. ஆனால் இந்தக் கிராமத்திற்கு ஏதோ கெடு காலம் வந்து விட்டது. இன்னும் என்னென்ன நடக்குமோ நானறியேன். இப்படியான பயங்கரத்தை நான் என்றுமே சாதித்ததில்லை, என மேலும் சின்னக்கிளி ஐயர் சொல்லிக்கொண்டே போனார். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன் கடகடவெனச் சிரித்தான். ஐயர் அவனைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்! பேயென்றதும் உனக்கு ஏளனமாக இருக்கின்றதோ? உனக்குத் துணிவிருந்தால் எல்லையிலே நான் விட்டுவிட்டு ஓடி வந்த மாட்டு வண்டியைக் கொண்டு வர உன்னால் முடியுமா? எனச் சவால் விட்டார்.

சரி நானே போகிறேன். உங்கள் வண்டியைக் கொண்டு வருகிறேன். அந்தப் பேய் என்னை என்ன செய்துவிடும் என்று பார்க்கிறேன் எனக் கூறியவாறு மிக வேகமாக அந்த இடத்தைவிட்டு கிராமத்தின் எல்லைப்புறத்தை நோக்கிக் கிளம்பினான். அந்நேரம் வானமெங்கும் நட்சத்திரங்கள் மினுங்கிக்கொண்டிருந்தன. இருள் என்னும் போர்வையிலே கிராமம் மூழ்கிக் கிடந்தது. அந்த இருளிலும் கிராமத்தின் எல்லையிலே இருக்கும் பாரிய வேப்ப மரங்கள் பெருமலை போலத் தோன்றியது. இத்தனைக்கும் மத்தியில் அஞ்சா நெஞ்சும் எதனையும் எதிர் நோக்கும் துணிச்சலும் கொண்ட வீரனைப்போல் கம்பீரமாக அவ்விளைஞன் சென்று கொண்டிருந்தான். ஐயரின் வண்டிலைத் தேடி அந்தக் கரடு முரடான மண்பாதையிலே முன்னேறிச் சென்றுகொண்டிருந்த இளைஞன் ஒருகணம் அசைந்தே போய்விட்டான். பாதையின் நடுவிலே பெருநெருப்பு எரிந்தகொண்டிருந்தது. அந்த நெருப்பு எரியும் இடத்தை நோக்கி இளைஞன் நெருங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது கீச்! கீச்! என்ற சத்தத்தோடு ஏதோவொன்று அவன் தோளிலே உரசிச்சென்றது. அது வெளவால்! இதைத்தான் சின்னக்கிளி ஐயர் கண்டு பயந்திருக்கிறார் எனத் தனது மனதிற்குள் எண்ணியவாறு மேலும் இரண்டடி முன்னோக்கிச் சென்றான் அவ்விளைஞன். கண்ணுக்கு இப்பொழுது மிக அருகே நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பை உற்றுநோக்கினான் இளைஞன். அங்கே ஐயரின் வண்டிலும் மாடும் எரிந்துகொண்டிருந்தது. யார் வண்டிலுக்குத் தீ வைத்திருப்பார்கள் என்று அறியும் நோக்குடன் அவ்விடத்தை நோட்டமிட்டான் இளைஞன். அத்தருணம் காது செவிடு படும்படியாக பயங்கரச் சத்தமொன்று எங்கிருந்தோ கேட்டது. அச்சத்தத்தின் ஒலி நான்கு திக்கிலும் எதிரொலித்தது. இளைஞன் திடுக்கிட்டான். சத்தம் முதலில் வந்த திசையை நோக்கினான். வேப்பமரம்! ஐயர் சொன்ன அதே வேப்பமரம்!! காளியம்மன் சிலைக்கு மிக அருகேயுள்ள வேப்பமரம்!!! என அவன் வாய் முணுமுணுத்தது. காளியம்மன் சிலையைப் பார்த்தான் இளைஞன். அங்கே எதுவித மாற்றமும் தென்படவில்லை. அவ்விளைஞன் அஞ்சவில்லை. வருவது வரட்டும் என்ற மனத்துணிவோடு வேப்ப மரத்தை நோக்கி ஓடிச் சென்றான். அப்பொழுது வேப்பமரத்தின் அடியிலே பிரகாசமாகத் தீப்பிளம்பு தோன்றியது. அது திபீர் திபீரெனத் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. அந்தத் தீப்பிளம்பின் ஒளியிலே ஐயர் கூறியது போன்ற விகாரமான உருவம் ஒன்று தோன்றியது. இளைஞனின் துணிவெல்லாம் பறந்தது. உடலெல்லாம் பதறியது. நெஞ்சு டிக், டிக்கென வேகமாக அடித்தது. உடல் வியர்வையால் நனைந்தது. "பேய்! ஐயோ பேய்!! என்னைக்

மினிக் கதைகள்

# யுக்தி

**- யோ. ரேகான்**

சங்கரன் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றில் "சேல்ஸ்மனாக" கடமையாற்றுபவன். தமிழர்கள் கொழும்பில் வாழ்வதை, அதுவும் தமிழ் இளைஞர்கள் அங்கு வாழ்வதை, ஏதோ உலக சாதனை நிலை நாட்டுவதாகக் கருதிக் கொண்டு வாழ்ந்து வருகிற இக்கால கட்டத்தில் தமிழ் இளைஞனான அவன், தனக்குப் பரிச்சயமான சிங்களத்தின் துணைக் கொண்டும், சிங்கள நண்பர்களின் துணை கொண்டும் பிரச்சினையின்றி ஒருவாறு வாழ்ந்து வருகின்றான்.

ஆனால் அவனுக்குப் பிரச்சினையாகவிருப்பது அவனது கும்பகர்ணத் தூக்கந் தான். ஆம், நித்திரை கொள்வதில் அவனுக்கு நிகர் அவனே. அவனது இந்த நித்திரையால் வேலைக்கு நித்தமும் பிந்திச் செல்வான். மனேச்சரிடமும் தாராளமாக வாங்கிக் கட்டுவான்.

கடந்த மாதத்தில் ஒரு நாள். எட்டு மணி வேலைக்குப் பத்து மணிக்குச் சென்றான். மனேச்சர் "லாஸ்ட் வோர்னிங்" கொடுத்துவிட்டார்.

ஆனால் அடுத்த நாளும் வழமை போலவே பிந்தி எழுந்தான். அவசரமாக வெளிக்கிட்டு வேலைக்குச் செல்கையில் மனேச்சரது "வோர்னிங்" நினைவுக்கு வந்து அச்சுறுத்தியது.

பஸ் எடுக்க முன்பு பக்கத்தில் உள்ள "ரெலிபோன் பூத்" திற்குள் சென்றான். யாருக்கோ "போன்" செய்தான். பின்னர் ஆறுதலாக பஸ் எடுத்து சென்றான்.

அவன் சென்ற போது அந்தக் கடையைச் சுற்றி பல பொலிசார் நின்றனர். ஒருவரையும் உள்ளே விடவில்லை. அவனோடு வேலை செய்யும் எல்லாரும் வெளியே நின்றனர். அவர்கள் இவனைக் கண்டதும் "மச்சான் கடைக்கை குண்டு வைச்சுக் கிடக்காம். "போன்" பண்ணிச் சொல்லியிருக்கிறானுகள். உள்ளே போகேலாது" என்றனர். சங்கரன் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டான்.

பொலிசார் தீவிர பரிசோதனையின் பின்பு ஒன்றையும் காணாது திரும்பி விட்டனர்.

அன்று வேலைக்கு முதலாவதாக வந்த மனேச்சர் உட்பட, கடைசியாக வந்த சங்கரன் வரை எல்லோரும் சமத்துவமாகக் கடைக்குள் சென்றனர்.

சங்கரன் தனது யுக்தியை நினைத்துத் தன்னையே மெச்சிக் கொண்டான்.

---

காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!!" எனச்சத்தமிட்டவாறே கிராமத்தை நோக்கி ஓடலானான்.

அவனின் ஓட்ட வேகத்தில் கல்லொன்றில் தடக்கிக் கீழே விழுந்தான். முகம் நிலத்தில் மோதியது. மேலும் ஏதோவொன்று அவனைத் தாக்கியது. அவன் மூக்காலும், வாயாலும் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து. அம்மா! அம்மா!! என்ற முனகல் சத்தம். அவ்வளவுதான். இளைஞன் எழுந்திருக்கவே இல்லை. அப்படியென்றால்......

## 5

அந்த இளைஞன் இறந்தே விட்டான் அந்த இளைஞன் இறந்தமையைப் பொறுக்க முடியாமலோ, என்னவோ? வானத்தில் இருந்த நட்சத்திரங்கள் யாவும் மறைந்தன. கருமை படர்ந்த வானத்தில் இடி முழங்கியது. பேரிரைச்சலோடு மழை கொட்டியது. அந்த மழையிலும் வேப்ப மரத்தடியில் பேயின் அட்டகாசச் சிரிப்பொலி அடங்கவில்லை. சிரித்துக் கொண்டேயிருந்த பேய் மிகவும் விரைவாக அந்தக்கரடு முரடான பாதை வழியே போய் மீண்டும் வயல் வெளியூடாக விரைந்து கொண்டிருந்தது. அதன் அகோரப்பசி தீரவில்லையா? அது மீண்டும் எங்கே போகிறது?...

மறுநாட்காலை வேப்பமரத்தடியைச் சுற்றி ஏகப்பட்ட சனங்கள் கூடி நின்றார்கள். அங்கே இளைஞனின் உயிரற்ற உடல் மழையில் நனைந்த நிலையில் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் வெளியேறிக் காய்ந்து போய் கிடந்தது. "இது பேயின் வேலைதான். பேய் அடித்தபடியால்தான் இரத்தம் கக்கியிருக்கிறது." இப்படிக் கூறுவோரும், "இது காளியம்மனின் திருவிளையாடல் ஐயரைத் துரத்தி இளைஞனைச் சாகடித்திருக்கிறது. அம்மனுக்குப் பொங்கிவிட்டால் எல்லாம் சரியாகி விடும்." என்று சொல்வோரும், வேறு வேறு கதைகள் அளப்போரும், ஒரு புறம் இருக்க, இளைஞனின் சடலத்தை உறவினர்கள் எடுத்துச் சென்றார்கள். இளைஞனின் இறுதிக்கடன்கள் முடிந்து நாட்கள் பல கடந்தன. வேப்பங்கேணிக் கிராம மக்கள் மாலையானதும் கிராமத்து எல்லைக்கு வர அஞ்சினார்கள். எல்லோரையும் பயம் ஆட்கொண்டது. பேய்! வேப்பமரத்துப் பேய்!! இதுவே எங்கும் பேச்சாக இருந்தது. பெரியோர் முதல் சிறுவர் வரை வேப்பமரத்துப் பேயென்றால் உடலே நடுங்கும் நிலையில் காணப்பட்டார்கள்.

பேயை எப்படித் துரத்துவது? கிராமமே கூடி ஆராய்ந்தது. காளியம்மனுக்குப் பொங்கலிட்டார்கள். மந்திரவாதிகளை அழைத்துக் கிராமத்திற்குக் காவலிட்டார்கள். இவை யாவும் பேயை ஒன்றும் செய்துவிடவில்லை. அதன் நடமாட்டம் அதிகரித்தே வந்தது. உயிர்ப் பலிகள் கூடிக்கொண்டே வந்தது. இப்பொழுது இருண்டு விட்டால் மக்கள் வீட்டுக்குள்ளேயே அடங்கி விடுவார்கள். இதனால் பேயின் அட்டகாசம் மேலும் அதிகரித்தது. இப்படியாக அக்கிராம மக்கள் துன்பத்தில் திளைத்து வரும் நாளில் அன்றொருநாள்...

## 6


பெரியதம்பி. நீண்ட முறுக்கு மீசை. வெற்றிலைக் காவி படிந்த பற்கள். தலையில் கொட்டைப் பாக்களவு குடும்பி. பருத்த வண்டி கருத்த மேனி. இத்தனை அமைப்புங் கொண்ட மொத்த உருவத்திற்குச் சொந்தமானவர். மாந்திரிகத்தில் கை தேர்ந்தவர். இவரைக் கண்டால் பேய்களே நடுங்கி ஒளித்து விடும். அந்த அளவிற்கு அவர் புகழ் எங்கும் பரவி இருந்தது. வேப்பங்கேணிக் கிராமத்தின் அயற் கிராமமொன்றில் வசிக்கும் இவரது காதிலும் வேப்பமரத்துப் பேய் பற்றிய செய்தியும் எட்டியது. இதனைக் கேள்வியுற்ற பெரியதம்பி தனது புகழை மேலும் ஓங்கச் செய்ய இது ஒரு சந்தர்ப்பம் என எண்ணிக் கொண்டான். வேப்பங்கேணிக்

கிராம தலைமைக்காரருக்கு, தன்னால் பேயைத் துரத்த முடியும் எனத் தகவல் அனுப்பினான். இந்தச் செய்தியைக் கிராமத் தலைவர் மூலம் அறிந்த மக்கள் ஆனந்தம் அடைந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை பெரியதம்பி மாந்திரீகரின் வருகைக்காக கிராம மக்கள்யாவரும் காத்திருந்தார்கள் ஆனால் பெரியதம்பியரோ வரவில்லை. நேரம் மாலையாகிக் கொண்டிருந்தது. கிராம மக்கள் இதனைக் கண்டு ஏமாற்றத்தோடு மேலும் அங்கு நிற்க முடியாமல் அச்சத்தில் தத்தமது வீடுகளை நோக்கிச் சென்று விட்டார்கள். அக்கிராமமே அமைதியில் மூழ்கியிருந்தது. எங்கும் யாரும் நடமாட முடியாத நேரம் பெரிய தம்பியரும், தனது உதவியாளனும் மாட்டு வண்டியில் வந்து கொண்டிருந்தனர். எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்த பெரியதம்பி மாட்டு வண்டியின் பின்பக்கம் அமர்ந்திருக்க அவரின் உதவியாளன் வண்டியை ஓட்டி வந்தான். மாடுகளின் கழுத்திலே தொங்கிய கிங்கிணி மணியோசையையும், மாட்டுவண்டியின் கட கட சத்தத்தையும் தவிர அங்கே வேறு சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை. வண்டி கிராமத்து எல்லையை நெருங்கியது. அப்போது வேப்பமரத்தின் உச்சியில் தீப்பிழம்பு தோன்றியது மாடுகள் வெருண்டன. வண்டியைச் செலுத்திய உதவியாளன் ஒரு கணம் திகைத்தே போனான். வண்டி மேலும் செல்ல முடியாது மாடுகள் நிலையாக நின்றன.

மாட்டு வண்டி நிலையாக அசையாது நிற்பதைக் கண்ட பெரிய தம்பி வண்டியை விட்டு ஓடிவரவும் வேப்பமரத்தில் திரும்பவும் தீப்பிழம்பு தோன்றவும் சரியாக இருந்தது. பெரியதம்பியின் உதவியாளன் உடல் உதறல் எடுத்தது. பேயின் அட்டகாசச் சிரிப்பொலி எங்கும் எதிரொலித்தது. பெரியதம்பியர் தனது மந்திரக் கோலை கையில் எடுத்தார். பேய் மிக விரைவாக மரத்திலிருந்து கீழ் நோக்கி வருவது மிகத் துலக்கமாகத் தெரிந்தது. மேலும் அங்கு நிற்க முடியாமல் பெரிய தம்பியின் உதவியாளன் ஓட முற்பட்டான். அப்போது

# 7

ஓட முற்பட்ட பேயோட்டி பெரியதம்பியின் உதவியாளனை வேப்பமரத்தடிப் பேய் பயங்கரமாகத் தாக்கியது. அதனால் அவன் பெரும் சத்தமிட்டான். அந்தச் சத்தம் அவ்விடத்தையே ஆக்கிரமித்தது. மீண்டும் பேய் அவனின் முகத்தைத் தாக்கியது. இப்பொழுது அவனால் கத்த முடியவில்லை. தரையில் வீழ்ந்து வேதனையால் முனகினான். அவன் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் வெளியேறியது. பேய் அவனின் அவலநிலை கண்டு அட்டகாசமாகச் சிரித்தது. சிரித்துக் கொண்டே அது பெரிய தம்பியரை நோக்கிப் பாய்ந்தது. பெரியதம்பியர் சற்று விலகிக் கொண்டார். பேய் நிலத்தில் வீழ்ந்து எழும்பியது. அதன் முகம் கோபத்தால் விகாரம் அடைத்தது. பற்கள் அகோரமாகக் காட்சியளித்தது. பெரியதம்பியர் அஞ்சவில்லை. எத்தனையோ பேய்களை விரட்டியடித்தவரல்லவா? அவர் பேய்களைக் கண்டு என்றுமே அஞ்சியதில்லை. துணிச்சலோடு பேயை அணுகினார். பேய் மீண்டும் தன் அகோரப் பற்களைக் காட்டி சிரித்தது. பெரியதம்பியர் முந்திக் கொண்டார். கைகளில் இருந்த மந்திரக் கோலால் தாக்கினார். மந்திரக்கோல் இரண்டாக முறிந்தது. பேய் மீண்டும் ஆத்திரமடைந்தது. பெரியதம்பியரின் கொட்டைப் பாக்களவு குடும்பியைப் பிடித்தவாறே அவரை அங்கும் இங்குமாக சுழற்றியது. பெரியதம்பியர் வேதனையால் கூச்சலிட்டார்.



பேயின் பிடி தளருவதாக இல்லை. பெரியதம்பியரின் துணிச்சலெல்லாம் எங்கோ பறந்து போய் விட்டது. பேயை விரட்டும் மந்திரமே மறந்து போகுமளவிற்கு பெரிய தம்பியரின் நிலை கலங்கிப் போய் விட்டது. செய்வதறியாது தவித்தார். அவ்வளவுதான். அவரினை பேய் தூக்கி வீசியது. அவர் வீசிய பந்துபோல் நிலத்தில் வந்து வீழ்ந்தார். அவ்வளவு தான் அவரின் உயிர் அடங்கியது. இரத்தம் வாயாலும் மூக்காலும் வெளியேறியது. பேய் வெற்றிக்களிப்பில் வயல் வெளியினூடாக கூச்சலிட்டவாறு மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கிராமத்தின் எல்லைப்புறத்திலிருக்கும் அந்தமயானத்தை அடைந்த பேய் நாலாபக்கமும் பார்வையைச் செலுத்தி விட்டு இப்பொழுது மிக அமைதியாக அருகேயுள்ள காட்டினுள் சென்று மறைந்தது. இரவிலே வேப்பமரத்தில் வாசம் செய்யும் பேய் பகலிலே ஏன் அங்கிருப்பதில்லை? அது மர்மமாகவே இருந்தது. மயானத்தை அடுத்துள்ள அந்தப் பற்றைக் காட்டினுள் பேய் சென்று மறைகிறதென்றால் அதன் இருப்பிடம் அந்தச் சூழலில் எங்காவது தான் இருக்கவேண்டும். அதனைக் கண்டு பிடிக்கும் அளவிற்கு அக்கிராம மக்கள் துணியவில்லை. ஏனென்றால் பேயை அதன் நடமாட்டத்தைக் கண்டு அவர்கள் அஞ்சினார்கள். அதுவே பேயின் அக்கிரமச் செயலுக்கு அத்திவாரமாக அமைந்தது. மறுநாட் காலை பேயோட்டி பெரியதம்பியரினதும் அவரின் உதவியாளரினதும் மரணங்கள் காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. இதனால் நாட்கள் செல்லச் செல்ல வேப்பங்கேணிக் கிராமத்திற்கே அயற் கிராம வாசிகள் வர அச்சம் கொண்டார்கள் இவ்வாறு வேப்பங்கேணிக் கிராம மக்கள் பேயின் நடமாட்டத்தால் மேலும் வேதனையடைந்து செய்வதறியாது துடித்துக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில் அக்கிராமத்தை நோக்கி...

# 8

அந்த இருவர்களும் யார்? அவர்களுக்கும் வேப்பங்கேணிக் கிராமத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? அவர்கள் ஏன் அக்கிராமத்திற்கு வரவேண்டும்? அந்தக் கிராமத்தின் பெரிய பணக்காரரான மாணக்கம் பிள்ளையின் மகனும் மருமகனும் தான் அவர்கள். பரம்பரைப் பணக்காரரான மாணிக்கம் பிள்ளை பட்டினத்துப் பாடசாலையொன்றில் தனது மகனை படிப்பதற்காக அனுப்பியிருந்தார். பட்டினத்தில் வாழும் அவரது தங்கையின் வீட்டிலேயே மகனைத் தங்கவைத்தார். பாடசாலை விடுமுறைக் காலமாதலால் அவரின் அன்பு மகன் வித்தியாபரன் கிராமத்திற்கு தன் தந்தையின்சகோதரி மகன் திருக்குமாருடன் புறப்பட்டு வந்தான்.

தனது மாமனார் வசிக்கும் கிராமத்தை நோக்கிப் புறப்பட்ட திருக்குமாருக்கு அந்த அழகிய கிராமத்தின் அமைதியான சூழல் நன்கு பிடித்து விட்டது. பார்க்கும் இடமெல்லாம் பச்சை படர்ந்து காட்சி தரும் அக்கிராமத்தின் எழில்தோற்றம். பரந்து வளர்ந்திருக்கும் பாரிய வேப்பமரங்கள். அதனருகே பசுமை

யாக தோற்றமளிக்கும் கேணி. பார்ப்போர் நெஞ்சங்களை திகில் கொள்ளச் செய்யும் காளியம்மனின் பயங்கரத் தோற்றம் கொண்ட உருவச் சிலை. இவை யாவற்றையும் முதன் முதற்கண்ட திருக்குமாரின் நெஞ்சில் மகிழ்ச்சி கொப்புளித்தது- பட்டினத்து மண்ணிலே, பிறந்து வளரும் அவனுக்கு வேப்பங்கேணிக் கிராமத்தில் பாதம் பதிந்தது முதல்



நானும் இந்த அழகிய கிராமத்தில் பிறந்திருக்கக் கூடாதா என்ற எண்ணமும் தோன்றியது. பட்டினத்திலிருந்து பலமைல் தொலைவிலுள்ள அக்கிராமத்தை நோக்கி படகிலும் பின் வில்லுவண்டியிலும் பிரயாணத்தை மேற்கொண்டு வந்த திருக்குமார் மாமன் மாணிக்கம் பிள்ளையின் வீட்டையடைந்தான். அந்தக் கிராமத்தின் எழிலில் தன்னையே மறந்தஅவனுக்கு அக்கிராமத்தையே ஆட்டிப் படைக்கும் வேப்பமரத்தடிப்பேயைப் பற்றித் தெரிந்திருந்தால் கிராமத்தில் தங்கும் எண்ணமே எழுந்திருக்காது. தன் மகன் வித்தியாபரனோடு தங்கையின் மகன் திருக்குமாரைக் கண்டதும் மாணிக்கம்பிள்ளையின் மனம் பூரித்துப் போய்விட்டது. உவகை பொங்க இருவரையும் மார்போடு அணைத்துக் கொண்டார். அவர்கள் வருகையால் மாணிக்கம்பிள்ளையின் வீடுகலகலப்பாக இருந்தது; விருந்து அமர்க்களமாக நடந்தது.

வேப்பங்கேணிக் கிராமத்திலேயே வசதிகள் பல கொண்ட ஓரே மாடி வீடு மாணிக்கம்பிள்ளையினுடையதுதான். அந்த வீட்டின் மேல் மாடியில் மகன் வித்தியாபரனுக்கென ஒதுக்கப்பட்ட அறையிலேயே திருக்குமாரும் தங்கினான். காலைக்கதிரவன் பகற்பொழுதெல்லாம் நர்த்தனம் புரிந்துவிட்டு மேலைத்திரைவானை நோக்கிப் பள்ளி கொள்ளச் சென்று கொண்டிருந்தான். அதனைக்கண்டு ஆனந்தத்தால் உந்தப்பெற்று வானத்தில் நட்சத்திரங்களுக்கு மத்தியில் அம்புலி தன்னெழில் காட்டி நின்றான். சிறுவர்கள் இருவரும் காற்றுவசதிக்காக யன்னல்களைத் திறந்து விட்டு நித்திரையில் ஆழ்ந்தனர். ஊரே அமைதி கொண்டு அடங்கி விட்டது. அந்த நேரம் வேப்பமரத்தை நோக்கி பேய் விரைந்து வந்தது. மரத்தின் மீது தாவியேறி உச்சிக்கிளையை அடைந்தது. அங்கிருந்தவாறே உரத்துச் சத்தமிட்டது. அமைதியான அந்தச் சூழ்நிலையில் வேப்பங்கேணிக் கிராமத்து எல்லைக்கு மிக அண்மையாக இருக்கும் மாணிக்கம்பிள்ளை வீட்டிற்கு மிகத் தெளிவாகக் கேட்டது அந்தப் பேயின் சத்தம். அந்தப் பயங்கரச் சத்தம் நித்திரையில் இருக்கும் திருக்குமாரின் காதுகளில் எதிரொலித்தது. திருக்குமாரின் காதுகளிலும் அது தெளிவாகக் கேட்டது. திருக்குமார் திடுக்கிட்டு எழுந்தான். பேயின் சத்தம் மீண்டும் மீண்டும் கேட்டது. திருக்குமார் அச்சத்தால் அலறினான். அவன் போட்ட அலறல் சத்தத்தால் வித்தியாபரனும் துள்ளிக்குதித்து எழுந்தான். அப்போது…

# 9

படுக்கையிலிருந்து எழுந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே உடல் உதறலெடுக்க திகைப்புற்று மௌனமாக நின்றார்கள். அவர்களின் மௌனம் கலைந்தது. திறந்து கிடந்த அந்த அறை வாசலில் மாணிக்கம்பிள்ளை கைத்துப்பாக்கியோடு நின்றார். எதற்காகச் சத்தமிட்டீர்கள். எனத் திருக்குமாரையும் வித்தியாபரனையும் பார்த்துக் கேட்டார். அதற்குத் திருக்குமார் "மாமா விட்டுவிட்டு பயங்கரமாகக் கேட்கிறதே அந்தச் சத்தமென்ன? அதனைக் கேட்டே நான் கூச்சலிட்டேன். எனது சத்தம் கேட்டே வித்தியாபரனும் எழுந்துள்ளான் எனக் கூறினான். ஆ!… அதுவா… அந்தச் சத்தம் கேட்டு வீட்டினுள் இருக்கும் நீங்கள் பயப்படத் தேவையில்லை. அறைக்கதவுகளையும், யன்னல்களையும் பூட்டிவிட்டு நித்திரை செய்யுங்கள் என மாணிக்கம்பிள்ளை கூறினார். அவரின் பதில் திருக்குமாருக்குத் திருப்தியைத் தரவில்லை. "மாமா என்ன மாமா? அந்தப் பயங்கரச் சத்தம் என்னவென்று நீங்கள் கூறவில்லையே? என்றான் திருக்குமார். அது… அது… பேயின் சத்தம் என்றார் மாணிக்கம்பிள்ளை. பேயா!… எங்கேயிருக்கிறது மாமா பேய்! அப்படியொன்று இந்தக் கிராமத்தில் நடமாடுகின்றதா? அதை நீங்களும் நம்புகிறீர்களா? எனத் திருப்பிக் கேட்டான் திருக்குமார். அவன் பயமெல்லாம் எங்கோ பறந்து விட்டது. அவன் பேயென்ற வார்த்தையை என்றும் நம்பியதில்லை. அதனால் மாமனின் பதிலைக் கேட்ட அவனுக்கு ஆச்சரியம் மேலிட்டது.

குமார் "அந்தப் பேய் இந்தக் கிராமத்து மக்களைத் தினம் தினம் பழிவாங்குகின்றது. நாளுக்கு நாள் அதன் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. மிகப் புகழ் வாய்ந்த பேயோட்டி பெரியதம்பியையும் அவன் உதவியாளனையும் பழி வாங்கி இன்னும் ஐந்து நாட்கள் கூட ஆகவில்லை. நானே அதற்கு அஞ்சுகிறேன். பேயை வெல்ல மனிதரால் முடியாது." கிராம மக்கள் அனைவருமே மாலையானதும் வீட்டுக்குள் ஒதுங்கி விடுகிறார்கள். என்ன செய்வது விதியை நொந்தவாறு காலத்தை கடத்துகிறார்கள், இக்கிராமத்து மக்கள் என மிக மனம் வெதும்பக் கூறினார் மாணிக்கம்பிள்ளை. மாமா "எமது பட்டணத்தில் சிறுவர்கள் கூடத் தனியாகச் செல்வார்கள். நான் கூட எத்தனையோ தடவை தனியாகச் சென்றுள்ளேன். என்றான் திருக்குமார். சரி! சரி! உன்னோடு கதைக்க முடியாது. விடிந்ததும் பேயின் அட்டகாசம் பற்றி விபரமாகச் சொல்கிறேன். இப்போ படுங்கள் என்று கூறி விட்டு வெளியேறினார் மாணிக்கம்பிள்ளை. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு இருந்த வித்தியாபரன் திருக்குமாரைப் பார்த்துக் "காலையிலேயே உங்கள் பட்டணத்திற்குப் போய்விடுவோம். இங்கிருக்க எனக்கும் பயமாக இருக்கிறது" எனக் கூறினான். அப்பொழுது அந்தப் பயங்கரச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. வித்தியாபரா! இதிலேதோ மர்மம் தங்கியிருக்கிறது. நீ பயப்படாதே! நாம் இருவரும் அதனைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு உன்னுடைய உதவி எனக்குத் தேவை. உன்னால் உதவ முடியுமா? என்றான் திருக்குமார்! அதற்கு வித்தியாபரன் பின்வருமாறு கூறினான்: திருக்குமார்! அப்பா எதற்கும் அஞ்சாதவர். எதையும் துணிந்து செய்யக் கூடியவர். அவரே பேயைக் கண்டு அஞ்சுகிறார் என்றால் சிறுவர்களாகிய நாம் எம்மாத்திரம். அங்கேதான் பெரியதவறு இருக்கிறது, எல்லா மக்களும் பயந்து ஒதுங்குவதால் தான் பேய்க்கும் வாய்ப்பேற்பட்டுள்ளது. நீ விஞ்ஞானம் படிக்கவில்லையா? விஞ்ஞான ஆசிரியர் கூறுவதைக் கேட்க வில்லையா? "பேய் பிசாசு, முனி என்ற எது

வும் உலகிலில்லை. அவ்விதம் எண்ணுவதே முட்டாள்தனம் என்று அவர் அடித்துச் சொல்வதை நீ கேட்கவில்லையா? அதுவும் பொய்யா? துணிவு நமக்குத் துணையிருந்தால் நாம் இந்தப் பலப் பரீட்சையில் வெற்றி கொள்ள முடியும். அதற்கு உன் தந்தையின் கையில் உள்ள கைத் துப்பாக்கி எம் கைக்கு வரவேண்டும். அதனை எடுத்துத் தர உன்னால் முடியுமா? எனக் கேட்டான் திருக்குமார். என் தந்தையிடம் அந்தத் துப்பாக்கியை விட மேலும் இரண்டு துப்பாக்கிகள் உண்டு. அதில் ஒன்றை நான் கட்டாயம் எடுத்துத் தருவேன் என்றான் வித்தியாபரன். சபாஷ்... வித்தியாபரா!... இனிமேல் பயப்படாது நித்திரை செய். எனக் கூறிவிட்டுச் சிந்தனையோடு படுத்துக் கொண்ட திருக்குமாரின் நெஞ்சத்தில் பெருந் திட்டமொன்று உருவாகிக் கொண்டிருந்தது. அந்தத்திட்டம் என்ன?...

## 10

இரவிரவாக வேப்ப மரத்தடிப் பேயின் மர்மத்தைக் கண்டு பிடிப்பதற்கான திட்டங்களைத் தன் நெஞ்சத்தே வகுத்துக் கொண்டிருந்த திருக்குமார் விடியுமுன்பே படுக்கையை விட்டு எருந்தான். எழும்பியவன் தன்னருகே மெய்மறந்து நித்திரை செய்த வித்தியாபரனை எழுப்பினான். எழும்பிய வித்தியாபரனுக்கு தன் திட்டத்தை விளக்கிக் கூறினான். அத்திட்டத்தின் படி வித்தியாபரன் தன் தந்தைக்குத் தெரியாமல் அவரின் கைத்துப்பாக்கியை எடுக்க வேண்டும். இரவு கிராமத்து மக்கள் நடமாட்டம் இல்லாத வேளையில் யாருக்கும் தெரியாமல் இருவரும் வேப்பங்கேணிக் கிராமத்தினுள் எல்லைப் புறத்தையடைந்து மறைந்திருந்து பேயின் நடமாட்டத்தை அவதானிக்க வேண்டும். இந்த விபரங்களை வித்தியாபரனுக்கு விளக்கிய திருக்குமார் வித்தியாபரனோடு காலைக்கடன்களை முடித்தபின் மாமனாருடன் அமர்ந்து காலை உணவை உண்ண ஆயத்தமானான். வித்தியாபரனும் உடனிருந்து உணவை உண்ணலானான். திருக்குமார் மாமனாரிடம் வேப்ப மரத்தடிப் பேயைப் பற்றித் துருவித் துருவி ஆராய்ந்தான். மாமனார் கூறியவற்றைக் கேட்டுத் திருக்குமார் ஆச்சரியமடைந்தான். ஆனால் இவற்றை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த வித்தியாபரனோ எதுவும் பேசவில்லை. அவனுக்குத் தந்தையின் முற்கோபத்தைப் பற்றி நன்கு தெரியும். தான் ஏதாவது கேள்விகளைக் கேட்டால் தந்தையார் கோபப்பட்டு விடுவார் என அவன் பயந்தான். எல்லோரும் காலையுணவை முடித்துக் கொண்டனர்.

சிறுவர்கள் இருவரும் வெளியே சென்றுவர மாணிக்கம்பிள்ளையிடம் அனுமதி பெற்றனர். பகல் நேரமாதலால் மாணிக்கம்பிள்ளை அவர்களைத் தடுக்க வில்லை. இருவரும் வேப்பங்கேணிக் கிராமப்புற எல்லைக்கு வந்துசேர்ந்தனர். வித்தியாபரனும் திருக்குமாரும் தங்கள் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற கிராமப்புற எல்லையிலுள்ள வேப்பமரங்களையும், அதன் அருகே கம்பீரமாக வீற்றிருக்கும் காளியம்மன் சிலையையும் சிலைக்கருகேயிருக்கும் சிறுகேணி உட்பட அச்சுற்றுடல் முழுவதையும் தீவிரமாக, ஆராய்ந்து பார்த்தார்கள். முதல்நாள் இரவு அங்கு யாரும் நடமாடியதற்கான அடையாளங்கள் தென்படவில்லை. அப்போது "அட திருக்குமாரா! கீழே பார்த்து என்னடா பிரயோசனம். பேய்க்குக் காலில்லையல்லவா! அது பறந்து வந்திருக்கலாமல்லவா!" எனக் கூறினான் வித்தியாபரன்.

அவன் கூறிய இக்கூற்றினைக் கேட்டு திருக்குமார் கடகடவெனச் சிரித்தான். வித்தியாபரனைஅழைத்து வேப்பமர வேர்ப்பாகமொன்றில் அமரச்செய்து தானும் அருகே அமர்ந்து "வித்தியாபரா! உனக்கு இன்னும் பேய் இந்த உலகத்தில். இருக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. உன் உள்ளத்தில் இந்தப் பேயின் மர்மத்தை கண்டு பிடிப்போம் என்ற நம்பிக்கை துளியளவுமில்லை. அது எனக்கு நன்றாகப் புரிகிறது. இருந்தாலும் நான் கூறுவதைக் கவனமாகக் கேள். வெளிநாடுகளில் வாழ்ந்த வீரச் சிறுவர்களின் வரலாறுகளை நீ நன்கு அறிந்திருந்தும், அவர்களின் வீர தீரச் செயல்களை தெரிந்திருந்தும் எதற்காகப் பயப்படுகிறாய். உனது கிராம மக்களைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம் உனக்கிருந்தால் நெஞ்சிலே துணிவோடு இன்றிரவு கட்டாயம் நீ என்னோடுவந்தே தீரவேண்டும், வருவாயா வித்தியாபரா வருவாயா? திருக்குமாரா உன்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கையை நான் பாராட்டுகிறேன். நான் உனக்கு உதவியாக நிச்சயம் வருவேன். அனால் என்னை எந்த ஆபத்திலிருந்தும் நீ காப்பாற்றுவாயா ? திருக்குமார் மீண்டும் சிரித்தான். நீவித்தியாபரா! நீ என் மாமன் மகன் உனக்கு எந்த ஆபத்து வந்தாலும் அது எனக்கு ஏற்பட்டது போலவே நான் கருதுவேன். உன்னைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமையுமல்லவா? எனிமேலும் தாமதமேன் வா! நாமிருவருமாக இரவு இங்கு வருவதற்கான ஆயத்தங்களைச் செய்வோம். எனக்கூறியவாறு அவ்விடத்தை விட்டு அகல ஆயத்தமானார்கள். அந்த நேரம் வித்தியாபரன் பாதையில் ஏதோ ஒன்றைத் திருக்குமாருக்குச் சுட்டிக் காட்டினான். அது...... என்ன?...

## 11

திருக்குமார் பாதையை நோக்கினான். அங்கே மாமன் மாணிக்கம்பிள்ளை பயணம் செய்யும் மாட்டு வண்டிவந்துகொண்டிருந்தது. அந்த அழகான வண்டியை மீசைக்கார மணியம் ஓட்டி வந்தான். திருக்குமாரும் வித்தியாபரனும் நின்ற இடத்தை வண்டி நெருங்கியதும் நின்றது. வண்டியின் பின்புறத்தே கம்பீரமாக வீற்றிருந்த மாணிக்கம்பிள்ளையைச் சிறுவர்களிருவரும் நெருங்கினர். "மாமா எங்கே மாமா போகிறீர்கள். நாங்களும் உங்களுடன் கூடவரலாமா?" எனத்திருக்குமார் கேட்டான். அதற்கு மாணிக்கம்பிள்ளை அவனைப் பார்த்து "நான் அவசர அலுவல் காரணமாக அயல் கிராமத்திற்கு செல்கிறேன். வருவதற்கு இரண்டு மூன்று நாட்கள் செல்லலாம். எனவே நீங்கள் கவனமாக இருங்கள். அநாவசியமாக எங்கும் செல்லாதீர்கள் எனக் கூறினார். அவர்



கூறிய வார்த்தைகள் திருக்குமாரின் நெஞ்சத்திலே மகிழ்ச்சியை ஊட்டியது. வித்தியாபரன் தந்தையை எட்டி முத்தமிட்டான். அதைப் பார்த்த திருக்குமாரும் மாமனுக்கு கைகாட்டி வழியனுப்பி வைத்தான். அதைத் தொடர்ந்து மீசைக்கார

மணியும் மாடுகளுக்கு மாறிமாறித் தடியால் அடித்தான். அவை வேகமாக ஓடத்தொடங்கின. மாடுகளில் கட்டியிருந்த மணிகளின் கிங்கிணிச் சத்தம் ஒய்ந்தது. வண்டி தூரச் சென்று மறைந்து விட்டது.

வித்தியாபரன் திருக்குமாரைப் பார்த்து "அப்பா போய் விட்டார். இந்தச் சந்தர்ப்பம் எமக்கு ஓர் நல்ல வாய்ப்பு இன்றிரவு நாம் வேப்பமரத்துப் பேயைப் பார்த்து விடலாம்! இல்லையா" என்றான். திருக்குமார் மைத்துனன் வித்தியாபரனின் துணிச்சலைக் கண்டு மனதுக்குள் சிரித்ததோடு "வா நாம் இப்போ வீடு சென்று இரவு பேய் வேட்டைக்குச் செல்வோம்" என்றான். இருவரும் வீட்டை அடைந்தனர். வித்தியாபரன் தாயிடம் சென்று எமக்குப் பசிக்கிறது என்றான். தாயார் சிறுவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று மதிய உணவு பரிமாறினாள். இருவரும் நன்றாகச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்ததும் மிகவும் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் தமது பேய் வேட்டைக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்தார்கள். வித்தியாபரன் தந்தையின் அறைக்குள் சென்று துப்பாக்கியைத் தேடினான். அங்கே ஒரு துப்பாக்கியே இருந்தது. அதனைக் கையிலே எடுத்தான். தோட்டாக்கள் இருக்கும் பெட்டியைத் திறந்தான். அதனுள் காணப்பட்ட தோட்டங்களில் பன்னிரண்டினை பையொன்றினுள் திணித்தான். அவன் கையில் எடுத்த துப்பாக்கி சுழல்துப்பாக்கி. ஏற்கனவே தந்தையார் அத் துப்பாக்கியினுள் தோட்டாக்களை எப்படிச் செலுத்துவார் என்பதை அறிந்திருந்தமையாலும், அதனை எவ்வாறு சுடுவதற்கு இயக்குவார் என்பதனை நன்கு கவனித்தமையாலும் வித்தியாபரனுக்கு துப்பாக்கியை இயக்க பழகவேண்டுமென்ற எதுவித சிரமமும் இருக்கவில்லை. திருக்குமாரின் உதவியோடு மற்றும் தேவையான நீண்ட தேடாக் கயிறு, கத்தி, டோச் இவை யெல்லாவற்றையும் ஆயத்தமாக எடுத்துத் தம் அறையினுள் மறைத்து வைத்தான். அவர்களைப் பொறுத்தவரை இப்பொழுது எதைக் கண்டும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்ற எண்ணம் உள்ளத்தில் மேலிட்டது. தானே துப்பாக்கியை வைத்திருப்பதாக வித்தியாபரன் சொன்னதும் திருக்குமார் ஆச்சரியமடைந்தான். முன்பெல்லாம் பேயென்றதும் அஞ்சியொடுங்கிய இவனே இப்பொழுது துணிச்சலுடன் எல்லாவற்றையும் செய்ய முன்வந்துள்ளான் எனத் தனது மனதுக்குள் எண்ணினான். அதனால் அவன் உள்ளம் பூரிப்படைந்தது. ஒரு கிராமத்தையே கலக்கும் அந்தப் பயங்கர வேப்பமரத்தடிப் பேயை ஒழித்துக் கட்டி வேப்பங்கேணிக் கிராம மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்விற்கு ஒளிவிளக்கேற்றப் போகும் தமது பணி வெற்றியடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அந்தச் சிறுவர்கள் இருவரும் கொண்டு செயல்பட்டார்கள். இரவு நெருங்கியது. வேப்பங்கேணிக் கிராமமே இருளில் மூழ்கியது. எங்கும் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை. எல்லோரும் உறக்கத்திற்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் அந்தச் சிறுவர்களான திருக்குமாரும், வித்தியாபரனும் அந்த இருளிலே ஒரு புதிய போராட்டத்தை எதிர்நோக்க ஆயத்தமானார்கள். திருக்குமாரின் கையிலே தேடாக் கயிறும், கூரிய கத்தியும், ரோச்சும் இருந்தது. வித்தியாபரனின் கையிலே துப்பாக்கியும் தோட்டாப் பையும் இருந்தது. மாணிக்கம்பிள்ளை அயல்கிராமம் சென்றது சிறுவர்களுக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. மெல்ல மெல்ல மாடியிலிருந்து கீழே இயங்கிய சிறுவர்கள் இருவரும் முற்றத்தைக் கடந்து மதிலால் ஏறி பாதைக்கு வந்தார்கள். நல்லவேளை அவர்களை வேலையாட்கள் யாரும் காணவில்லை. பின் மிக விரைவாக பாதையோரமாக நடந்து வேப்பங்கேணிக் கிராமப்புற எல்லையை அடைந்தார்கள். அவர்கள் அங்கு வரவும் கறுத்த உருவமொன்று வேப்பமரத்தையடையவும் சரியாக இருந்தது. அதனைக் கண்ட வித்தியாபரன்...

## 12

தன் கைத்துப்பாக்கியால் அந்தப் பயங்கர உருவத்தை நோக்கிச் சுட ஆயத்தமானான். அதனைக் கண்ட திருக்குமார் அவன் கைகளைப் பற்றித் துப்பாக்கியைப் பறித்தான். வித்தியாபரனுக்கு ஆத்திரமேற்பட்டது. கண்கள் கோபக் கனலைக் கக்கின. அவனுடைய மெல்லிய கரங்கள் திருக்குமாரின் கன்னத்தைப் பதம் பார்த்தன. திருக்குமார் துடித்துப் போனான். கோபம் அவனுக்கு ஏற்பட்ட போதும் அவன் அறிவு மழுங்கிவிடவில்லை. வித்தியாபரா! அவசரப்படாதே நீ அவசரப்பட்டாயானால் எமது நோக்கம் பிழைத்து விடும். அதோ பார்! அந்த உருவம் ஏதோவொன்றைக் கையிலெடுக்கிறது. அது பேய்தானா என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்போம். அதுவரை பொறுத்திரு எனத் திருக்குமார் கூறினான். அப்பொழுது அந்தப் பயங்கர உருவத்தின் முன்னால் தீப்பிழம்பு தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. தீப்பிழம்பு மறையும் நேரங்களில் அந்த உருவம் வாயில் ஏதோவொன்றை வைத்திருப்பது சிறுவர்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அந்த உருவம் இப்பொழுது வேப்பமரத்தில் தாவியேறியது. மரத்தின் உச்சிக்கிளைக்கு வந்தது. மேலே சென்றதும் பயங்கரச் சத்தம் அந்த இடத்தையே அதிரவைத்தது. துணிவு மிக்க திருக்குமாரே ஒரு தடவை திகைத்துப் போனான். வித்தியாபரனைச் சொல்லவும் வேண்டுமா? மைத்துனன் திருக்குமாரை அப்படியே கட்டிப் பிடித்தான்.

திருக்குமாரின் மனதிலே திகில் நிறைந்திருந்த போதும் அவன் பயத்தை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. மைத்துனனுக்கு தைரியத்தை வரவழைப்பதற்காக "டேய்! வித்தியாபரா! உன் துப்பாக்கியை ஆயத்தமாக வைத்திரு. அந்த உருவம் கீழே இறங்கியதும் தயங்காமல் அதனை நோக்கிச் சுடு." உன் வீரத்தில்தான் எமது வெற்றியே தங்கியிருக்கிறது" என்று காதில் மெதுவாகச் சொன்னான். அந்த வார்த்தைகள் வித்தியாபரனுக்குத் தேனாக இனித்தது.

இருவரும் இப்பொழுது வேப்பமரத்திற்குச் சமீபமாக யாரும் காணாத வகையில் மறைந்திருந்தார்கள். மீண்டும் பயங்கரச் சத்தம் எங்கும் எதிரொலியோடு கேட்டது. அதைத் தொடர்ந்து பிரகாசமான வெளிச்சம். இப்படியே சில மணித்தியாலங்கள் கழிந்தன. வித்திபாரன் மீண்டும் சலிப்படைந்து விட்டான். அவனை நித்திரை ஆட்கொண்டது. கண்களைக் கசக்கியவாறு அவன் திருக்குமாரைப் பார்த்துப் பேய் கீழே வராதா என்று கேட்டான்.

அதற்குத் திருக்குமார் எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போமென்றான். இருவரும் நீண்ட நேரமாக அங்கே இருந்தனர். வெளிச்சம் அடங்கியது. பயங்கரச் சத்தமும் ஓய்ந்தது. வானத்தில் விடிவெள்ளி தோன்றியது. கோழிகள் கூக்குரலிடத் தொடங்கின. அந்தக் கூக்குரல் ஒலியைத் தவிர வேறெதுவித ஒலியும் அங்கே கேட்கவில்லை. விடிவதற்கான அறிகுறிகள் அவை. பல மணி நேரமாக தாம் விழிப்பாக இருப்பதையெண்ணிச் சிறுவர்கள் இருவரும் மெதுவாகத் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்த போது வேப்பமர உச்சிக்கிளையிலிருந்து அந்தப் பயங்கர உருவம். கீழ் நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. வித்தியாபரனின் கண்கள் அதனைக் கண்டு விட்டன. அவன் துப்பாக்கியை கையில் இறுகப் பற்றியவாறு அந்த உருவத்தை நோக்கிச் சுட்டான். அவன் குறி தவறியது. வேப்பமரத்திலே தோட்டாக்கள் துளைத்தன. உருவம் உசாரடைந்தது. சற்று முற்றும் பார்த்தது. எவரையும் காணவில்லை. மெல்ல மெல்ல நடந்து சுற்றுப் புறத்தை மீண்டும் நோட்டம் விட்டது. மைத்துனனின் குறி தவறியதைக் கண்ட திருக்குமார் தன் கைகளிலே இருந்த தேடாக் கயிற்றில் சுருக்கு வளையமிட்டு உருவத்தை நோக்கி வீசினான். அந்தச் சுருக்கு வளையத்தினுள் பயங்கர உருவம் சிக்கிக் கொண்டது. பலங்கொண்டு அதிலிருந்து விடுபட அந்த உருவம் எத்தனித்தது. வித்தியாபரன் துணிச்சலுடன் உருவத்தின் முன் பாய்ந்தான்.

திருக்குமாரோ தன் கையிலிருந்த தேடாக் கயிறினைக் கைவிடவில்லை. தனக்கருகே யிருந்த மரத்தோடு அதனைச் சுற்றிப் பிடித்தான். உருவத்தால் அச் சுருக்குத் தடத்திலிருந்து தப்பிக்க முடியவில்லை. முன்னே பாய்ந்த வித்தியாபரன் கைத்துப்பாக்கியால் ஓங்கி உருவத்தின் தலையில் அடித்தான். மறுகையால் அதன் முகத்தைப் பற்றிப் பிடித்தான். அவன் கைகளுக்குள் ஏதோ வொன்று தட்டுப்பட்டது. அதை அவன் பலங்கொண்ட மட்டும் பற்றி இழுத்தான். கைகளுக்குள் அது சிக்கிக் கொண்டது.

அது!.. அது!. முகமூடி!... அப்படியென்றால் இதுவரை அந்த முகமூடிக்குள் மறைந்திருந்தது யார்?... வித்தியாபரனுக்கு ஓரே ஆச்சரியமாக இருந்தது. அவன் மீண்டும் அந்த உருவத்தின் உடலில் பற்றி இழுத்தான். உடலை மறைத்திருந்த கறுத்தத் துணி கிழிந்து கீழே விழுந்தது. துணி கீழே விழவும், அதனோடு சேர்ந்து போத்தல் ஒன்றும் கீழே விழுந்தது. அப்போத்தலை வித்தியாபரன் எடுத்து முகர்ந்து பார்த்தான். மண்ணெண்ணை அதுவே பயங்கரத் தீப்பிழம்பு தோன்றுவதற்கு காரணமாய் இருந்தது என அறிய அவனுக்கு நேரமெடுக்கவில்லை. உருவத்தின் முகமூடி கிழிந்தது. உடலைப் போர்த்தியிருந்த கறுத்தத்துணி கிழிந்தது. அங்கே! இதுவரை வேப்பங்கேணிக் கிராமத்தையே பெரும் கலக்குக் கலக்கிய பயங்கரப் பேயின் தோற்றம் தெரிந்தது. அது வேறு யாருமல்ல. வேப்பமரத்தடியில் மாணிக்கம் பிள்ளையின் வேலைக்காரர்களால் அடித்துப் போடப்பட்ட சங்கிலிக் கறுப்பன் தான். திருக்குமாருக்கு அவனைத் தெரியாவிட்டாலும் அந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்த வித்தியாபரன் அவனை அடையாளம் கண்டு கொண்டான்.

திருக்குமாரும் வித்தியாபரனும் அந்தச் சங்கிலிக்கறுப்பனை வேப்பமரமொன்றுடன் சேர்த்துக் கட்டினார்கள். சங்கிலிக் கறுப்பனால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அந்தச் சிறுவர்களிடம் அகப்பட்டுக் கொண்டதை எண்ணி வெட்கப்பட்டான்.

வித்தியாபரன் அவ்விடத்தே கிடந்த மரக்கொம்பால் சங்கிலிக் கறுப்பனைத் தாக்கினான். திருக்குமார் வித்தியாபரனை தடுத்து நிறுத்தினான். அதன் பின் சங்கிலிக் கறுப்பனை கேள்வி மேல் கேள்வி கேட்டு எதற்காக இவ்வாறு நடந்து கொண்டாய் என அவன் வினாவினான். அதற்கு அவன் பின்வருமாறு கூறலானான்: ''நான் செய்த தவறுக்காக என்னைத் தாக்கியதோடு இந்தக் கிராமத்தின் பெரிய பணக்காரர் மாணிக்கம்பிள்ளை நிறுத்தியிருக்கலாம். ஆனால்... அவரால் என் குடும்பமே அழிந்துவிட்டது மாணிக்கம்பிள்ளையின் வேலையாட்கள் என்னை தாக்கிய பின் இந்த வேப்பமரத்தின் கீழே போட்டுவிட்டுச் சென்றார்கள். நான் மயக்கம் தீர்ந்து எழுந்து பார்த்தால் எதுவுமே எனக்குத் தெரியவில்லை. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. மெல்ல மெல்ல அடி எடுத்து கேணிக்கரையை யடைந்து முகத்தினைக் கழுவிக் கொண்டேன். கேணி நீரைப் பருகி தாகத்தைத் தீர்த்தேன். பின் தள்ளாடித் தள்ளாடி எனது வீட்டை நோக்கிச் சென்றேன். அங்கு நான் கண்ட காட்சி... எனது வீடு எரிந்து கொண்டிருந்தது. மனைவியும் பிள்ளையும் அந்தத் தீயில் கருகி மாண்டனர். அந்த வேதனை என்னை வாட்டியது. அதுவே இத்தனைக்கும் என்னைத் தூண்டியது. என் குடும்பத்தை அழித்த அந்த மாணிக்கம் பிள்ளையையும்; என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றாது விட்ட இந்த கிராம மக்களையும் பழிவாங்க திட்டமிட்டேன். அதன் முடிவே நான் எடுத்த இந்தப் பயங்கரப் பேய் வேடம். இதனால் எனது லட்சியத்தையும் அதனோடு என்னால் பழிவாங்கப்பட்டவர்களிடமிருந்து கொள்ளையிட்ட பொருட்களையும் கொண்டு உணவுத் தேவையையும் பூர்த்தி செய்தேன்'' என்றான்.

அவன் கூறியவற்றைத் திருக்குமாரும், வித்தியாபரனும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். விடிந்ததே அவர்களுக்குத் தெரியவில்லை. இரவுவரை பயத்தோடு வீடுகளில் பதுங்கியிருந்த அக்கிராம மக்கள் விடிந்ததும் வெளியே வந்தார்கள். அவர்களுக்கு வேப்பமரத்தடிப் பேயின் மர்மம் தெரிந்தது. முழுக்கிராமத்தவர்களுமே வேப்பமரத்தடியை நோக்கிப் படை எடுத்தார்கள். தங்களைக் காப்பாற்ற சிறுவர்களான வித்தியாபரனும் திருக்குமாரும் தங்கள் உயிரையே பொருட்படுத்தாது கஷ்டப்பட்டதை யெண்ணி வியந்தார்கள். சங்கிலிக் கறுப்பனைக் கிராமத்தலைவர் விசாரணைக்காகக் கூட்டிச் சென்றார். பக்கத்து கிராமத்திலிருந்து வந்த மாணிக்கம்பிள்ளை சந்தோஷ மிகுதியால் மகனையும் மருமகனையும் கட்டியணைத்து முத்தமிட்டார்.

முற்றும்

## இந்த நவீனம்

அரியாலை இளைஞர்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அறிவொளிக்கலை என்னும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார்கள். அதன் நூறாவது இதழை 1. 8. 86ல் கோலாகலமாக வெளியிட்டனர். அவர்கள் வெளியீடே இச்சிறுவர் நவீனம்.

— ராஜா மாமா




**15-8-86**

**தொடக்கம்**

**15-9-86**

**வரை**

## மேஷம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

நன்மையும் தீமையும் மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். வசதியும் உதவியும் கொண்டவர்கள் 17. 8. 1986ன் பின் நிச்சயம் வெளிநாட்டுப் பிரயாணத்தை நம்பி மேற்கொள்ளவும். சுபச் செலவுகள் ஏற்படும். இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த தொழில் முயற்சி நிறைவேறும். நோயின் கொடூரத்தினின்றும் நிச்சயம் விடுபடலாம். எதிரியின் தொல்லையும் குறைவடையும். புதிய வியாபார நிலையங்கள் திறக்கலாம். மனதுக்கு மகிழ்லூட்டும் கடிதம்வரும். பிரிந்திருந்த தம்பதியர் ஒன்றுகூடுவர். பிள்ளைப்பாக்கியம் உருவாகச் சிறந்த காலமிது. சிலரின் முன்னேற்றங்கள் பயம் காரணமாகத் தடைப்படலாம். பிரயாணத்தில் ஏற்படுகின்ற தடங்கல், தாமதம் காரணமாக பொன்னுன வாய்ப்புக்களை இழக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். திருமண முயற்சிகள்இழுபறியின் பின் கைகூடும். சத்திரசிகிச்சை ஏற்படலாம். எவரைப் பிடித்தாவது தொழில் பெற முயற்சித்தால் நிச்சயம் பலன் உண்டு. மாமன்மாரின் உதவியும் ஆதரவும் பொறுத்த கட்டத்தில் கிடைக்கும். விவசாய உற்பத்திகள் எதிர்பார்த்த பலனை அளிக்காது. திடீர்ப்பயணத்திற்கு இடமுண்டு. சிலர் கட்டாயத் திருமணத்திற்கு நிர்ப்பந்திக்கப்படுவர். வெளிநாடு செல்லும் மோகத்தினுல் கடன்பட்டு கதிகலங்கும் நிலை சிலருக்கு ஏற்படும். சனீஸ்வரன், குரு, மற்றும் நவக்கிரகங்களை வழிபாடு செய்து நொந்த உள்ளத்திற்கு ஆறுதல் தேடவும்.

## ரிஷபம்

கார்த்திகை 2,3,4ஆம் பாதம் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்)

எத்தகைய கஷ்டங்கள் வரினும் செய்தொழிலை மிகவும் கவனமாகப் பார்க்கவும் உயர் அதிகாரிகளுடன் ஏற்படுகின்ற மாறுபட்ட மனப் போக்கினுல் நிச்சயம் செய்தொழிலை இழந்து போகக்கூடிய நிலை உருவாகும். இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். திரை மறைவில் கெடுப்பதற்கு திட்டமிட்ட சதி உருவாகும். குடும்பதோன்றி மனஸ்தாபம் காரணமாக சிலர் மனைவியை, அன்புக்குரியவர்களை விட்டு நீங்கலாம். பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற நோய்கள் பற்றி உடனுக்குடன் விசேட கவனம் எடுக்காவிடின் பின்னர் வருந்த வேண்டி ஏற்படும். வெளியூர்ப் பயணம் 17. 8. 86ன் பின் நிச்சயமுண்டு. திருமண முயற்கிகள் கைகூடினுலும் மணமகளை வெளியூருக்கு அனுப்புவதில் பிரச்சினை உருவாகும். உரிமைப் பத்திரம் இல்லாத வாகனங்களை கடைசி மட்டும் கொள்வனவு செய்ய வேண்டாம். குடும்பத்தில் புதிய ஜீவன் உருவாகலாம். தல யாத்திரைகள் திடீரென மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம். சீதனப் பிரச்சினை காரணமாக கன்னிப் பெண்கள் சிலரின் திருமண வாழ்வு தடைப்படும். மாமன்மாரின் உதவி கிட்டும். அச்சகத்தில் வேலை பார்ப்போருக்கு அங்கப் பழுதுகள் ஏற்படலாம்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3,4ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்)

ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நோய் குணமடையும். எதிரியின் தொல்லை குறைவடையும். இல்லறத்தில் மகிழ்வும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும். எதிர்பார்த்ததை விட கூடுதலாக பரீட்சையில் வெளுத்து வாங்குவீர்கள். வெளியூர் பயணம் உடன் நிறைவேறலாம். எப்பாடுபட்டாவது பிதா உங்களை இலங்கையை விட்டு வெளியேற்றப் பாடுபடுவார். பள்ளிக்கு சென்ற சிலரை இயக்கமுகாம்களில் பெற்ருேர் அழுத கண்களுடன் சந்திக்க வேண்டிய நிலை உருவாகும்.

எதிர்பாராத விதமாக வாகனம் பறிபோகும். தேடியலைந்து கண்டு பிடிப்பீர்கள். செய் தொழிலில் விருப்பம் கெட்டு சொல்லிக் கொள்ளாமல் வெளிநாடு சென்று விடுவீர்கள். கணவருக்கு தெரியாமல் குடும்பப் பெண்கள் கொடுக்கல் வாங்கல் செய்து- இதனுல் பிரச்சினை தோன்றி குடும்பப் பிரிவும் உண்டா

கும். மாதாவின் நோயில் அலட்சிய மனப்பான்மையுடன் இருந்தால் நிச்சயம் பின்னர் தீராத கவலை உண்டாகும். 17. 8. 86ன் பின் புதுமனை புகச் சந்தர்ப்பம் உண்டாம். 22. 8. 1986ன் பின் திருமண முயற்சிகளில் ஈடுபடலாம். பழுதடைந்த வாகனங்களை கூடிய விலையில் கட்டியடிக்க முயல்வார்கள். மாமன் மாரின் உதவிகள் திடீரென நிறுத்தப்படலாம். வழக்கின் முடிவுகள் உங்களுக்கு சார்பாக முடிவடையலாம். வழக்காளியின் உருயிக்கு திடீரென ஆபத்தும் தோன்ற இடமுண்டு. வசதி உதவி உள்ளவர்கள் ஏஜென்சி தொழில் அல்லது றக்கோடிங்பார் அல்லது பாமசி தொழில் ஆரம்பிக்கவும்.

(புனர்பூசம் 4வது பாதம். பூசம், ஆயிலியம்)

உடனடியாக வாய்ப்பும் வசதியும் கொண்டவர்கள் எப்பாடுபட்டாவது வெளியூர் பயணத்தை மேற்கொள்ளவும். மிக நம்பிக்கையானவர்களின் துணையுடன் தொழும்புக்கு செல்லவும். 22. 8. 1986ன் பின் வெளிநாட்டுத் தொழில் கிடைக்கும். சிலரின் தேக நலம் திடீரென சீர்கெடும். வியாழபகவானுக்கு தெட்சணாமூர்த்தி அர்ச்சனை பிரதி வியாழக்கிழமை தோறும் செய்துவரின் நோயின் கடுரத்தைக் குறைக்கலாம். பிதாவின் உறவில் திருப்தி காணப்படும். எதிர்பாராத விதமாக சிலருக்கு தடுப்புக் காவல் ஏற்படும். பிரயாணத்தின் போது வெள்ளை உடை அணிந்து செல்லவும். சிங்கள மொழி பேசத் தெரிந்திருந்தாலும் அதை வெளிக்காட்ட வேண்டாம். சகோதரர் ஒருவருடன் வீண் வாக்குவாதம் ஏற்பட்டு இருவரின் உறவும் ஆயுள் வரை பாதிக்கும். சகோதரிகளின் நடத்தையையிட்டு மௌனம் சாதிப்பது மிக நன்று. கர்ப்பசிதைவுகள் ஏற்படக்கூடுமாகையினால் கர்ப்பமடைந்தோர் குண்டுச் சத்தம் கேட்குமிடத்தைத் தவிர்க்கவும். பிரயாணத்தைக் குறைக்கவும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டாம். பிள்ளைகளின் உடல் நலம், நோயில் அதிக சிரத்தை காட்டவும். இதயப்பலவீனத்தால் திடீர் கோபம் ஏற்பட்டு நண்பர்களையும் பகைக்க வேண்டிய நிலை உருவாகும். குடும்பஸ்தர்கள் கன்னிப் பெண்களின் தொடர்பு பற்றிக் கவனமாக இருக்க வேண்டும். உங்களின் வாழ்க்கை ஒழுக்கக்கேட்டினால் ஊர்சிரிக்கும் நிலைக்கு வரலாம். வெளிநாட்டுக்கு செல்ல வேண்டாமென்று பிதா பிடிவாதமாக நிற்கும் நிலை ஏற்படும். மாமனாரின் சொற் கேட்டு நடக்கவும்.


சோதிடர்

V. A. சிவராசா

B .A., B. Phil.

வேலணை


## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

இதுவரை அனுபவித்துக் கொண்டிருக்கும் வசதிகள், பரிதாபப்படக்கூடிய நிலைமைக்கு பாதிக்கப்படலாம். பஞ்சணை மெத்தையின் சுகம் வீட்டில் இருக்க நடைபாதையில் படுத்துறங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம். பிதா அல்லது மாதாவின் தேகநலம் கெட்டு உயிராபத்தினை ஏற்படுத்தலாம். திடீரென தமிழ் ஆடி முடிய விவாகப்பேறு ஏற்படும். புத்திர உற்பத்தியும் வெளிநாட்டுப் பிரயாணமும் சிலருக்கு கிட்டும். பாம்புக் கிரகங்களான இராகு கேது மாற்றத்தினால் இல்லிடம் இழத்தலும், இரத்தக்காயங்களும் ஏற்படலாம். துர்க்கை அம்பாளை மறக்கவே கூடாது. விஷபயம், வீண் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பில் முடிவடையலாம். குண்டுத் தாக்கம் பற்றி எந்நேரமும் விழிப்பாக இருக்கவும். மனநோய் சில சிங்கராசிக்காரர்களைப் பீடிக்கலாம். சட்டத்திற்கு மனச்சான்றுக்கு மாறான செயல்களில் ஈடுபடுவதின் மூலம் அவமானம் பொருள் இழப்பு நிச்சயமுண்டு. நண்பர், உறவினர்களின் அழைப்பின் பெயரிலேயே வெளியூர் பயணங்களை மேற்கொள்ளவும். கணவன்- மனைவியின் போக்கு -புரியாத புதிராக இருக்கும். பிள்ளைகளின் போக்கினைக் கட்டுப்படுத்த முடியாது பெற்றோர்கள் திண்டாடுவர். திடீரென சுவீப்பில் இலட்சாதிபதியாகலாம். குடும்பத்தில் நோயின் ஆட்சி தீவிரமடையும்.

## கன்னி

(உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1. 2ம் பாதம்)

அன்புக்குரியவர்களை திடீரென பிரிய வேண்டி நேரிடலாம். கணவன் மனைவி இன்ப உறவு பாதிக்கப்படும். முடியும் தறுவாயில் இருந்த மனை திடீரென கட்டி முடிக்கப்படாது நின்றுவிடும். 17- 8- 1986ன் பின்னரே புதிய முயற்சிகளில் ஈடுபடவும். இதுவரை காலமும் மாமனாரின் உதவி பெற்றுவந்தவர்களுக்கு சொல்லிக் கொள்ளாமல் உதவி நின்று விடலாம். திடீர் நோய் வாய்ப்பட்டு சத்திர சிகிச்சையும் ஏற்படலாம். நோயினால் வருந்திக் கொண்டிருப்போர் தெட்சணாமூர்த்தி அர்ச்சனை செய்து ஓரளவு நோயின் துன்பத்தினின்றும் விடுபடலாம். குண்டு உருவத்திலும் எதிரி எந்நேரமும் ஆபத்தை 'உண்டாக்கலாம். இதயப்பலவீனம் உள்ளவர்கள் முகாம்பகுதிகளுக்கு செல்லவே கூடாது. சகோதரர்களின் உதவியும் ஒத்தாசையும் கிடைக்கும். சிலருக்கு அதிர்ச்சியூட்டக்கூடிய கடிதங்கள் அந்நிய நாடுகளின்றும் வரலாம். ஒப்பேறும் தறுவாயில் இருந்த திருமணப் பேச்சு அப்படியே நின்றுவிடும். தெசாபுத்தி நன்மைப்பலன்களைக் கொண்டிருப்பின் காதலர் வாழ்வில் தென்றல் வீசும். திடீர் நண்பர்களைப் பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். இரவில் சந்தேகத்திற்கிடமானவர்களை வீட்டில் தங்க அனுமதிக்க வேண்டாம்.

வங்கித் தொடர்பு எதிர் பாராதவிதமாக அறுந்து விடலாம். துணைப் போனாலும் பிணைப் போகவேண்டாம். இரவுப் பிரயாணங்களை இயன்ற வரை கைவிடுதல் மேலான நன்மை தரும்.

## துலாம்

(சித்திரை 3, 4, ம் பாதம் சுவாதி விசாகம்1, 2, 3.)

குடும்பத்தில் புதிய ஜீவன் உருவாகப் பலன் உண்டு. குழந்தைப் பாக்கியம் இதுவரை கிட்டாதவர்கள் சர்ப்பசாந்தி, அரசமரம் சுற்றுதல், முதலியன மேற்கொண்டும் சந்ததி விருத்தியை தோற்றுவிக்க உவப்பான காலமிது. புதுமனை புகுதல், புதிய வியாபார நிலையங்கள் ஆரம்பித்தில்ருதுசாந்தி' திருமணம்,வெளியூர்ப்பயணம், வாகனம்வாங்க, காணி கொள்ள- இப்படி சுபச் செலவுகள் தமிழ் ஆடி மாதம் முடிய (17-8-86) ஏற்பட்ட வண்ணம் இருக்கும். பெண்கள் மாமன்மாரின் அழைப்பின் பிரகாரம் வெளிநாடு சென்று நிச்சயம் முன்னேற்றம் அடையலாம். வெளிநாட்டு மணமகனை கைப்பிடிக்க சில அழகிய பெண்கள் அந்நிய பிரயாணத்தை மேற் கொள்வர். தெய்வ வழிபாட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள் கடன் தொல்லை நோய் என்பவற்றில் இருந்து ஓரளவு விடுபடுவர். இதுவரை காலமும் தொல்லைக்கு மேல் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த எதிரியின் கொட்டம் அடங்கும். சிலரின் பூர்வீக மனை, விவசாய நிலம் மற்றும் கால்நடைகளை இழக்க வேண்டியேற்படும். சீட்டுக் கட்டி திண்டாடுவர். மோசடியும் நடக்கலாம். சகோதர உறவில் மாறுபட்ட மனப்போக்கு ஏற்பட்டு கைகலப்பில் முடிவடையும். டென் மார்க் கனடா என்று வெளிக்கிட்டு கொழும்புடன் பயணம் நின்று விடலாம். பம்பாயிலும் பரிதவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். காதலர் மத்தியில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு பிரிய வேண்டிய நிலை ஏற்படலாம். உயர் கல்விக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். நாடு விட்டு நாடு மாறவும் பலன் உண்டாம்.

## விருச்சிகம்

(விசாகம் 4ம் பாதம். அனுசம் கேட்டை)

29. 7. 1986 தொடக்கம் ராகு 5ம் இடத்துக்கும் கேது 11ம் இடத்திற்கும் வருவதினால் நொந்துபோயிருக்கும் உங்கள் உள்ளத்திற்கு நிச்சயம் ஆறுதல் உண்டு. சனியும் குருவும் தொடர்ந்து கெட்ட பலன்கள் தரும் தோசாரத்தில் இருப்பதினால் தெய்வ நம்பிக்கை கைவிடவேண்டாம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு இயன்றவரை செல்லப்பார்க்கவும். நோயின் ஆதிக்கத்தினால் தேகநலன் கெட்டுப்போகும். ஆயுள்வேத வைத்தியவசதிகளைஇயன்றவரை நாடவும். குழந்தைகள் மருந்தென்று நினைத்து விஷம்அருந்தும்நிலையும்ஏற்படலாம். சர்ப்பத்தினால் உயிர் ஆபத்துண்டு. கடற்பிரயாணத்தின் போது அரச படைகளின் கையில் அகப்படலாம். சகுனங்களில், பல்லி சொற்பலனில் கூடிய நம்பிக்கை வைக்கவேண்டும். மனைவியின் பேச்சினைக் கேட்டுச் செயற்படவும். சிலருக்கு ஆடு மாட்டினால் பல்லை இழக்க வேண்டிய நிலையுண்டு. மாதாவின் நோயினால் மனநிம்மதியிழந்தும் வைத்தியத்திற்கு செலவு செய்தும் அலைய வேண்டிய நிலையும் சிலரின் வாழ்வில் விரக்தியை ஏற்படுத்தும். வெளியூர் பயணம் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே நிறைவேறும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். சிலர் இல்வாழ்வைத் துறந்து பிறரின் தயவில் வாழவேண்டிய சூழ்நிலையும் தோன்றும். வாகனம் எடுக்கவேண்டாம். தெய்வ காரியங்களில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பம் உருவாகும். பதவியும் பொறுப்பும் சமூக மதிப்பும் தேடிவரும்.

## தனுசு

(மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.)

29. 8. 1986 தொடக்கம் செய்தொழில் மிசக்கவனம். தொழிலை முற்றாக இழந்து போக அல்லது இடைநிறுத்தம், கஷ்டப் பிரதேசங்களுக்கு மாற்றம் அல்லது புதிய தொழிலை ஏற்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். முதலாளி தொழிலாளர் மத்தியில் மனஸ்தாபம் ஏற்படும். நோய் காரணமாகவும், போக்குவரத்து, பயம் காரணமாகவும் செய்யும் வேலையில் பாதிப்பு ஏற்படலாம். இடமாற்றம் திடீரென ஏற்படலாம் கடல் பிரயாணம் செய்வோர் அரச படைகள் பற்றி எந்தநேரமும் விழிப்பாக இருக்க வேண்டும். சனசந்தடி இல்லாத வெளிகளில் மோட்டார் சைக்கிளில் செல்வோருக்கு திருடராலும். இயக்கத்தின் பெயரைச் சொல்லியும் தெலியாலும் ஆபத்துண்டு. சகோதரரின் நன்மை தீமை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதிருப்பது நன்று. உடன் பிறப்புக்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வது, அவர்களின் போக்கினை கண்டிக்க முயல்வதும் பின்னர் வருத்தத்தைத்தரலாம். கவலை சுமை ஏக்கம் நிரம்பிய ஒருவித பயப்பிராந்திய சூழல் இருக்கும். சிலர் பெற்றதாயை நிச்சயம் இழந்து போக வேண்டியேற்படும். பெற்றோரின் உடல் நலத்தில் கூடிய கவனம் எடுக்கவும். கொள்ளி வைக்க பிள்ளை இல்லாத நிலையும் உண்டாகும். இடப்பக்க உறுப்புக்களை இழக்க, காயப்பட, வலிக்கும் இடமுண்டு. விபத்துக்கள் சர்வ சாதாரணமாக ஏற்படும் வாகனம் எடுக்கவே கூடாது. வைத்திருக்கும் வாகனத்தை நட்டமெனினும் உடன் விற்பனை செய்யவும். பிரிந்திருக்கும் தம்பதியர் ஒன்று சேரும் வாய்ப்புண்டு.

## மகரம்

(உத்தராடம் 2,3,4-ம் பாதங்கள் திருவோணம். அவிட்டம்: 1, 2-ம் பாதம்)

இதுவரை பிதாவுடன் மாறுபட்ட மனப்போக்கைக் கொண்டிருந்தவர்களுக்கு மனமகிழ்வும் உதவியும் ஆதரவும் பிதாவினால் கிடைக்கும். சகோதரர்கள் உறவில் திருப்தியும் முன்னேற்றமும் காணப்படும். எதிர்பாராத விதத்தில் உடலில் தைரியமும், நிறையும். அதிகரிக்கும். 22. 8. 86ல் திருமணப்பதிவு செய்து இல்லற வாழ்வில் சுகம் பெறலாம். சிலர் சகோதரிகளின் நடத்தையைக் கண்டிக்க அல்லது புத்திமதி சொல்லித் திருத்த முயலும் போது சகோதர உறவில் விரிசல் அல்லது இழப்பினை நிச்சயம் எதிர்பார்க்கலாம். வெளிநாட்டு முகவர்களை அல்லது நண்பர்களை நம்பி நிச்சயம் வெளியூர் பிரயாணங்களை மேற் கொள்ளவும். நேரடிப் பிரயாணம் மிகச் சிறந்த நன்மை பயக்கும். திடீர்பணக்கார

ளுக வர ஆசைப்படும் வெளிநாட்டு மகரராசிக்காரர்கள் சட்டத்திற்கு மாறுன காரியங்களில் ஈடுபட்டால் நிச்சயம் சிறை வாசமுண்டு. மத்திய கிழக்கில் தொழில் புரிவோர் பல்லை இறுகக் கடித்துக் கொண்டு வேலை பார்த்தால் பின் விமோசனம் உண்டு. திருமணத்திற்கு மிக உகந்த காலம். புத்திர உற்பத்தியுண்டு. இல்லறத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளி நாட்டில் உள்ள மக்களால் மகிழ்ச்சி ததும்பும் கடிதத்தை நிச்சயம் எதிர்பார்க்கலாம். திடீர் அதிர்ஷ்டசாலியாகும் வாய்ப்பு சிலருக்குண்டு. தொழில் கிடைக்கும். பிதாவழிச் சொத்துக்கள் கிடைக்கலாம். தெய்வ வழிபாடுகளில் ஈடுபடின் பலன் இரட்டிப்பாகும்.

## கும்பம்

**(அவிட்டம் 3, 4-ம் பாதம். சதயம் பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள்)**

செய்தொழிலும், நோயும், குடும்பக்கவலையும், மரணத்துக் கொப்பான கண்டமும் பற்றி சதா சிந்திக்க வைக்கும். பொறுமை' சகிப்புத்தன்மை, எதையும் தாங்கும் இதயத்துடன் கடலலை போல் வருகின்ற துன்பங்களுக்கு எதிர் நீச்சல் அடிக்கவும். சிறு நோயும் பெரும் பணச் செலவினை ஏற்படுத்திவிடும். தொழில் ஸ்தாபனத்தில் வீண் வாக்குவாதம் ஏற்பட்டு - சிலர் முற்றுக வேலையை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். மறைமுக எதிரிகளினுல் திட்டமிட்டுப் பழி வாங்கப்படலாம். கடன் தொல்லை தலைக்கு மேற் செல்லும். காணி/ஆபரணம் / வாகனம் - இழக்க வேண்டிய சந்தர்ப்ப[illegible] உண்டு. மனைவியின் சகோதரர்களினுல் குடும்பக் கலகம் ஏற்பட்டு விவாகரத்து நிலைக்கும் தொ[illegible]டு போகும். வைத்தியர்களாலும் கண்டு பிடிக்க முடியாத நூதன நோயினுல் அல்லற்படவேண்டியிருக்கும். வாகனங்களை விலத்த முற்படுகையில் அல்லது வீதியைக் கடக்க முற்படும் போது விபத்தினைச் சிலர் எதிர்பார்க்கலாம். திடீர் சத்திர சிகிச்சைக்கு இடமுண்டு. ஆயுதங்களினுல் காயமேற்படலாம். கறள்பிடித்த ஆணிகள் கம்பிகள், குத்தினுல் அலட்சியப்படுத்தாது உடன் மருத்துவத்தை நாடாவிட்டால் பின்னர் அங்கப் பழுதுகள் ஏற்படலாம். வாக்குத் தடுமாறும். கணவன் மனைவி உறவில் விரிசல் தோன்றும். தெசாபுத்திகள் நல்ல நிலையில் இருந்தால், சனி வியாழன் நல்ல இடத்தில் இருந்தால் மட்டுமே தெய்வவழிபாட்டுடன் வெளியூர் பயணத்தை மேற்கொள்ளலாம். திருமண முயற்சிகளை ஒத்திப்போடுவது நன்று. தெரிந்த குடும்பத்தில் திருமணம் செய்வது மிகநன்று.

## மீனம்

**(புரட்டாதி 4-ம் பாதம் உத்திரட்டாதி ரேவதி)**

மங்கள காரியங்களுக்கு சுபச் செலவுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். பருவப் பெண்களுக்கு திருமணப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும். 22. 8. 1986 ல் திருமணம் நடைபெற சந்தர்ப்பம் உண்டாம். வெளியூர்ப் பயணங்கள் பிரயாசையின் பின்னரே வெற்றியளிக்கும். பிரயாணத்தின் போது உயிருக்கே ஆபத்தான நிகழ்வுகள் பற்றி மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தகுந்த துணை இல்லாமல் கொழும்புக்குச் செல்லவே கூடாது. அறிமுக அட்டை கடவுச் சீட்டு மற்றும் முக்கிய பத்திரங்கள் கை நழுவச் சந்தர்ப்பமுண்டு. விசர் நாய்க் கடி, தொய்வு,இதய வருத்தம்,நீர்க் கண்டம் விபத்து பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அன்புக்குரியவர்களை ஒன்றில் மரணம் அல்லது மனஸ்தாபம் அல்லது அந்நிய பிரயாண மூலம் பிரிய வேண்டிய சந்தர்ப்பம் உண்டு. பிதாவுடன் வாக்கு வாதப்பட்டு குடும்பத்தை விட்டு வெளியேற வேண்டி நேரிடலாம். வாகனங்களை கவனமாகப் பூட்டி வைக்கவும். கால் நடைகள் தொலைந்தால் தேட வெளிக்கிடுவதன் மூலம் உயிர் ஆபத்தும் ஏற்படலாம். கட்டாயக் கலியாணம் திடீரென நிகழலாம். கல்விப் பெறு பேறுகள், மற்றும் பதவி யேற்றப் பரீட்சைகள் மன துக்கு வேதனை தரும்.

## சீதள நிலவுக்குச் சிறையா?


''அள்ளி அணைத்திடவே
ஆளுமில்லா காரணத்தால்
மாதமெல்லாம் எங்களுக்கு
மாத விலக்காகிப் போச்சு
இன வுணர்ச்சி உங்களுக்கு
இல்லாத காரணத்தால்
பிணமாகும் வரையிலே
நாங்கள் பிரசவிக்க முடியலையே....!''

பொன்னரசி

● முப்பத்திரண்டு வயது வரை தனது பெற்றோரின் வறுமை காரணமாக, தனக்குத் திருமணமாகாத நிலையில் மனம் கொதித்துப் பொன்னரசி பாடிய பாடல்.

# பாஸிஸம் வளர்ந்த வரலாறு...

## 'புதுமைப் பித்தன்'



# பேஸிஸ்ட் ஜெர்மனி

### 12- இத்தாலிய டெபுடி பெனிட்டோ

1920-ம் ஆண்டு ஜனவரி மீ 10-ம் தேதி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. அன்று தான் சர்வதேசப் பலவீனம் என்று சொல்லவேண்டிய, —ஆனால், அப்போது சர்வதேச நம்பிக்கை என்று கருதப்பட்ட,- சர்வதேச சங்கம் பிறந்தது. ஒரு புறம் உடன்படிக்கையும், அதனடியாகப் பிறந்த மூன்று கிளை உடன்படிக்கைகளும், ஐரோப்பிய தேச எல்லைகளை மாற்றி யமைக்க வசதி செய்தன. மாஜிப் பகை வல்லரசுகளின் ஆயுத பலத்தை ஒன்றுமில்லாமலாக்கவும், அக்கரைக் காலனிகளின் ஸ்தானத்தையும் நிர்வாகத்தையும் மாற்றுவதற்கும் நஷ்ட ஈடு வசூலித்து, சர்வதேச சங்கத்தின் மூலம் கூட்டுப் பாதுகாப்பு முறையை அமுலுக்குக் கொண்டு வரவும் முயற்சிக்கப்பட்டது.

இத்தாலியப் பார்லிமெண்டு சபையில் 1921 ஜூன் 21ல் தேர்தல், 33 தடியர்களைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறது. அதன் தலைவன் பெனிட்டோ முஸொலீனி. அப்போது அவனுக்கு 38 வயது. சாதாரணமாக அவன் சகாக்களுக்கும் அதே வயதுதான். அவனுடைய கட்சிக்கு அடுத்தாற்போல், தேசீயக் கட்சியில் 17 பிரதிநிதிகள். இந்த 49 நபர்களும் கியோலிட்டி தலைமையில் அணிவகுத்து உட்கார்ந்திருக்கும் 400 பிரதிநிதிகளையும் எதிர்த்து எப்போது சண்டை வரும் என்று உட்கார்ந்திருக்கின்றனர். மத்தியில் கியோலிட்டியும் அவனது பாபுலர் கட்சி சகாக்களும். அவர்களுக்கு அடுத்தாற்போல் அபேதவாதக் கட்சி; அதன் வாலான பொதுவுடைமைக் கட்சி அடங்கிச் சுருண்டு பேஸிஸ்டுகளுக்கு நேர் எதிராக உட்கார்ந்திருக்கிறது.

பிரதம மந்திரி கியோலிட்டி சர்க்கார் சார்பில் பேசிவிட்டு உட்கார்ந்தார். சபையில் எல்லாப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். கூட்டம் ஜாஸ்தி. புழுக்கமும் அதிகம். வெளியே கடுமையான வெய்யில். கியோலிட்டி உட்கார்ந்ததுதான் தாமதம் பெனிட்டோ எழுந்து நிற்கிறான். பையில் கையைப் போட்டுக்கொண்டு சபையைச் சுற்றி உருட்டி விழிக்கிறான்.

''நான் பேசப்போவது ஜனநாயகத்திற்கு எதிரிடையானது. அபேதவாதத்திற்கும் எதிரிடையானது. அபேதவாதத்திற்கு எதிரிடையாக இருப்பதால் கியோலிட்டி கொள்கைகளுக்கும் எதிரானது. பிரதம மந்திரி, ஆல்ப்ஸ் மலை நமது தேசத்தின் எல்லையாகிவிட்டது என்று கூறுவதன் அர்த்தம் தான் நமக்குப் புரியவில்லை, நான் நேரடியாக அங்கு சென்று ஆல்டோ அடிஜ் பிரச்சனையை விசாரணை செய்ததில் அவ்வாறு இருப்பதாக நான் காணவில்லை. அங்கே இத்தாலிய இயக்கத்திற்கெதிராக டூஷர் வெர்பாண்ட் என்ற இயக்கம் மூனிக்கிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. அது அன்றியாஸ் ஆபர்பாண்ட் இயக்கத்தின் கிளையாகும். இந்தச் சங்கம் வெரோனா எல்லைவரையுள்ள பிரதேசங்கள் தனக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடி வருகின்றது. அங்கு நிறுத்தப்பட்ட இத்தாலியத் துருப்புக்கள் கலைக்கப்பட்டவுடன் அந்த நாட்டை இத்தாலி கைப்பற்றவேயில்லை என்று அங்குள்ளவர்கள் உரிமை ஸ்தாபிக்கிறார்கள். அங்கு நடைபெற்ற பொல்ஸானோ பொருட்காட்சி விழாவில் இத்தாலிய பாஷையும் இத்தாலியக் கடைகளும் பகிஷ்கரிக்கப்பட்டன. அகில ஜெர்மன் பிரசாரம் அங்கு எல்லையற்றுப் பரவுகிறது. மெரானோவில் இருந்த ஆஸ்திரிய மேயரை வேலையை விட்டுத் தள்ளக்கூடாது என்று அமுல் நடத்துகிறது. இத்தாலிய மன்னரையும், இத்தாலிய அரசியலமைப்பையும் கண்டபடி அவதூறு செய்து கேவலப்படுத்துகிறார்கள். ஆல்டோ அடிஜ் வரை ஜெர்மனிக்குத்தான் சொந்தம்.

என்ற கொள்கையை ஸ்தாபிப்பதற்காக நான்கு ஜெர்மன் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த ஜெர்மானிய ஸ்தாபனத்தை உடனே கலைக்க வேண்டும். அங்குள்ள ஜெர்மானிய உத்தியோகஸ்தரை உடனே வேலையை விட்டு நிறுத்தவேண்டும். பொதுநிர்வாக முறைகளில் இரட்டைப் பாஷை முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இந்த நான்கு ஜெர்மன் பிரதிநிதிகளுக்கும் நான் ஒன்று சொல்லுகிறேன்: எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் நாங்கள் பிரென்னர் எல்லையை விட்டுக் கொடுத்துவிடமாட்டோம். இதை உங்கள் சகாக்களுக்குச் சொல்லுங்கள்...''

இந் நேரடியான எதிர்ப்புப் பிரசங்கத்தைக் கேட்டதும் சர்க்கார் கட்சியும் கை தட்டியது. பிரதம மந்திரி கியோலிட்டி குறுக்கிட்டு, ''இதையெல்லாம் நாங்கள் முன்னமே தான் ஒப்புக்கொண்டிருக்கிறோமே!'' என்றார்.

''அட்ரியாடிக் கடற்கரை எல்லையில் பிரதம மந்திரி கியோலிட்டி யூகோஸ்லேவியாவிடம் உடன்படிக்கை செய்துகொண்டு, பியூம் நகரைத் தாக்கியதை அழுத்தமாகக் கண்டிக்கிறேன். வெர்ஸேல்ஸ் சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களை மாற்றவேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்கவில்லை. பேஸிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட பொழுதே அதன் அவசியம் ஒப்புக்கொள்ளப்பட்டது. சமாதான உடன்படிக்கையும் அதன் கிளைகளும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அதிருப்தியைக் கொழுந்து விட்டெரியும்படி செய்துவிட்டன. இந்தச் சமயத்தில் நமது அந்நிய நாட்டுக் கொள்கைகளில் செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் பரிகசிப்புக்கு இடமாக இருக்கின்றன. மாண்ட நீக்ரோவை சர்க்கார் ஸெர்பியாவின் கையில் பறிகொடுத்தது. பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் யூதர்களைக் குடியேற்றி வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் இவ்வாறு சொல்வதிலிருந்து இத்தாலிய யூதர்களின் தியாகத்தை மறந்துவிட்டேன் என்றுநினைக்கலாகாது. யுத்தத்திற்கு அவர்கள் செய்த சேவை மகத்தானது. தாராளமானது.''

அப்புறம் பொதுவுடைமைவாதிகளைக் க்ண்டித்துப் பின்வருமாறு பேச ஆரம்பித்தான்:

''வறுமை, துன்பம் இவற்றின் எல்லையில் முளைக்கிறது பொதுவுடைமைக் கொள்கை. சொத்தும் சுகமும் அழிந்து வரும் சமயத்தில் எல்லாவற்றையும் பொதுவாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டு மென்ற ஆசை மனித இதயத்தில் பிறப்பது சர்வ சாதாரணம். அதுதான் பொதுவுடைமையின் முதல் அம்சம் அதாவது, விநியோக அம்சம். அதற்கு அடுத்தபடியாகப் பொருள் உற்பத்தி; அது மிகவும் சிக்கலான பிரச்சினை விலாடிமிர் உலியனோவ் லெனின் என்ற பெயருக்கு ஆஜர் சொல்லும் நபர் இவ்விஷயங்களில் நிபுணர் என்று கூறப்பட்டாலும், பொருள் உற்பத்தியில் அவனே தடுமாறுகிறான். வெண்கலத்தையும் பளிங்குக் கல்லையும், நம்மிஷ்டம் போல் வனைந்து கொள்ளலாம். மனித இதயத்தை நம் இஷ்டப்படி செய்து கொள்வது அவ்வளவு எளிதல்ல.

''இத்தாலியப் பொதுவுடைமைவாதிகளாகிய உங்களில் பலர் எனது லட்சியக் குழந்தைகள். அந்தரங்க பாவத்தோடு உங்களை எனக்குத் தெரியும். இத்தாலியப் பொதுவுடைமைக் கொள்கையில் சிறிதளவு பெர்க்ஸனின் சித்தாந்தமும் பிளாங்கியின் தத்துவமும் கலந்து உங்களுக்குப் புகட்டியவன் நான் தான். புதிய ஆத்மார்த்த சித்தாந்தங்களும், அவற்றின் கவிதா ரஸம் ததும்பிய உச்ச எல்லைகளும் சின்ன மூளைகளுக்குத் தாங்கமாட்டா. இந்தத் தத்துவங்கள் ருசியாக இருக்கலாம். ஆனால் இவற்றை ஜீரணிக்கும் சக்தி வேண்டும். இப்படி எனது நண்பர்கள்... அல்லது பகைவர்கள் ('பகைவர்கள், பகைவர்கள்' என்ற கூக்குரல்) அந்த மட்டுமாவது தெளிவாகி விட்டதே, சரி!— இப்படி 25 வயதில் பெர்க்ஸனை விழுங்கியபகைவர்கள் இன்னும் அவனை ஜீரணிக்கவில்லை. பொதுவுடமைவாதிகள் பொது மக்களின் சர்வாதிகாரத்தைப் பற்றியோ அல்லது அதைப் போல் அசட்டுத்தனமான குடியாட்சித் தத்துவத்தைப் பற்றியோ கதைத்துக்கொண்டிருக்கும் நம்மிடையில் போராட்டத்தை தவிர வேறு ஒன்றையும் காண முடியாது. இரண்டு வர்க்கங்கள் இருக்கின்றனவென்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். ஏனென்றால் வர்க்கங்கள் இரண்டு மட்டு மல்ல, எத்தனையோ! பொருளாதார சாஸ்திரத்தின் மூலம் மதித சரித்திரம் முழுவதையும்வியாக்கியானம் செய்யலாம் என்பதை நிராகரிக்கின்றோம். உங்கள் சர்வதேசியத் தன்மையை அநுபவத்திற்குக்கொண்டுவருவது ஒரு சிலருக்குத் தான் முடியும். அக்கொள்கையைப் போக வஸ்து என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால்,பொது மக்கள் அவர்கள் பிறந்த மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இனித்தான் முதலாளித்துவத்தின் உண்மைக் கதை ஆரம்பமாகிறது. ஏனென்றால், முதலாளித்துவம் மக்களை நசுக்கும் அமைப்பு மட்டுமல்ல! மதிப்புக்களையும் தன்மைகளையும் தெரிந்தெடுத்து, படிப்படியாக அணிவகுத்து, தனி நபரின் பொறுப்புத் தன்மையை அபிவிருத்தி செய்வதே முதலாளித்துவம்.

''பிரதம மந்திரி கியோலிட்டி 'சர்க்காரின் அதிகாரத்தை மறுபடியும் ஸ்தாபிக்க விரும்புகிறேன்' என்று சொல்லிக் கொள்வதில் பயனே கிடையாது. அந்த வேலை மிகவும் கடினமானது. ஏனென்றால், மூன்று அல்லது நான்கு சர்க்கார்கள் அதிகாரத்தை உபயோகிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. சர்க்காரைப் பாதுகாப்பதற்கு ரண சிகிச்சை அவசியம், பேஸிஸ்டுகள் கிம்சை முறை கொண்டிருப்பதாகக் குறை கூறப்படுகிறது. இதர கட்சிகள் அம்முறையை விட்டுவிட்டால் நாங்களும் அப்படியே செய்யத் தயாராக இருக்கிறோம். இதர கட்சிகளுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சமாதானத்திற்காக உங்களது கிம்சை மனப்பான்மையை ஒழித்துவிடுங்கள்!

“ஹிம்சை முறை நாங்கள் கடைப் பிடிக்கும் கொள்கையுமல்ல; எங்கள் அமைப்பு விதியின் முறையும் அல்ல. இன்னும் விளையாட்டிற்காக அதைக் கைக்கொள்ளவுமில்லை. அவசியம் அவ்வாறு எங்களைத் தூண்டுகிறது. இது நெருக்கடியான காலம் விசுவா சத்திற்கு விசுவாச மளிக்கத் தயா ராக இருக்கிறோம். நாங்கள் ஆயுதங் களைக் கீழே வைக்குமுன், உங்கள் மனத்திலுள்ள குரோதத்தன்மையை அகற்றி வைத்துவிடுங்கள்!”

இந்தப் பிரசங்கம் இத்தாலிச் சட்ட சபையில் பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் தன்மை சட்ட சபையின் சம்பிரதாயத்திற்கே புறம் பானது அது சட்டசபைக் கட்சிகளை யெல்லாம் மூக்கில் குத்தும் நேரடி யான பிரசங்கம்.

தேசத்தின் பொருளாதார நிலை தலைகுப்புறக் கிடந்தது. யந்திர, ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைக ளான இல்வா டிரஸ்ட், ஆன் ஸால்டோ டிரஸ்ட் என்ற இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் முறிந்தன. இவற்றின் வீழ்ச்சியோடு, இவற் றோடு தொடர்பு பெற்றிருந்த கப்பல் கம்பெனிகள், பத்திரிகைக் கம்பெனி கள் முதலியனவும் முறிந்து போயின. இவற்றின் முடிவால் பாங்குகள் பல வற்றையும் மூடவேண்டியதாயிற்று. இத்தாலிய நாணயமான லேராவின் மதிப்பு தொடர்ச்சியாக விழுந்து கொண்டேயிருந்தது. இதுதான் தேசத்தின் நிலை.

## 13. கட்சி நாடு பிடிக்கிறது

பாரிஸ் உடன்படிக்கை மகா நாடு இத்தாலிக்குப் பெருத்த ஏமாற் றத்தையளித்தது. விட்டோரியோ விஞேடோ யுத்தகளத்தில் வான் நோக்கி உயர்ந்த வெற்றி, சிறகிழந்து தரையில் விழுந்தது என்று சொல்ல வேண்டும்.

மத்திய வல்லரசுகளின் தோல் விக்குத் தன் வெற்றியே காரணம் என்று தெரிந்து கொண்ட இத்தாலி, 1915-ம் வருஷத்து லண்டன் உடன் படிக்கை ஷரத்துக்களை நிறைவேற்ற வேண்டுமென்று, அதாவது, தன் பங்கை மடியில் போட்டுவிடவேண்டு மென்று கும்மாள மடித்துக் கொண்டு நின்றது. யுத்தங்களை நிறுத்துவதற்காகக் கப்பலேறி வந்த அவதார புருஷர் என்று கருதப் பட்ட வில்ஸன், வெற்றி வாகை சூடி யவர்களுக்குத் தெவிட்டும்வரை நாடுகளைப் பங்கு போட்டுக் கொடுத்து, தோற்றவர்களைத் தோல்வி என்ற நிந்தரமான படு குழியில் ஆழ்த்திவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தாலி யைப் பொறுத்தவரை ஏமாற்றம் சீக்கிரத்தில் ஏற்பட்டது. வில்ஸ னின் கௌரவம், ஏழு நாள் உபசார மாக, எல்லை கடந்த வசை மாரியில் போய்ச் சேர்ந்தது. காரணம், அவர் லண்டன் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அமெரிக்கா நேசக் கட்சியினர் சார்பில் யுத்தத்தில் இறங்கியபோது இந்த ஷரத்துக்கள் உத்தியோக முறையில் அறிவிக்கப் படவில்லை. என்பது அவர் கட்சி. இம்மாதிரியாக ஓர் உடன்படிக்கை இருக்கிறதென்பதே பிரிட்டிஷ் பொது மக்களுக்குத் தெரியாது. வில்ஸன் இதை எதிர்த் தார். ருஷியப் புரட்சிக்கா ரர்கள் இதை நிராகரித் தார்கள். பிரிட்டிஷ், பிரெஞ்சு ராஜதந்திரிகள் ‘முன்பு ஒப்புக் கொண்ட’ கொள்கைகளை ஏற்றுக் கொள்வதன் அவசியத்தை மட்டி லும் ஏற்றுக்கொண்டார்கள்.

பாரிஸில் இத்தாலிய சமா தானப் பிரதிநிதிகள் நால்வருடன் (நான்கு வல்லரசுகளுடன்) சேர்ந்து சமாதான ஷரத்துக்களை வாசித்துக் கொண்டிருக்கும் போது இத்தாலி யர் குழப்பம் எல்லை கடந்து நின் றது. நேசக் கட்சியினர் இத்தாலி யப் பிரச்சினைகளைப் பற்றி நீளநீள மாக விவாதித்தார்கள். வில்ஸன் முனகினர். லாயிட் ஜார்ஜ் சந்தர்ப் பத்தை உபயோகித்தார். கிளமென் கியோ உறுமினர். அர்லாண்டோ (இத்தாலியப் பிரதிநிதி) ஆட்சே பித்தார்; அழுதார்; அவ்வளவு தான் மிச்சம். வில்ஸன் ஒவ்வொரு நாடும் தன்கதியை ஸ்வயமாக நிர் ணயித்துக் கொள்ளவேண்டு மென்று உபதேசித்த கொள்கையையே அட் ரியாடிக் கடற்கரைத் துறைமுக மான பியூம் பிரச்சினையில் இத்தா லியர் உபயோகித்தனர். பியூம் வாசிகளே, சர்வஜன ஒட்டின் மூலம், தாங்கள் இத்தாலியுடன் சேர்ந்து இருக்க விரும்புகிறார்களா இல்லையா வென்பதை அறிவிக்கட் டும் என்றனர்.

இத்தாலியக் கோரிக்கைகள் வருமாறு:

(1) 1915-ம் ஆ லண்டன் உடன்படிக்கைப் பிரகாரம் மனிதன் உழைப்பால் பண்படாத பிரதேசங் கள் (2) ஜெர்மனி இழந்ததிலிருந்து நஷ்ட ஈடாகக் காலனிகள் (3) உப உடன்படிக்கை, அதாவது, ஸெண்ட் ஜீன் உடன்படிக்கைப் பிரகாரம் துருக்கி இழந்த காலனிகளில் நஷ்ட ஈடு (4) யுத்தச் செலவு நஷ்ட ஈடு (5) வில்ஸன் விரும்பிய சுய நிர்ண யக் கொள்கைப்படி பியூம் சர்வ ஜன ஒட்டுரிமை.

இவற்றில் முதல் கோரிக்கைப் பிரகாரம், ஆல்ப்ஸ் மலைத் தொட ரில் வடக்கே பிரன்னர் கணவாய் முதல் ஜூலியன் கணவாய், இஸ் திரியா தீபகற்பம் வரை உள்ள பிர தேசத்தைப் பெற்றது. இரண்டா வது கோரிக்கைக்கு உத்தர ஜூபா லாந்தைக் கொடுப்பதாக இத்தா லிக்கு உறுதியளிக்கப்பட்டது. துருக் கியிடமிருந்து ஸமிர்ன இத்தாலி யருக்குக் கொடுக்கப்படாமல் கிரீ ஸுக்கு அளிக்கப்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட கிரேக்க-துருக்கி யுத்தம் மீண்டும் கிரீஸுக் குக் கஷ்டத்தை விளைவித்தது. நஷ்ட ஈடாக ஜார்ஜியா பிரதேசத் தின் மீது இத்தாலிக்கு மாண்டேட் அதிகாரம் அளிக்கப்பட்டது. வடக்கு ஆப்பிரிக்காவில் சிரே நியா காவுக்கும் எகிப்துக்கும் நடுவி லுள்ள எல்லையைச் சரிப்படுத்திக் கொடுப்பதாகப் பிரிட்டன் இத் தாலிக்கு உறுதியளித்தது. உறுதி 1925-ம் ஆ நிறைவேறியது. இதே மாதிரியாக பிரான்ஸும் டிரிபோலி டீனியா—டூனிசியா— சஹாரா எல் லைகளைச் சரிசெய்து கொடுப்பதாக வாக்களித்தது. இதில் ஒன்றும் பிர மாதமில்லை. இத்தாலி லிபிய எல் லையில் சாத் ஏரிக் கரையின் மீது கொண்டாடிய உரிமை நிராகரிக்கப் பட்டது.

யுத்த நஷ்டஈடாக இத்தாலியின் பங்கும் கிடைத்தது. பியூம் பிரச்சினையில் தான் நல்ல லாபத்தோடு இத்தாலியர் காரியத்தை முடித்துக் கொண்டார்கள்.

பியூம் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்காக இத்தாலியில் வெகு மும்முரமான தேசியப் பிரசாரம் நடந்தது. 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகை பியூம் ஆக்ரமிப்புக்காகப் பண வசூல் செய்ய ஆரம்பித்தது. தேசிய ஸ்தாபனங்கள் ஆங்காங்கு முளைத்தன. இத்தாலிய சர்க்காரின் ஏகாதிபத்திய ஆசைகளெல்லாம், மேடைப் பிரசங்கத்தோடும், துணிவும் தெம்புமற்ற ராஜதந்திர சம்பாஷணைகளோடும் முடிவுபெற்றன. ஏனென்றால் சர்க்காரின் வாழ்வே தேர்தல் என்ற தற்காலிகப் பொதுஜன உற்சாகங்களின் போக்கைப் பொறுத்ததாக இருந்தது. இத்தாலிய சர்க்கார் முதலில் சட்டத்தைத் தன் சார்பில் ஆக்கிக் கொள்வதற்காக, சமாதான உடன்படிக்கை, ரகசிய லண்டன் உடன்படிக்கை இவற்றின் ஷரத்துக்கள் பிரகாரம் ஆங்காங்கு முதலில் தன் படைகளை நிறுத்தினாலும், புதிதாக முளைத்த யூகோஸ்லேவிய அரசின் மனுப் பிரகாரம் இத்தாலிய ராணுவத்திற்குப் பதிலாக நேசக் கட்சியின் படைகள் அவ்விடங்களில் நிறுத்தப்பட்டன. இதன் விளைவாக முக்கியமாக பியூமில் பிரெஞ்சுத் துருப்புக்களும் இத்தாலியப் படைகளும் மோதிக்கொண்டன. நெருக்கடியான நிலை. 1919-ம் வருஷம் மே மாதம், வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் முஸொலீனி பியூம் நகருக்கு வந்து டியாற்றோ வெர்டி என்ற விடத்தில் பின்வருமாறு பிரசங்கம் செய்தான்.

"இத்தாலி தனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய நன்மைகளை இழப்பதற்குக் காரணமான பிரான்ஸின் நம்பிக்கைத் துரோகத்தையும் வில்ஸனின் மோசமான தீர்க்க தரிசனத்தையும், ஆங்கிலோ - ஸாக்ஸன், கிரேக்க அரசுகளின் ஏகாதிபத்திய ஆசைகளையும் நான் கண்டிக்கிறேன். மத்தியதரைக் - கடலிலிருந்து இந்த அந்நியர்களை விரட்டவேண்டும். முதன் முதலில் இந்த இங்கிலீஷ்காரர்களை விரட்டவேண்டும். இத்தாலியின் புராதனக் காலனியும், களஞ்சியமுமான எகிப்து தேசத்தின் கிளர்ச்சியை நாம் ஆதரிக்க வேண்டும். அத் தேசத்தில் இரண்டு லக்ஷம் இத்தாலியர்களிருக்கிறார்கள். மால்டாவில் உள்ள இத்தாலியர்கள் அதை இத்தாலியுடன் சேர்க்கவேண்டுமென்று இயக்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். பிரான்ஸைப் பொறுத்த வரை அது தன் மத்தியரைக் கடல் ஏகாதிபத்தியத்தை, அதாவது காலனிகளை இழக்கவேண்டும். பியூமின் விதிதான் என்ன? அந்தப் பிரச்சனை தீர்ந்துவிட்டது. இத்தாலி நிமிர்ந்து நின்ற மாதிரி பியூமும் தன் பிரச்சனைகளைத் தானே தீர்த்துக்கொள்ள வேண்டும். இத்தாலிய மக்களின் புனிதமான அங்கோரத்தின் முன் பாரிஸில் ராசதந்திரம் பேசிக் கொண்டிருக்கும் நான்கு கிழட்டு முட்டாள்களின் தீர்ப்புக்கள் எதிர்த்து நிற்க முடியுமா?

"அன்று 1915-ம் ஆண்டு இத்தாலி 'யுத்தம் அல்லது குடியாட்சி!' என்ற கோஷத்துடன் போருக்கு இறங்கியது. இன்று 'பியூம் அல்லது மரணம்!' என்று தேசம் கோஷிக்கிறது."

இப்பிரசங்கம் அங்குள்ள தேசியவாதிகளுக்கு உன்மத்த மூட்டியது. அன்று மாலை நகரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தொண்டர் படை திரட்டப்பட்டது. இந்தப் படைகளுக்குப் பயிற்சியளித்தது. சட்டப் பிரகாரம் ஏற்கனவே இத்தாலிய சர்க்கார் நிறுவியிருந்த ராணுவம், நேசக்கட்சித் துருப்புக்கள் இவற்றின் நிலைமையைத் திரிசங்கு சொர்க்கமாக்கியது. நறிகெட்டு ஓடும் இத்தாலிய சமூகத்தில் 'பியூம் அல்லது மரணம்!' என்ற ஒரே கூக்குரல்.

இத்தாலிய பாரதி என்று சொல்லத்தக்க தேசிய வீரக்கவிஞன் கபிரியேல் டி அனன்ஸியோ புகழின் முன்னணிக்கு வந்துவிட்டான். கபிரியேல் பூர்வத்தில் இத்தாலியின் தேசிய இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு, போர்முனைகளில் வீரங் காட்டியவன். மின்வெட்டுப் போன்ற பேச்சும் கவியும் அவனை இயற்கையாக இந்த அசாதாரண முயற்சிக்குத் தலைமை ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தின. அவன் ரோமிலிருந்து டோகியோவிற்கு விமானத்தில் பறந்து செல்ல எண்ணிக் கொண்டிருந்தான். இதில் தலைமை வகிப்பதற்காக அதை நிறுத்திக் கொண்டான். டிரிஸ்டி என்ற துறைமுகத்திற்கருகிலுள்ள ரோன்சியில் தன் சகாக்களை ஒரு படையாகத் திரட்டினான். படை பெருக ஆரம்பித்தது. 'போபோலோ டி' இத்தாலியா'வின் பணமும் முஸொலீனியின் கறுப்புச் சட்டைத் தொண்டர்களும் படைக்குத் துணை.

அக்டோபர் மீ 9உ பிளாரன்ஸில் நடந்த பேஸிஸ்ட் கூட்டத்தில் முஸொலீனி பியூம் பிரச்சினையைப் பற்றிப் பின்வருமாறு பிரசங்கம் செய்தான்:

"உங்கள் முன் விஸ்தாரமாகப் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் இப்போதுதான் பியூமிலிருந்து வந்தேன். அங்கு டி அனன்ஸியோவைச் சந்தித்துப் பேசினேன்.

"மகாஜனங்களே, உங்களைக் கடவுளர் என்று நான் புகழ வரவில்லை. உங்கள் மீது அன்பு இருக்கத்தான் செய்கிறது. உங்கள் மனமும் உடலும் அழுக்கேறியிருக்கிறது. அதை நீங்கள் சுத்தம் செய்ய வேண்டும். நீங்கள் அறிவிலிகள். அதனால் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். காய்ப்பு ஏறிய கைகள் வேலை செய்வதற்கு உபயோகமாயிருக்கலாம். ஆனால் ராஜ்யத்தை நடத்த அவைமட்டுமிருந்தால், ஒருவனுக்குத் திறமை ஏற்பட்டுவிடாது. நீங்கள் 24 மணிநேரத்திற்குள் புரட்சி நடத்திவிடலாம். ஆனால் அதே நேரத்தில் ஒரு புதிய சமூகத்தை, அதாவது உலகக்கட்டுக் கோப்பிற்குள் அமைந்த தேசமக்களை, உங்களால் சிருஷ்டிக்க முடியாது. ஆகையால் நீங்கள் எங்களைப் பூர்ஷுவாக்களின் காவலாட்கள் என்று தப்பிதமாக நினைத்துக்

கொள்ளகூடாது. இப்பொழுதுள்ள பூர்ஷுவாக்கள் யாவரும் மகா தேவ லமானவர்கள். மோசடிக்காரர்கள். இவர்கள் தங்களைத் தாங்களேதான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நாங்கள் அவர்களைக் காப்பாற்றப் போவதில்லை.

"நாங்கள் தேசத்தைப் பாது காப்போம்: அதாவது, தேசமக்கள் யாவரையும் பாதுகாப்போம். மக்க ளின் லௌகிகப் பொருளாதார நலத்தையும், அவர்களுடைய ஒழுக் கத்தையும் வளர்க்க வேலை செய் வோம். இந்தக் கொள்கையை வைத்து இப்போது ஒற்றுமையற் றுத் தவிக்கும் மனிதக் கும்பலை ஒரு சக்தி வாய்ந்த தேசமாக்க முடி யும் என்று நான் நம்புகிறேன்."

*1919*-ம் ஆண்டு செப்டம்பர் மீ 12உ, டி அனன்ஸியோ தன் படை யுடன் சென்று நகரத்தைக் கைப் பற்றினான். அவனது படையில் நடுத் தர வகுப்புக் குடும்பங்களின் வாலி பப் பிரதிநிதிகள், தேசீய உணர்ச்சி 'பிடித்த' மாணவர்கள், வேலையில் அதிருப்தி கொண்ட குமாஸ்தாக் கள், வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த பட்டினிப் பட்டா ளம் - இத்தகைய கும்பல் உண்டு. கவிராயர் பந்தாவாக நகரத்திற் குள் பிரவேசித்தார். ஒரு தேசீயக் கௌன்சில் அமைக்கப்பட்டது. அமைப்பு விஸ்தாரம் யாவும் நாட காலங்கார படாடோபங்களோடு! பொம்மை விளையாட்டுக்கு நிஜமான வெடிகுண்டுகளும் தோட்டாக்களும் உபயோகமானதுதான் விசித்திரம்! பியூம் நகருக்குத் தற்காலிக அரசி யலமைப்பை வகுத்துக் கொடுத்த பி அம்பிரிஸ் அன்று கட்சியிலிருந்து துரத்தப்பட்டு அந்நிய நாட்டில் தவி யாய்த் தவித்து உயிர்விட்டான். 'போபோலோ டி' இத்தாலியா' வில் வசூலான பணத்தையெல்லாம் இத் தொண்டர்படை அங்கத்தினர் கள் சாப்பிட்டு ஏப்பம் விட்டார்கள்.

நகரத்துக்குள் பிரவேசித்த காபிரியேல் தனது வசைமொழி நிபுணத்துவத்தை விஸ்தாரமாகக் காண்பிக்க ஆரம்பித்தான். அவன் வெள்ளைக்காரருக்குத் தன் வசையில் தனி ஸ்தானம் கொடுத்திருக்கிறான். அது வருமாறு;

"இன்று பியூம் நகரை யாரும் தோற்கடிக்க முடியாது. அன்றும் அப்படித்தான்; இன்றும் அப்படியே. அதன் இடிந்த மதில்களின் கீழ் நாம் ஒருவேளை விழுந்து சாகலாம். ஆனால் அந்தச் சிதைவிலிருந்து எழும் ஓர் அற்புதச் சக்தியின் பலத்திற்கு யாராலும் எல்லை வகுக்க முடியுமா? அயர்லாந்தின் ஸின்பீனர்கள் முதல் எகிப்தின் சிவப்புக் கொடி இயக்கத் தினர் வரை, நிராயுதபாணிகளான தேசங்களை நசுக்குபவர்களையும்' பச்சை மாமிசத்தைத் தின்கிறவர் களையும் எதிர்த்துக் காட்டுத் தீ போல ஒரே புரட்சி ஓங்கி நிமிரும். பாரசீகத்தையும், மெஸபொடேமி யாவையும், புதிய அரேபியாவையும்' ஆப்பிரிக்காவில் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டும், இன்னும் பசி ஓயாத ஏகாதிபத்திய விருப் பினால் தனது விமானக் கொலைகாரர் களை நம்மீது அனுப்பி, எகிப்தில் அன்று வெட்கமில்லாமல் கொன்று குவித்ததுபோல், நம்மையும் இன்று கொன்று குவிக்கட்டும்!"

இம்மாதிரியாகத் தனது வாக்கு வன்மை என்ற வசையால் மக்களின் மனதைக் கவர்ச்சித்துக் கொண்டிருந்தான்.

இத்தாலியப் பிரதிநிதித்துவ சட் டசபையில், இச்சம்பவத்தைப் பற் றிப் பிரதம மந்திரி ஸினோர் நிட்டி, "முதல் முறையாக ராணுவத் தில் ராஜத்துவேஷம் ஆரம்பித்துவிட்டது!" என்று தமது நிர்வாக பலவீனத்தைக் கோடு போட்டுக் காண்பித்துக் கொண் டார்.

"இம்மாதிரிச் சம்பவங்கள்தான் நீர் பயந்து நடுங்கிக்கொண்டிருக் கும் போல்ஷிவிஸத்திற்குக் கதவைத் திறந்துகொண்டிருக்கிறது!" என்று எதிர்க் கட்சியில் இருந்த அபேத வாதி பிலிப்பினோ தூராட்டி ஒத்துப் பாடினான்.

பேஸிஸ்ட் கொள்கையைக் கிரி யாம்சையில் பரிசோதித்தது இது தான் முதல் தடவை. இதில்தான் முதன் முதலாக முதலாளி, நிலச்சுவான்தார் வகுப்புக்கள் பார் லிமெண்டுக்கு எதிராகப் போராட ஆரம்பித்தன.

இன்னும் பேஸிஸ்ட் கட்சியினு டைய சம்பிரதாயச் சின்னங்கள் யாவும் டி' அனன்ஸியோ வகுத் ததுவேயே. அதாவது, அவன்தன் தொண்டர் படைக்கு கொடுத்ததை யெல்லாம் பேஸிஸ்ட் கட்சியின் சின்னங்களாயின. முஸோலினியின் புயல்-படைகள் அதுவரை கறுப்புத் துணிகளைச்சிறு துண்டுகளாகக் கத் தரித்துக் காலரில் வைத்துக்கொண்டு வந்தன. ஒவ்வொரு தளத்திற்கும் ஒவ்வொருவிதமான வர்ணம் இடை யில் இருக்கும். இவற்றிற்குக் கறுப் புக்கனல்கள்என்றுபெயர். அர்த்திப் படையின்மண்டையோட்டுச்சின்னம் பேஸிஸ்ட் கட்சியின்சின்னமாயிற்று. அடுத்தபடியாகக் கழுத்தில் கறுப் புத் துண்டுகளைப் பட்டி மாதிரிக் கட்டிக்கொள்வது சம்பிரதாயமா யிற்று. முடிவாகக் கறுப்புத்துண்டு கறுப்புச் சட்டை யாயிற்று. இது தான் கறுப்புச்சட்டை (பேஸிஸ்ட் யுனிபாரம்) வளர்ந்த விதம்.

இந்தச்சமயத்தில்தான் முஸோ லீனிக்குத் தேர்தலில் தோல்வி. தேர் தல் முடிந்து இரண்டாவது நாள். பேனிட்டோ பத்திரிகாலயத்தில் தன் அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான். பக்கத்தில் மார்க கரெட்டா சர்பாட்டி இருக்கிறாள். எங்கு பார்த்தாலும் போலீஸார் சோதனையிட்டு ஆட்களை கைது செய் து வருகின்றனர். முஸோலினியின் சகாக்கள் பலர் அவனைத் தலைமறை வாக ஓடிப்போகும்படி ஆலோசனை சொல்லுகிறார்கள். "நான் எங்கிருக் கிறேன் என்பது எனக்குத் தெரியும் வேண்டுமானால் அவர்கள் வந்து பிடித்துக்கொண்டு போகட்டும். நான் ஓடிப்போக மாட்டேன்' என்று சொல்லிவிட்டான். திடீ ரென்று போலீஸ் கமிஷனர் உள்ளே பிரவேசித்தார். சர்க்கார். உத்தரவு ஒன்றை அவன் கையில் கொடுத் தார். அதைவிட்டு, பக்கத்திலிருந்த ஸ்ரீமதி சர்பாட்டியிடம், "என்னைக் கைது செய்துவிட்டார்கள். நான் போய் வருகிறேன்!' என்று சொன் னார்.

"இத்தாலியைக் காப்பாற்றியவனை இப்படியா கடத்துவது?" என்று பத்திரிகையின் பிரதம நிருபர் அங்கலாய்த்தார்.

பேஸிஸ்ட் காரியாலயங்கள் சோதனையிடப்பட்டன. அதில் பலர் கைது செய்யப்பட்டனர். கவிஞன் மார்ட்டினெட்டியும் அவர்களில் ஒருவன். பியூம் சம்பவத்தில் கலந்து கொண்டதற்காகவும், ராஜாங்கத்தின் அமைதிக்குப் பங்கம் வரும்படியாக ஆயுதந் தாங்கிச் சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டான்.

மறுநாள்...

**இத்தாலியைப் பாதுகாத்ததற்காக பெனிட்டோ முஸொலீனி கைது! சிறையில் தள்ளப்பட்டார்!!**

இவ்வாறு படாடோபமான தலைப்புக்களுடன் 'போபோலோ டி' இத்தாலியா' செய்தியைப் பிரமாதப்படுத்தியது. பிரதம மந்திரி நிட்டிக்கு நெஞ்சில் தென்பில்லாததினால், மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது அதிரடித்துப் போனான். 24 மணி நேரத்திற்கப்புறம் முஸொலீனிக்கு விடுதலை கிடைத்தது. அப்பொழுதுதான் முஸொலீனி மோட்டார் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வாங்கிக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். அந்தக் காலத்தில்தான் விமானம் ஏறப் பயிற்சி பெற்று, 'பைலட்' லைசென்ஸ் பெற்றது.

பியூம் ஆதிக்கம் பதினாறு மாத வாழ்வே. அதாவது 1919- செப்டம்பரிலிருந்து 1920-ம் வருஷம் கிறிஸ்மஸ் வரை. அதற்குள் இத்தாலிய சர்க்காரில் மாறுதல் ஏற்பட்டு, நிட்டிபோய், கியோலிட்டி வந்துவிட்டான். நிட்டியின் உள்நாட்டுக் கொள்கையும், சமாதானக் கொள்கையும் அவனது ஆட்சிக்கு உலை வைத்தன. அவனை அடித்துச் சென்ற தேர்தல் வெள்ளம், அதே மூச்சில் கியோலிட்டியைச் சபையில் கொண்டுவந்து ஒதுக்கியது. அவனும், அவன் மந்திரி சபையில் அந்நிய நாட்டு மந்திரியான கவுண்ட் ஸ்போர்ட்ஜாவும், 1920- ம் வருஷம் நவம்பர் 12- ந்தேதி யூகோஸ்லேவியாவிடம் உடன்படிக்கை செய்து கொண்டார்கள் அதன்படி பியூம் ஒரு தனி இத்தாலிய நாடாயிற்று. ஜெனரல் கவிக்ளியா தலைமையில் அனுப்பப்பட்ட கப்பல்படை, 1920-ம் ஆண்டு கிறிஸ்மஸ் இரவன்று பியூம் நகரை முற்றுகையிட்டது. டி' அனன்ஸியோ அடிபணிந்தான். ஏனென்றால், அவன் கட்சியிலிருந்த இத்தாலிய சர்க்கார் ராணுவம் கவிக்ளியா படையுடன் சேர்ந்துவிட்டது. அவன், நகரத்தைப் படைகளின் வசம் ஒப்புவித்துவிட்டு, வெளியேறுவதற்குத் தடை எதும் செய்யப்படவில்லை.

"இறந்த என் சகாக்களையும் எனது வருத்தத்தையும், எனது வெற்றியையும் உங்கள் வசம் ஒப்படைக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, தான் ஆக்ரமித்துக்கொண்ட அதிகாரத்தைப் பிரதம மாஜிஸ்திரேட் முன்னிலையில் எதிரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு, அவன் வெளியேறினான்.

மான்டெனவேஸோ, இளவரசர் என்ற பட்டம் பெற்று, கார்டா ஏரிக் கரையிலுள்ள விசித்திர மாளிகையில் சமீபகாலம் வரை வாழ்ந்து வந்தான். சமீபத்தில் அவனது மரணத்தை இத்தாலியரும் முஸொலீனியும் படாடோபப்படுத்திக் கொண்டாடினர்.

## கணவன் மனைவி ★ ★ ★

அமெரிக்காவில் ஆறு குழந்தைகளைப் பெற்ற தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பி அன்புடன் வாழ்க்கை நடாத்தி வந்தார்கள். 'இலட்சியத் தம்பதிகள்' என்று ஊர் முழுவதும் அவர்களைப் பற்றியே பேசி வந்தது. 45 வயது நிரம்பிய அந்தப் பெண்ணை ஒரு மனோதத்துவ நிபுணர் பேட்டி காண வந்தார். "இன்னும் அரைமணி நேரத்தில் என கணவர் வீட்டிற்குத் திரும்பி வரப்போகிறார். அவரை வரவேற்க முதலில் என்னை அலங்கரித்துக் கொண்டு, அவருக்குத் தேவையானவைகளைச் செய்து முடிக்க வேண்டும் உங்களோடு பேச எனக்கு இப்போது நேரமில்லை. மீண்டும் இன்னொரு முறை வாருங்கள்" என்று கூறி அவரை அனுப்பி விட்டாள். அவளைப் பேட்டி காணாமலேயே அவளுடைய மண வாழ்க்கை ஏன் அமைதியாகவும் இன்பமாகவும் இருக்கிறது என்பதை அந்த மனோதத்துவ நிபுணர் கண்டு கொண்டார். இப்படிப்பட்ட மனைவியைக் கொண்ட கணவன் எப்போது அலுவலகம் முடியும் என்று காத்திருந்து, அலுவலகம் முடிந்ததும் நேராக வீட்டிற்கு ஓடி வருவான். மனைவி கணவனுக்காக வாழ ஆரம்பிக்கும் போது, கணவனும் மனைவியை மதித்து அவள் சொற்படி கேட்டு நடப்பான்.

● ● ● 'மனதில் மறைந்திருக்கும் சக்தி' என்ற புத்தகத்திலிருந்து

— சு. பத்மநாதன்

# ஈங்கோய் எழுபதில் ஒரு காட்சி

பதினோராந் திருமுறையில் பத்துப் பிரபந்தங்கள் தந்தவர் நக்கீரர். நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென்று வாதிட்ட நக்கீரதேவரின் இன்னோர் பாசுரம் கோடிப் பிரசாதம். எழுபது பாடல்களைக் கொண்ட ஈங்கோய் எழுபதில் பதின் மூன்று பாடல்கள் இறந்து போயின. 48 ஆம் பாடலில் தேன் மருவும் பூஞ்சுனைக் கட்டிக்குச் செமு - என்னுமடி மாத்திரம் கிடைத்திருக்கிறது. "எழிலார்சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய் மலை" எனச் சம்பந்தரும், "ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்" என வாதவூரரும் போற்றிப்புகழும் இத்தலம் இன்று திருவெங்கிநாதர் மலையென அழைக்கப்படும். காவிரிக்கு வடகரையில் முசிறிக்கருகில் ஈங்கோய் சிவஸ்தலம் அமைந்துள்ளது. எந்த மரத்திலும் தேனடை தொங்குவதனால் ஈங்கோய் எனப் பெயர் வந்தது என்பர். இயற்கை எழில் கொஞ்சும் ஈங்கோயின் கவின் பெறு வனப்பெல்லாம் பாடல்களில் பளிச்சிடுகின்றன. இதோ ஒரு பாசுரம்:

"எய்யத் தொடுத்தோன் குறத்தி நோக்கேற்ற
தெனக்
கையிற் கணை களைந்து கன்னிமான் - பையப்போ
வென் கின்ற பாவனை செயீங்கோயே தூங்
கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு.

வேடனொருவன் வேட்டை மேற்சென்று, அலைந்து களைத்த நிலையில், எதிர்பாராமற் புதரொன்றில் மானொன்றைக் கண்டான். மிகவும் மகிழ்ச்சியுற்றான். அக்கன்னிமானும் பகைவர் யாராவது வருகிறார்களா என்று மருண்டகண்ணோடு புறப்பட்டது. ஆயினது சினைமான் அதன் கண்கள் தன் காதலியின் கண்கள் போன்றிருந்ததால் வேட்டையாடலை விட்டு அம்பையும் கை நெகிழ்த்தி: கன்னிமானே நீ கவலையின்றி, பயப்படாமல் போ என்ற பாவனையில் வேடன் மேலே செல்லும் அழகான காட்சி இப்பாடலிலே ஓவியமாக் கப்பட்டிருக்கிறது.

வெற்பு மலை, சிலம்பு, குன்று, வரை, பொருப்பு என்னும் பதங்கள் மாறி மாறிப் பாடலின் முடிபில் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. வெண்பாவால் இழைக்கப்பட்ட இவ் அந்தாதியில் சிறந்த சுவைமிக்க காட்சிகள் சொல்லோவியமாய்த் தீட்டப்பட்டுள்ளன. ஆண்யானை பெண்யானைக்கு சந்தன மரத்தின் பசுந் தழையைத் தேனில் தோய்த்தும் கொடுக்கும் காட்சி எவர் நெஞ்சையும் அள்ளும் பாவம் நிறைந்தது.

"சந்தனப்பூம்பைந்தழையைச் செந்தேனிற்
றோய்த்தியானை
மந்தண் மடப்பிடியின் வாய்க் கொடுப்ப
-வந்ததன்
கண்களிக்கத் தான் கலிக்கு மீங்கோயே தேங்
காதே
விண் களிக்க நஞ்சுண்டான் வெற்பு"

—முருகவே—

# நெகிழ வைக்கும் நெப்போலியன்!

தன் வெற்றிகளுக்கெல்லாம் காரணம் தனது கெட்டிக்காரத்தனம் மட்டுமல்ல; படை வீரர்களும் தான் என்பதை நெப்போலியன் நன்கு அறிந்து வைத்திருந்தான்.

படை வீரர்களில் யார் யார் நல்ல சாதனைகள் செய்தவர்கள், யார் யார் சாதனைகள் செய்தும் தன்னை மேலிடத்தில் இருந்து பாராட்டவில்லை என்று பொருமிக் கொண்டிருப்பவர்கள் என்பதையெல்லாம் உரியபடைத் தலைவரிடம் கேட்டு வைத்துக் கொள்ளுவான். குறிப்பிட்ட வீரனின் சாதனை மட்டுமல்ல, அவனது குடும்ப விவகாரங்கள் என்ன, சூழ்நிலை என்ன எல்லாவற்றையும் கேட்டுக் கொள்வான்.

அணிவகுப்பைப் பார்வையிடும் போதுகூடவே வரும் தளபதி குறிப்பிட்ட வீரனருகே வரும் போது நெப்போலியனுக்கு ஒரு சமிக்ஞை கொடுப்பான். உடனே நெப்போலியன். "ஓ! நீ சார்லி அல்லவா. நீ இன்னென்ன சாதனைகள் செய்திருக்கிறாயல்லவா?" உன் அப்பா எட்மண்ட் சுகமாக இருக்கிறாரா? என்பது போல் அவனை அன்புடன் விசாரித்து, அவனுக்குரிய மெடலையும் அணிவிப்பான்.

தன்னைப்பற்றித் தலைவர் எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாரே என்று அப்போர் வீரன் மட்டுமல்ல அருகிலுள்ள மற்ற வீரர்களுக்கும் நெப்போலியன் மீது அபார மதிப்பு ஏற்படும். விசுவாசமாக உழைப்பார்கள்.

அ: கொலின்ஸ் டொனல்ட்

அரிய வாய்ப்பு

ஈழமுரசு அமிர்த கங்கை செய்திக்கதிர்

இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

வெளியீட்டாளர்கள் வழங்கும்

# பரிசுப் பொதி

★ வித்தியானந்தம்

பேராசிரியர் சு. வித்தியாணந்தனின்
கட்டுரைத் தொகுப்பு

★ ஒளி சிறந்த நாட்டிலே

சாந்தனின் ருஷ்சிய பிரயாணக் கட்டுரை

★ ஈழமுரசு இரண்டாவது ஆண்டுமலர்

★ யாழ்ப்பாண யாத்திரை

பக்வன் ஆர் சிங்

★ அமிர்தகங்கை

இதழ் 1 முதல் 7 வரையும்

ஆகியவை சேர்ந்த பரிசுப் பொதியை
இன்றே ரூபா 95/- செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் மார்கழி வரையிலான அமிர்தகங்கைப்
பிரதிகளும் இலவசமாக அனுப்பப்படும்

விபரங்கட்கு :

சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்
140, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 22437

உங்கள் ஆதரவுக் கரங்கள்
'மில்க் வைற்' தயாரிப்புகளுக்கு நீள,
அது
நாட்டின் நற்பணிகளுக்கு உதவுகிறது.




மில்க் வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச்
சேகரித்துக் கொடுத்து
பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.